කර්මාන්ත අමාත්‍යාංශය

கைத்தொழில் அமைச்சு

# Ministry of Industries



ප්‍රගති වාර්තාව

முன்னேற்ற அறிக்கை

# Progress Report 2022

# முன்னேற்ற அறிக்கை - 2022

இந்த அறிக்கை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

# தலைமைத்துவமும் வழிகாட்டலும்



**கௌரவ ரமேஷ் பத்திரண**

**அமைச்சர், கைத்தொழில் அமைச்சு**



**கௌரவ பிரசன்ன ரணவீர**

இராஜாங்க அமைச்சர், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தி



கௌரவ சாமர சம்பத் தசநாயக்க

இராஜாங்க அமைச்சர், ஆரம்ப கைத்தொழில் பிரிவு



ஜே.எம்.திலகா ஜயசுந்தர

செயலாளர், கைத்தொழில் அமைச்சு

## தொலைநோக்கு

“உலகளாவில் போட்டித்தன்மையுள்ள, நிலைபேறான மற்றும் தனித்தன்மையுள்ள இலங்கை உற்பத்தி கைத்தொழிற்துறை.”

## செயற்பணி

" பன்முகப்படுத்தப்பட்ட, பெறுமதி சேர்க்கப்பட்ட மற்றும் புத்தாக்க தயாரிப்புகள், பசுமை நடைமுறைகள், சிறந்த சந்தை அணுகல் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய தொழிற்துறை மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக கூர்மையான தொழில்நுட்பம், அறிவு மற்றும் புதுமையான சிந்தனை கொண்டமைந்த உகந்த சூழலை உருவாக்குதல்."

# நோக்கங்கள்

- உற்பத்தித் துறையில் உள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் வினைத்திறனான சேவையை வழங்குவதற்காக பயனுள்ள கட்டமைப்பை உருவாக்குதல்.

- உற்பத்தித் துறையில் தொழில்நுட்ப பிரயோகத்தின் பயன்பாடு, பெறுமதி சேர்த்தல், பண்ட பன்முகப்படுத்தல், உள்ளூர் வளங்களின் பயன்பாடு மற்றும் நிலைபேற்றை மேம்படுத்தல்.

- பரந்தளவான கைத்தொழில் அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கு பிராந்திய கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் விரிவான முதலீட்டு சந்தர்ப்பங்களை ஊக்குவித்தல்.

- உற்பத்தி கைத்தொழிற்துறையில் உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தை அணுகலை மேம்படுத்தல்.

## அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் பிரிவுகள்

- கொள்கை அபிவிருத்திப் பிரிவு
- கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு
- அபிவிருத்திப் பிரிவு **1**
- அபிவிருத்திப் பிரிவு **2**
- அபிவிருத்திப் பிரிவு **3**
- கைத்தொழில் பதிவுப் பிரிவு
- கருத்திட்ட முகாமைத்துவ அலகு
- அரச தொழில்முயற்சி மற்றும் மறுசீரமைப்புப்பிரிவு
- பத்திக். கைத்தறிப் புடவை மற்றும் உள்ளூர் ஆடைத் தயாரிப்புப்பிரிவு
- இரத்தினக்கல் மற்றும் ஆபரணப்பிரிவு
- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திப்பிரிவு

## அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களும், அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்

| |
|---|
| • கைத்தொழில் அபிவிருத்திச் சபை **(IDB)** |
| • தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை **(NEDA)** |
| • கஹட்டகஹ கிரபைட் லங்கா கம்பனி லிமிடட் **(KGLL)** |
| • லங்கா பீங்கான் கூட்டுத்தாபனம் (செங்கல் மற்றும் ஓடுகள் பிரிவு) **(CCC)** |
| • பரந்தன் இரசாயனக் கம்பனி லிமிடட் **(PCCL)** |
| • இலங்கை கனிய மணல் கம்பனி லிமிடட் **(LMSL)** |
| • தேசிய உப்புக் கம்பனி லிமிடட் **(NSL)** |
| • வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் **(NPC)** |
| • வரையறுக்கப்பட்ட பி.சீ.சீ.நிறுவனம் **(BCC)** |
| • இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் **(SLCC)** |
| • லங்கா சீமெந்து பிஎல்சி கம்பனி |
| ❖ லங்கா அசோக் லேலன்ட் லிமிடட் **(LAL)** |
| • லங்கா லேலன்ட் லிமிடட் **(LLL)** |
| • தேசிய வடிவமைப்பு மத்தியநிலையம் **(NDC)** |
| • புடவைத் திணைக்களம் **(DTI)** |
| • இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம; **(SLITA)** |
| • இலங்கை கைப்பணி கைத்தொழில் சபை (லக்சல) **(SLHB)** |
| • தேசிய வடிவமைப்பு பேரவை **(NCC)** |
| • லங்கா சலுசல (LSL) |
| • தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை **(NGJA)** |
| • இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் **(GJRTI)** |

# பொருளடக்கம்


| | |
|---|---|
| **முன்னுரை** | |
| கைத்தொழில் அமைச்சின் ஊடாக ஒப்புதல் அளிக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள் மற்றும் கொள்கைகள் | **1** |
| **பிரதான பிரிவுகள்** | |
| கொள்கை அபிவிருத்திப் பிரிவு | 11 |
| கைத்தொழில் அபிவிருத்திப்பிரிவு | 15 |
| அபிவிருத்திப் பிரிவு - I | 21 |
| அபிவிருத்திப் பிரிவு - II | 26 |
| அபிவிருத்திப் பிரிவு - III | 29 |
| கைத்தொழில் பதிவுப் பிரிவு | 33 |
| கருத்திட்ட முகாமைத்துவ அலகு | 36 |
| அரச தொழில்முயற்சி மற்றும் மறுசீரமைப்புப்பிரிவு | 39 |
| பத்திக். கைத்தறிப் புடவை மற்றும் உள்ளூர் ஆடை தயாரிப்புப்பிரிவு | 44 |
| இரத்தினக்கல் மற்றும் ஆபரணப் பிரிவு | 47 |
| சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு | 52 |
| **நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்** | |
| கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு (IDB) | 61 |
| தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை (NEDA) | 67 |
| பரந்தன் இரசாயனக் கம்பனி லிமிடட் (PCCL) | 75 |
| கஹட்டகஹ கிரபைட் லங்கா கம்பனி லிமிடட் (KGLL) | 80 |
| தேசிய உப்புக் கம்பனி லிமிடட் (NSL) | 84 |
| தேசிய கடதாசிக் கம்பனி லிமிடட் (NPCL) | 86 |

| | |
|---|---|
| இலங்கை கனிய மணல் கம்பனி லிமிடட் (LMSL) | 89 |
| இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் (CCC) | 92 |
| பீ.சீ.சீ லங்கா லிமிடட் (BCC) | 97 |
| இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் (SLCC) | 104 |
| லங்கா அசோக் லேலன்ட் லிமிடட் (LAL) | 107 |
| லங்கா லேலன்ட் கம்பனி லிமிடட் (LLL) | 109 |
| புடவைத் திணைக்களம் (DTI) | 111 |
| இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம (SLITA) | 115 |
| தேசிய வடிவமைப்பு மத்தியநிலையம் (NDC) | 118 |
| இலங்கை கைப்பணி கைத்தொழில் சபை (லக்சல) (SLHB) | 122 |
| தேசிய வடிவமைப்பு பேரவை (NCC) | 125 |
| லங்கா சலுசல (LSL) | 128 |
| தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை (NGJA) | 132 |
| இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (GJRTI) | 136 |
| **நிதியியல முன்னேற்றம்** | |
| கைத்தொழில் அமைச்சு | 141 |
| பத்திக். கைத்தறிப் புடவை மற்றும் உள்ளூர் ஆடை தயாரிப்புப்பிரிவு | 146 |
| இரத்தினக்கல் மற்றும் ஆபரணப் பிரிவு | 149 |
| சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு | 151 |

# முன்னுரை

சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கைச் சட்டகத்தினை நிஜமாக்குவதற்குக் கைத்தொழில் அமைச்சுக்கு பாரிய பொறுப்பு சாட்டப்பட்டுள்ளது. அமைச்சின் விடயப்பரப்புகளை முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி செய்வதன் ஊடாக தேசிய பொருளாதார அபிவிருத்திக்குக் கைத்தொழிற்துறையின் பங்களிப்பை உயர் மட்டத்தில் வழங்குதல் அமைச்சின் பிரதான எதிர்பார்ப்பாகும்.

நாட்டில் காணப்படும் நோய்ப்பரவல் நிலமை மற்றும் வெளிநாட்டு நாணயத்திற்கான பற்றக்குறை போன்ற தடைகள் எதிர்பட்ட போதிலும் கைத்தொழில் அபிவிருத்திக்காக விசேட நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் அவசியமான தலையீட்டின் ஊடாக உற்பத்திக் கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்கு பல்வேறு வழிகளில் பங்களிப்புச் செய்துள்ளது. இதற்காக அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் பாரிய செயற்பாடுகளை மேற்கொள்ளுகின்றன.

உற்பத்திக் கைத்தொழிலுக்காக உகந்த சட்ட மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இதன் போது கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையை உருவாக்குதல் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தியை மிகவும் வினைத்திறனாக்குவதற்குக் கைத்தொழில் சட்டத்தினைத் திருத்துதல் என்பன முக்கியமானவையாகும்.

அபிவிருத்தியை ஒரு சில பிரதேசத்தில் மட்டும் கேந்திரப்படுத்துவதை விடுத்து கைத்தொழில் அபிவிருத்தியை பிரதேச மட்டத்தில் விரிவாக்கம் செய்வதற்குப் பிரதேச மட்டத்தில் முதலீட்டினை ஊக்குவிப்பதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை அமைச்சு செயற்படுத்துகின்றது.

தேசிய கைத்தொழிற்துறையினரைப் பாதுகாத்தல், ஊக்குவித்தல் என்பவற்றுக்கு விசேட கவனத்தைச் செலுத்தி அவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான தலையீட்டின் ஊடாக நிலைபேறான கைத்தொழில் அபிவிருத்தியை அடைவதற்கு அவசியமான பங்களிப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

கனிய வளங்களின் பயன்பாட்டை மேம்படுத்துதல், பெறுமதி சேர்த்தலுடன் நட்டமடைந்துள்ள அரச தொழில்முயற்சிகளை இலாபத்தை பெறக்கூடியதும் மற்றும் வணிக ரீதியில் வெற்றியடைந்த நிறுவனங்களாகவும் பலப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் பல அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித்துறை தேசிய பொருளாதாரத்திற்கு வழங்கும் பங்களிப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கு அவசியமான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் பல அமைச்சின் ஊடாக செயற்படுத்தப்படுகின்றன.

# உள்ளூர் உற்பத்தித் கைத்தொழில் ஊக்குவிப்புக்காக செயற்படுத்தப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள்

## 1. உற்பத்தித் கைத்தொழிலுக்கு நிலைபேறான சூழலை கட்டியெழுப்பல்

### 1.1 கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையைத் தயாரித்தல்

கைத்தொழிற் துறைக்கு அவசியமான தேவையான உத்தரவாதத்தையும் வழிகாட்டுதலையும் வழங்கும் வகையிலான ஒரு சாதகமான வணிக சூழலை உருவாக்குவதன் மூலம் அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் தொழிற்துறையை உருவாக்குவதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை, கைத்தொழிற்துறையின் 4.0 நிலைக்கு உயர்த்தும் நோக்கத்துடன், கைத்தொழிற்துறை அபிவிருத்திக்கான தேசிய கொள்கையை தயாரிப்பதற்கான ஆரம்ப வரைவு ஏற்கனவே தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக அரச மற்றும் தனியார் துறை பங்குதாரர்களிடமிருந்து கருத்துகள் பெறப்பட்டன. அந்த் திருத்த வரைவுக்கான பொது மக்களின் கருத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இறுதி வரைவு அமைச்சரவையின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன், கீழ்வரும் பிரிவு உள்ளடக்கப்பட்டு கைத்தொழிற் கொள்கையை செயற்படுத்துவதற்கான உபாயமார்க்க செயற்பாட்டுத் திட்டத்தின் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது:

- உபாயமார்க்கம், நடைமுறைகள், காலசட்டகம், மற்றும் கொள்கையை செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்து குறுகிய கால மற்றும் நீண்ட கால பெறுபேறு மற்றும் தாக்கம், செயலாற்றுகைக் காட்டி பொறுப்பு என்பவற்றை உள்ளடக்கி செயற்பாட்டுத் திட்டம்.
- மதிப்பீடு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் பற்றிய முறைமை
- காலத்திற்குக் காலம் கொள்கையின் வெற்றியைப் பின்னூட்டல் செய்வதற்கான முறைகள்.

### 1.2 இலங்கை வாகனத் தயாரிப்பு, ஒன்றிணைக்கும் மற்றும் வாகன உதிரிப்பாகங்களை தயாரிப்பது தொடர்பான நியம செயற்பாட்டு நடைமுறை (SOP)

SOP என்பது உள்ளூரில் வாகனங்களை ஒருங்கிணைப்பதற்கான அனைத்து வழிகாட்டல்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகள் உள்ளடங்கலாக தேசிய பெறுமதி சேர் மெற்றிக்கை உள்ளடக்கி கைத்தொழில் அமைச்சின் கொள்கைப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட கைநூலாகும். மோட்டார் வாகன கைத்தொழிலை மேம்படுத்துவதற்கும் நாட்டினுள் புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் உள்ளூர் உதிரிப்பாகங்களை உள்ளடக்கி வாகனங்களை உள்ளூரில் ஒருங்கிணைப்பதை ஊக்குவிப்பதற்கும் கைத்தொழில் அமைச்சின் SOP ஊடாக பாரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வரையில் பதினான்கு (14) வாகன மாதிரிகள் உள்ளடங்கலாக நாற்பத்தி ஐந்து (45) வாகன மாதிரிகளுக்காக பதினெட்டு (18) நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், 2022இல் பதிவுசெய்யப்பட்ட புதிய நிறுவனங்களின் எண்ணிக்கை பத்தாகும் (10).

அதன்படி, 2022 ஜனவரியில் இருந்து செப்டெம்பர் 30 வரை மோட்டார் வாகனங்கள் 7,739 (1,957 நான்கு சக்கர வண்டிகள் மற்றும் 5,782 இரு சக்கர வண்டிகள்) ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. நாட்டினுள் நிலவும் பொருளாதார நிலை மற்றும் வாகன இறக்குமதியில் உள்ள கட்டுப்பாடுகள் என்பன நியம செயற்பாட்டு நடைமுறையின் ஊடாக இந்த நாட்டு மோட்டார் வாகன கைத்தொழில் மேம்பாட்டுக்கு புதிய கதவினைத் திறந்துள்ளது.

**1.3 உள்ளூர் மெல்லிய பலகை கைத்தொழிலைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமான செஸ் வரியை அறிமுகப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கையை மேற்கொள்ளல்**

பெறுமதி சேர்த்தலின்றி மெல்லிய பலகையாக (Veneer) இறக்குமதி செய்வதன் ஊடாக, உள்ளூர் மெல்லிய பலகை தயாரிப்புக்கு அவசியமான பிரதான மூலப்பொருளான இறப்பர் பலகை பற்றாக்குறை இருப்பதன் காரணமாக உள்ளூர் மெல்லிய பலகையின் விலை அதிகரித்துள்ளது. அதேபோல் தற்போது 27 கைத்தொழிலாளர்கள் உள்ளூர் மெல்லிய பலகை தயாரிப்பில் ஈடுபட்டிருப்பதுடன், இந்தக் கைத்தொழிலாளர்கள் மெல்லிய பலகைகளை தயாரிக்காது மெல்லிய தட்டைப் (Veneer) பலகைகளாக இறக்குமதி செய்வதற்கு முயற்சிப்பதனால் உள்ளூர் மெல்லிய பலகைக் கைத்தொழில் வீழ்ச்சியடைவதற்கான அபாயம் ஏற்படும் என அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனால், உள்ளூர் மெல்லிய பலகைக் கைத்தொழிலைப் பாதுகாப்பதற்கு எந்தவொரு கைத்தொழில் நிறுவனத்திற்கும் பெறுமதி சேர்ப்பு இல்லாமல், இறப்பர் பலகை தயாரித்து மெல்லிய பலகையாக இறக்குமதி (Veneer) செய்வதற்கு இலங்கை ஏற்றுமதி சபையுடன் ஒப்பந்தத்திற்கு வந்துள்ள நிறுவனங்களுக்குப் பொருத்தமான செஸ் வரியினையிடுவதற்கு முன்மொழிவினை மேற்கொள்வதற்கு கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**1.4 உள்ளூர் உற்பத்திக் கைத்தொழில் ஊக்குவிப்புக்கு ஆலோசனைக் குழுவை நியமித்தல்**

முன்னர் இருந்த கைத்தொழில் ஆலோசனைக் குழுவின் செயற்பாடுகள் மோசமான நிலையில் காணப்பட்டமையினால் உள்ளூர் கைத்தொழிலை வலுப்படுத்துவதற்கு மற்றும் ஊக்குவிப்பதற்குமான அவசியத்தின் காரணமாக கைத்தொழில் பிரிவுக்கு புதிய ஆலோசனைக் குழுக்கள் 20இனை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதுவரை பல பிரிவுகளுக்கு புதிய ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், உதாரணமாக ஆடை, புடவைகள் மற்றும் அது சார்ந்த கைத்தொழில், ஆபரணம் மற்றும் இரத்தினக்கல் சார்ந்த கைத்தொழில், உலோகம், சாயம், அச்சு, இயந்திர உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகக் கைத்தொழில், பால் மற்றும் பால் சார்ந்த கைத்தொழில் மற்றும் வர்ணப் பூச்சு மற்றும் அச்சுத்தொழில் சார்ந்த கைத்தொழில்களைக் குறிப்பிட முடியும்.

**1.5 இறக்குமதி வரையறைக்குள் உள்ளூர் உற்பத்திக் கைத்தொழிலுக்கு மூலப்பொருள் வழங்கலில் ஏற்பட்டுள்ள தடைகளை நீக்கல்**

நாட்டில் நிலவிய கோவிட் மற்றும் முடக்கல்கள் காரணமாக வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதியை நிலையாகப் பேணுவதற்குக் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக அரசினால் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது. இவ்வாறு வரையறுக்கப்பட்ட அனேக பொருட்கள், கைத்தொழிலாளர்களினால் மூலப் பொருட்களாக பயன்படுத்தப்படுவதனால், அவை நேரடியாக உள்ளூர்க் கைத்தொழிலில் பாதிப்பை ஏற்படுத்தியது. அந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அமைச்சு தலையிட்டதுடன் மூலப்பொருட்கள் தடையின்றி கைத்தொழிலாளர்களுக்குக் கிடைப்பதற்கு இயலுமான வகையில் இறக்குமதித் தடையை நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. அதன்படி, உலோக, தகரம் மற்றும் அழகுசாதனப் பொருட்களின் கைத்தொழில்கள் இதனூடாக பயன் பெற்றன.

**1.6 உலோகம் சார்நத கைத்தொழிற்சாலைகளில் இருந்து அகற்றப்படும் கழிவுகளை ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்தல்**

உள்ளூர் தயாரிப்புகளை ஊக்குவித்து புதிய கைத்தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு உள்ளூர் கைத்தொழிற்துறையினரை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் இரும்பு, செப்பு, அலுமினியம், வெள்ளை இரும்பு, காபன், அதிக காபன் இரும்பு, சீனச்சட்டி போன்ற உலோகங்களின் மிச்சமீதி உலோகங்களின் அலுமினியம் கட்டி மற்றும் நாகக் கட்டி மற்றும் செப்புக் கட்டி என்பவற்றின் ஏற்றமதி 09.07.2020ஆம் திகதி தொடக்கம் அமுலில் வரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளதனால், உள்ளூர் உற்பத்திக்கு அவசியமான உலோக வகைகள் நாட்டினுள்ளேயே கிடைக்கும் வகையில் அவசியமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதுவரை அமைச்சரவைத் தீர்மானத்தினால் நிறுத்தப்பட்டுள்ள உலோக வகைகள் தவிர்த்து ஏனைய உலோக கழிவுகளையும் ஏற்றுமதி செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. அதன்படி இதுவரை துருப்பிடிக்காத அலுமினியம் போன்ற மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் புதிய கைத்தொழில்துறையொன்று தொடர்பாக விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. அதேபோல் மேற்குறிப்பிட்ட உலோக மூலப்பொருட்களாக இறக்குமதி செய்யப்பட்டு தயாரிப்பு நிறுவனங்களினால் அகற்றப்படும் ஏற்றுமதியின் மூலம் அவர்களின் ஆகுசெலவைக் குறைத்துக்கொள்வதற்கு இயலுமென தயாரிப்பாளர்களின் வேண்டுகோள் கிடைத்துள்ளது.

**1.7 வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஊதுபத்தித் தயாரிப்புக்கு பயன்படுத்தப்பட்ட குச்சு மற்றும் மூலப் பொருட்களை உள்ளூரில் தயாரித்தல்.**

ஊதுபத்தித் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் விசேட மூங்கில் குச்சிகளின் தேவையை நாட்டினுள்ளேயே வழங்கும் நோக்கத்துடன், இந்தக் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விசேட மூங்கில் இருக்கும் பிரதேசத்தை அடையாளம் கண்டுகொள்ளல் மற்றும் அதனை பயிர்செய்யக்கூடிய இடங்களை கண்டறிந்து அதற்கு அவசியமான ஆலோசனைகள் வன பாதுகாப்பு திணைக்களம், விவசாய சேவைத் திணைக்களம் மற்றும் மகாவெலி அதிகாரசபைக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

இங்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் மொரட்டுவை பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆற்று ஓரத்தில் மூங்கில் வளர்ப்புக்குரிய இடங்கள் தொடர்பான அறிக்கை ட்ரோனர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வழங்கப்பட்டுள்ளது. உள்ளூரில் காணப்படும் மூங்கில் மரங்களின் எண்ணிக்கை, உள்ளூர் ஊதுபத்தி தயாரிப்புக்குப் போதுமானளவில் கிடைக்கும் வரை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் தற்போது இலங்கையினுள் கிடைக்கும் மூங்கில் மரங்களில் எந்த வகை ஊதுபத்தி உற்பத்திக்கு பயன்படுத்தப்பட முடியும் என்பது தொடர்பாக விசேட கற்கையை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை கோரப்பட்டுள்ளது.

**1.8 புடவைக் கைத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான தீர்வை நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளல்**

இலங்கைக்கு அந்நியச் செலவாணியைப் பெற்றுத்தரம் முக்கிய வழியாக ஆடைத்துறை விளங்குகின்றது. ஆடை தயாரிப்பாளர்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு, ஆடை தயாரிப்பில் பெறுமதி சேர்க்க தேவையான துணைப் பாகங்களாக பின்வரும் 17 வகையான பொருட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் தீர்வை நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. போட்டித்தன்மையுள்ள விலையில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள சந்தைகளுக்கு ஆடைகளை வழங்குதல் இதன் நோக்கமாகும்.

1. உலோக பொத்தான்
2. உலோக ரிவைஸ்
3. லெதர் பட்சஸ் டைப் 01 -
4. உலோக பட்ஜ்
5. பிளாஸ்டிக் பொத்தான்
6. கப்லிங்ஸ்
7. மெட்டல் ஸிப்பர்
8. நைலோன் ஸிபபர்
9. பித்தளை பின்
10. பித்தளை ஹுக் மற்றும் பார்
11. லெதர் பச் டைப் 02
12. பக்கல்
13. கொலர் அன்ட் கப்.'.
14. லெதர் பெல்ட்
15. பிளாஸ்டிக் கவர் சரம் தண்டு
16. பயன்பாடுகள்
17. சரிகை

## 2. வீழ்ச்சியடைந்துள்ள அரச தொழில்முயற்சிகளை மீண்டும் கட்டியெழுப்புதல் கனிய வளத்தை சிறந்த முறையில் பயன்படுத்தல் மற்றும் உள்ளூர் பெறுமதி சேர்த்தல்

### 2.1 எம்பிலிபிட்டிய கடதாசி தயாரிப்புத் தொழிற்சாலையின் தயாரிப்பு நடவடிக்கைகளை அரச மற்றும் தனியார் பங்குடமை முறைமையின் கீழ் மீளத்திறத்தல்

எம்பிலிபிட்டிய கடதாசி தொழிற்சாலையின் தயாரிப்பு நடவடிக்கைகளை அரச மற்றும் தனியார் பங்குடமை முறைமையின் கீழ் மீண்டும் ஆரம்பிப்பதற்கு உரிய ஒப்பந்தம் 09.03.2022ஆம் திகதி வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கம்பனி மற்றும் அதற்கான முதலீட்டு நிறுவனமான KSPA Embilipitiya Paper Mills (Pvt) Ltd. கைச்சாத்திடப்பட்டது. தொழிற்சாலையின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் மின்சார இணைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் தயாரிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. முதலீடு செய்யப்பட்ட தொகை ரூபா 3.5 பில்லியன் ஆகும். எதிர்பார்க்கப்படும் வருடாந்த தயாரிப்பு 74250 மெற்றிக் தொன் ஆகும்.

### 2.2 இலங்கை மகாவலி அதிகாரசபையிடம் உள்ள எம்பிலிபிட்டிய கடதாசி ஆலை அமைந்துள்ள காணியினை நீண்ட கால குத்தகை அடிப்படையில் வரையறுக்கப்பட்ட கடதாசி நிறுவனத்திற்கு சாட்டுதல் செய்தல்

எம்பிலிபிட்டிய கடதாசித் தொழிற்சாலை அமைந்துள்ள காணி (111 ஏக்கர் 02 ரூட் 3 பேர்ச்சஸ்) 13.10.2021ஆம் திகதி தொடக்கம் 30 ஆண்டுகளுக்கு வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கம்பனிக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் சாட்டப்படுவதற்குரிய குத்தகை ஒப்பந்தம் மகாவெலி

அதிகாரசபையினால் 08.0.2022ஆத் திகதி வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 2.3 குறிஞ்சாதீவு (ஆனையிறவு –வடக்கு) உப்பளத்தை அரச மற்றும் தனியார் பங்குடமை முறைமையின் கீழ் மீண்டும் ஆரம்பிக்கும் கருத்திட்டம்

இந்த கருத்திட்டத்திற்கான முழுமையான கருத்திட்ட முன்மொழிவு குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டு தேர்ந்தெடுப்பதற்கு விதப்புரை செய்யப்பட்ட முதலீட்டு நிறுவனம் தொடர்பான விபரங்கள்,

அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**2.4 கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட் நிறுவனத்தின் ஊடாக அகழ்தலின் ஊடாக கிடைக்கும் காரியத்தை அரச மற்றும் தனியார் பங்குடமை முறையின் கீழ் பெறுமதி சேர் கருத்திட்டத்தை செயற்படுத்தல்.**

கருத்திட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் கஹட்டகஹ சுரங்கத்தில் உள்ள காரிய ஒதுக்கு பற்றிய ஆய்வினை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதற்குரிய வரைபடத்தை புள்ளியிடும் முதலாம் கட்ட பூகோள ஆய்வு சுரங்க காரியாலயத்தினால் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், இரண்டாம் கட்டமான துழைத்தல் கட்டம் அந்த காரியாலயத்தின் கையிலுள்ள நிதியினைப் பயன்படுத்தி மூன்று மாதத்தினுள் நிறைவு செய்து அதற்குரிய அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு 13.09.2022ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டு, அதற்கமைவாக அமைச்சரவையினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**2.5 வரையறுக்கப்பட்ட கடதாசி நிறுவனத்திற்குச் சொந்தமான வாழைச்சேனை கடதாசி தயாரிப்பு நடவடிக்கைகளை பல்முகப்படுத்தல் கருத்திட்டமாக மீள ஆரம்பித்தல்**

வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையின் தயாரிப்பு நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி கம்பனியினால் 01.07.2020 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டு இந்த ஆலையின் மாதாந்த சராசரி தயாரிப்பு 100 மெற்றிக் தொன்னாக இருந்ததுடன், 2022ஆம் ஆண்டு இதன் சராசரி மாதாந்த தயாரிப்பு 117 மெற்றிக்தொன் ஆகும்.

**2.6 யூரியா உரத் தயாரிப்பு கருத்திட்டத்தை மேற்கொள்வதற்கு உரிய சாத்தியக்கூறு கற்கையை மேற்கொள்ளல்**

யூரியா தயாரிப்பினை மேற்கொள்வதற்கான இயலுமை பற்றி அறிந்துகொள்வதற்கு வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் இலங்கை நனோ டெக்னோலஜி (தனியார்) நிறுவனத்தினால் சாத்தியக்கூறு கற்கையை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. எனினும், இது தொடர்பாக முழுமையான கற்கையை மேற்கொள்ளுதல் பொருத்தமானது என நிதி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக அமைச்சரவைக்கு அறிவிப்பதற்கு முழுமையான சாத்தியக்கூறு அறிக்கைக்காக மதிப்பீட்டை தயாரித்து சமர்ப்பிக்குமாறு வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிகல்ஸ் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**2.7 காங்கேசன்துறை சீமெந்து கைத்தொழிற்சாலை வளாகத்தில் உள்ள பிரயோசனப்படுத்தப்படாத பண்டங்களை அகற்றி தொழிற்சாலை சுற்றுப்புறத்தை துப்பரவாக்கல்.**

இதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்படும் டென்டர் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்பன நியமிக்கப்பட்டுள்ளதுடன், இந்த வளாகத்தில் அகற்றுவதற்கு விதப்புரை செய்யப்பட்ட கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் கழிவு உலோகத் துண்டுகள் என்பனவற்றை அங்கீகரிக்கப்பட்ட டென்டர் முறைமையின் கீழ் அகற்றுவதற்கான அறிக்கையை தொழில்நுட்பக் குழு தயாரித்துள்ளது.

**2.8 பரந்தன் பழைய இரசாயனத் தொழிற்சாலை அமைந்துள்ள காணியை நீண்ட கால குத்தகை அடிப்படையில் வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிகல்ஸ் நிறுவனத்திற்கு சாட்டுதல் செய்தல்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் பழைய இரசாயன கைத்தொழிற்சாலை அமைந்துள்ள காணியை வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிக்கல் கம்பனி லிமிடட் நிறுவனத்திற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் சாட்டுதல் செய்வதற்கு அவசிய நடவடிக்கைகளை காணி ஆணையாளர் நாயகம் ஆரம்பித்துள்ளது.

**2.9 லங்கா மினரல் சான்ட் லிமிடட் நிறுவனத்தின் ஊடாக அகழ்வு செய்யப்பட்ட கனிய மணல்களின் பெறுமதி சேர் கருத்திட்டத்தை அரச மற்றும் தனியார் பங்குடமையின் கீழ் செயற்படுத்தல்.**

சீனா, இந்தியா, ஐக்கிய அராபி எமிரேட்ஸ், அவுஸ்திரேலியா உள்ளடங்கலாக 13 நாடுகளின் முதலீட்டாளர்களினால் விருப்பத்தைத் தெரிவித்து முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட திருகோணமலை கப்பல்துறையில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமாக உள்ள 125 ஏக்கர் காணியை லங்கா மினரல் சான்ட்ஸ் கம்பனி லிமிடட் நிறுவனத்திற்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**2.10 ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் திஸ்ஸமஹாராம பிரதேச செயலகப் பிரிவில் கிரிந்த மாகம கடற்கரையோரத்தில் காணப்படும் கனிய மணலை ஏழு கட்ட கிறிட் அலகுகள் மற்றும் அகழ்வுகள் நடவடிக்கைகளுக்காக கனிய மணல் நிறுவனத்திற்கு ஒதுக்குதல்.**

முன்மொழியப்பட்ட கருத்திட்டம் தொடர்பாக பிரதேச மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் அந்த பிரதேச மக்களுடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. அமைச்சரவையினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலின் படி இதற்கான சாத்தியக்கூறு கற்கையை மேற்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிடட் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணத்துவக் குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள வரைவு அறிக்கை கைத்தொழில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**2.11- லங்கா கனிய மணல் நிறுவனத்தின் கனிய மணல் விற்பனைக்கான முறையொன்றைத் தயாரித்தல்.**

புதிய விற்பனை முறைமை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 03.08.2022ஆம் திகதி அதன் கீழ் கனிய மணல் விற்பனைக்கான முதலாவது டென்டர் செயற்படுத்தப்பட்டதுடன், அதற்கமைவாக இல்மனைட், ஹய்டை இல்மனைட், ரூடெயில் மற்றும் பார கனியமணல் விற்பனை ஊடாக வருமானமாக ரூபா 20.33 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறப்பட்டது.

# 3. உற்பத்திக்கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி

## 3.1 புடவை தயாரிப்பு சார்ந்த தொழில்முயற்சியாளர்களுக்கான விசேட கைத்தொழில் வலயத்தை ஏறாவூர் பிரதேசத்தில் ஆரம்பித்தல்

இந்த கைத்தொழில் பேட்டைக்கான பாதை அபிவிருத்தி, மின்சார வசதி, தண்ணீர் வசதி என்பவற்றை வழங்குதல் மற்றும் கழிவுநீரை கடலுக்கு அனுப்பும் முறைமையைத் தயாரித்தல் மற்றும் வாழைச்சேனை கடதாசி ஆலையில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தை சரி செய்து நீரை வழங்கும் அளவினை அதிகரித்தல் என்பன பிரதான அபிவிருத்தி நடவடிக்கைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அதற்கமைவாக மின்சாரம், நீர், பாதை உள்ளடங்களாக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நடவடிக்கை 75% வீதத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. குழாய் பதிக்கும் பணிகள் 80% வீதம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

## 3.2 கட்டுநாயக்க கைத்தொழில் பேட்டையை நிறுவுதல்

இந்த கைத்தொழில்பேட்டையின் நிர்மாணிப்பு பணிகளை ஆரம்பிப்பதற்கான காணியினை உறுதிப்படுத்தவது தொடர்பாக நகர அபிவிருத்தி சபையுடன் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதுடன் 10.08.2022ஆம் திகதியளவில் காணியளத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 3.3 வலிபிட்டிய பிரதேச செயலகத்தில் கைத்தொழில் வலயமொன்றை உருவாக்கல்

இந்த காணியைக் கையகப்படுத்துவதற்கு அந்த காணிக்குரிய பெருந்தோட்ட நிறுவனத்திற்கு நட்டஈடு வழங்க வேண்டியுள்ளதனால் அதற்கான கொடுப்பனவு தொடர்பாக அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு வரவுசெலவுப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 3.4 2022ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு முன்மொழிவினை செயற்படுத்துதல்

பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவிலான கைத்தொழில் வலயங்களை நிறுவுவதற்கும் மற்றும் புதிய வியாபார அபிவிருத்திக்காக முதலீட்டு சந்தர்ப்பத்தை வழங்குவது இந்த கருத்திட்த்தின் பிரதான நோக்கமாகும். இதன் முதல் கட்டத்தின் கீழ் நாடு முழுவதிலும் 10 நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதன் பிரதான பணியாக அளத்தல் மற்றும் எல்லை வேலிகளை அமைத்தல் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான கைத்தொழில் பேட்டைகளாக திவுலப்பிட்டிய, புலத்சிங்கள, தம்புள்ள, திவுலாகள, ரம்பாவ, மஹுவ, மஹுவெவ, திக்வல்ல, சூரியவெவ, திருகோணமலை நகரம் மற்றும் வெல்லவாய போன்ற பிரதேசங்களில் இந்த காணிகள் அடையாளம் காணப்பட்டன.

## 3.5 தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்திக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் துறைமுகம் சார்ந்த கைத்தொழில் வலய அபிவிருத்திக்கு வசதியளிக்கும் (OneStop Shop) ஐ நிறுவுதல்

இது தொடர்பான அமைச்சரவைத் தீர்மானத்திற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்துள்ளதுடன், இந்த மத்திய நிலையத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் கொண்டு நடாத்தப்படுகின்றன.

### 3.6 இலங்கையில் நீராவி ஜெனரேட்டர் மற்றும் அழுத்த பெறுகை ஆராய்ச்சி மத்தியநிலையத்தை நிறுவுதல்

கைத்தொழில் அமைச்சினால் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினுள் நீராவி ஜெனரேட்டர் மற்றும் அழுத்தப் பெறுகை ஆராய்ச்சி மத்தியநிலையத்தை நிறுவுவதற்கான அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த மத்தியநிலையத்தில் நிறுவப்பட்டுள்ள நீராவிப் பிறப்பாக்கி இயந்திரத்திற்கு அனுமதியை வழங்கல், தொழில்நுட்பத்தை வழங்கல், பயற்சி வழங்கல் மற்றும் வழிகாட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் உரிய தரப்பினருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களில் நீராவி ஜெனரேட்டர் மற்றும் அழுத்தப் பெறுகை ஆராய்ச்சி மத்தியநிலையத்தை நிறுவுவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. நீராவி ஜெனரேட்டர் மற்றும் அழுத்தப் பெறுகை ஆராய்ச்சி மத்தியநிலையத்தை நிறுவுவதற்கான அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பாட்டு நடைமுறை தயாரிக்கப்படுகின்றது.

### 3.7 இரத்தினபுரி சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண வியாபார மத்தியநிலையைத்தை நிறுவுதல்

இரத்தினபுரியில் சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண வியாபார மத்தியநிலையத்தை நிறுவுதல்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் பொருளாதார மறுமலர்ச்சிக்கும் வறுமையை ஒழிப்பதற்கும் உயர்ந்தளவிலான பங்களிப்பினை வழங்கக்கூடிய பிரிவாகக் கண்டறியப்பட்டுள்ளது. வெளிநாட்டு கொள்வனவாளர்களைக் கவரும் வகையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறைக்குரிய அனைத்து சேவைகளையும், அதாவது இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கடைகளுக்கு அப்பால் இரத்தினக்கல் சான்றிதழ் பத்திரத்தை வழங்குதல், தங்கத்தின் அளவை சான்றுபடுத்தல் மற்றும் அச்சிடுதல், வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கல், ஏற்றுமதி வசதிகளை வழங்குதல், வங்கி வசதிகள், பாதுகாப்பான தற்காலிக தங்குமிட வசதிகள் போன்றவற்றை ஒரே கூரையின் கீழ் வழங்குவது அவசியமாவதுடன், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கான கொள்வனவு செய்வதற்கான அலுவலகத்தைப் பேணுவதற்கான வசதிகளை வழங்குதல் வேண்டும்.

இந்த வசதிகள் அனைத்தையும் உள்ளடக்கிய இரத்தினபுரி சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண மத்தியநிலையத்தை நிறுவும் நடவடிக்கைகள் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை மேற்பார்வையின் கீழ் தற்போது நடைபெறுகின்றன. அதன் இறுதி நடவடிக்கைகளில் 80% வீதமளவில் பூர்த்தியடைந்துள்ளதுடன், 2022 டிசம்பர் மாதம் முடிவடைகையில் இந்தப் பணிகள் நிறைவடைந்து கைத்தொழில் பேட்டையை கையகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபா 365 மில்லியனாகும்.

# பிரதான பிரிவுகள்



# 01

# கொள்கை அபிவிருத்திப் பிரிவு

## 1.0 முன்னுரை

உள்ளூர் தொழில்களுக்கு சாதகமான ஒரு சூழலை விவேகமான மற்றும் சரியான நேரத்தில் உரிய கொள்கைகளை உருவாக்குவதன் மூலமே முடியுமாவதுடன், இவை ஒரு நாட்டின் நீண்டகால நோக்கங்களை அடைவதற்குப் பங்களிப்புச் செய்கின்றது. ஒரு நாட்டிற்குள் செயற்படும் கொள்கைகள் மற்றும் அதற்கு அப்பாற்பட்டவை குறிப்பாக வர்த்தகம் மற்றும் தீர்வைக் கொள்கைகள், கைத்தொழிற்துறையை நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் தாக்குகின்றன. இதற்காக கைத்தொழில் அமைச்சின் கைத்தொழில் கொள்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவு, நாட்டின் தயாரிப்புக் கைத்தொழிற்துறையின் தேவை மற்றும் இலக்குகளை அடையக்கூடிய வகையில் சரியானதும், பொருத்தமானதும், சரியான பிரதிபலனைத் தரக்கூடிய வகையில் தேசிய கொள்கைச் சட்டத்திற்கேற்ப வர்த்தக மற்றும் தீர்வைகள் தொடர்பான கொள்கைகளை உருவாக்குவதற்கு உரிய நிறுவனங்களுக்குத் தனது பங்களிப்பை வழங்குகின்றது.

### கைத்தொழிற்துறை அபிவிருத்திக்குத் தேசிய கொள்கையை வடிவமைத்தல்.

நாட்டின் நீண்டகால தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில், இலங்கையின் நிலைபேறான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு சர்வதேச போட்டித்தன்மையுள்ள கைத்தொழில் அடிப்படையை உருவாக்கும் நோக்கத்துடன், உள்ளூர் தயாரிப்புக் கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையை உருவாக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகயை கைத்தொழில் அமைச்சின் கொள்கை அபிவிருத்திப் பிரிவு மேற்கொண்டுள்ளது. கைத்தொழில் கொள்கை, அதனுடன் இணைந்த உபாயமார்க்க அமுல்படுத்தல் திட்டம், அதனை அமுல்படுத்துவதற்கான செயற்பாடுகள், என்பன

இலங்கையின் தேசிய அபிவிருத்திக் கொள்கைச் சட்டகமான “செழிப்பான தொலைநோக்கு” இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கும் ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 17இற்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டது, மேற்குறிப்பிட்ட அடுக்குகளில் செயற்படும் கைத்தொழில்கள், கைத்தொழில் பிரிவின் 4.0 எனும் உயர் மட்டத்தை அடைவதற்கு வசதியளிப்பதற்காகவாகும்.

**தீர்வை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் கைத்தொழிற்துறை அபிவிருத்திக்கு தீர்வுக்கு தொடர்புடைய இலக்குகள**

கொள்கை அபிவிருத்திப் பிரிவு,இறக்குமதிக் கட்டுப்பாடு தொடர்பான செயற்பாடுகளைக் கையாளுவதுடன் இவ்வருடம் காணப்பட்ட தீர்வைக் கட்டமைப்பு மற்றும் தீர்வைக் கொள்கை தொடர்பான செயற்பாடுகள் தொடர்பாக பிரச்சினைகளை தீர்த்து உள்ளூர் கைத்தொழிற்சாலைகளுக்கு வசதியளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

தீர்வைக் கொள்கைகளைத் தயாரிக்கும் வர்த்தக மற்றும் முதலீட்டுத் திணைக்களம் மற்றும் அரசிறைத் திணைக்களம் என்பவற்றுடன் மட்டுமல்லாது கொள்கைகளை அமுல்படுத்தும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுங்கத் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து வருடம் முழுவதிலும் தீர்வை தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவியது.

**1.2 செயலாற்றுகை – 2022 30 செப்டெம்பர் 2022இல் (முன்னேற்றம்)**

**கைத்தொழிற்துறை அபிவிருத்திக்கு தேசிய கொள்கையை வடிவமைத்தல்.**

கொள்கை அபிவிருத்திப் பிரிவு அரசாங்கப் பெறுகை முறைமையின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலோசனையாளர்களுடன் இணைந்த செயற்திட்டமாக கைத்தொழிற்துறை அபிவிருத்திக்குரிய தேசிய கொள்கையைத் தயாரித்து வருகின்றது.

பங்குதாரர்களின் உள்ளீடுகளுடன் தொழிற்துறை மேம்பாட்டுக்கான தேசிய கொள்கை இறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அதைச் செயற்படுத்துவதற்கான வரைவு உபாயமார்க்க அமுலாக்கத்திட்டம், பின்வருவனவற்றை உள்ளடக்கிய ஆலோசனைக் குழுவால் தயாரிக்கப்பட்டது.

- உபாயமார்க்கங்கள், செயற்பாடுகள், கால அளவு, வெளியீடுகள், தாக்கங்கள், முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகள் மற்றும் பொறுப்பு ஆகியவற்றைக் கோடிட்டுக் காட்டும் அமுலாக்கச் சட்டகம்
- கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக்கான பொறிமுறை
- கொள்கை தொடர்வாக பருவகால மீளாய்வுகளை நடாத்துவதற்கான பொறிமுறை

உபாயமார்க்க அமுலாக்கத் திட்டத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் பங்குதாரர்களின் உள்ளீடுகளை பெறும் நோக்கத்துடன் 23 மற்றும் 24 செப்டெம்பரில் பயிற்சிப் பட்டறையொன்று நடாத்தப்பட்டது. தற்போது, கிடைக்கப்பெற்ற கருத்துகளின் அமைவாக ஆலோசனைக் குழு திருத்தங்களை மேற்கொள்ளுகின்றது.

**தீர்வை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் கைத்தொழிற்துறை அபிவிருத்திக்கு தீர்வுக்கு தொடர்புடைய பணிகள்**

கொள்கைப் பிரிவு, 2022 ஆண்டு முழுவதிலும் பொருளாதாரப் பிரச்சினைக் காலத்தில் நாட்டில் கைத்தொழிற்துறை அபிவிருத்திக்கான உகந்த சூழலை உறுதிப்படுத்தி, இந்த வருடம் தேவையற்ற இறக்குமதிகளை குறைத்ததன் காரணமாக உள்ளூர் தயாரிப்பாளர்களுக்கு எழுந்த பல்வேறுபட்ட தீர்வைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கைத்தொழிற்துறையாளர்களுக்கு ஆதரவளித்தது. ஊள்ளூர் கைத்தொழிற்துறையாளர்களின் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக

பிரிவு பல்வேறு கலந்துரையாடல்களை உள்ளூர் தயாரிப்பாளர்களுடன் மேற்கொண்டது. மேலும், தீர்வை முறைமையின் ஊடாக சூழல் விரும்பி அல்லாத பண்டங்களை குறைப்பதற்கு சுற்றாடல் அமைச்சுடன் கொள்கைப் பிரிவு பணியாற்றுகின்றது.

ஆத்துடன், ஆண்டு முழவதிலும் உள்ளூர்ப் பெறுமதி சேர்த்தல்களை மேற்கொள்ளுகின்ற உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் (எச்எச் தலைப்பு 84 மற்றும் 85 இன் கீழ்வரும கலால் வரியில் இருந்து விலக்குப் பெறுவதற்கான விதப்புரைகள் மேற்கொள்ளப்பட்டது. குளிர்சாதனப் பெட்டி மற்றும் சலவை இயந்திரங்கள் போன்ற புதிய மாதிரி மின்சார உபகரணங்கள் 30% வீதத்திற்கு மேற்பட்ட உள்ளுர் பெறுமதி சேர்த்தல்களை உள்ளடக்கி உள்நாட்டில் ஒன்றிணைக்கப்படுகின்றன. புதிய அரசாங்கத்தின் உள்ளுர் கைத்தொழிற்துறையினருக்கு ஆதரவளிப்பதன் ஊடாக பல உள்ளுர் தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதற்கான கொள்கையின் கீழ் அமைச்சினால் குறிப்பிட்டளவு ஆதரவு வழங்கப்பட்டது.

**வாகன தயாரிப்பு / ஒருங்குகூடல் கைத்தொழிற்துறைக்கான நியம தொழிற்பாட்டு நடைமுறை மற்றும் வாகன உதிர்பாக தயாாிப்புக் கைத்தொழிற்துறை.** (SOP)

கைத்தொழில் அமைச்சு நாட்டினுள் தன்னியக்க வாகனக் கைத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கும் புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உதிரிப்பாகங்களுடன் உள்ளூரில் ஒருங்கிணைக்கப்பட்ட வாகனங்களை ஊக்குவிப்பதற்குப் பாரிய முயற்சியினை மேற்கொள்ளுகின்றது. தன்னியக்க வாகனத்துறைக்கு கலால் தீர்வைச் சலுகையினைப் பெற்றுக்கொடுப்பதற்கான செயற்பாட்டில் கொள்கைப் பிரிவினால் மிகப் பெரிய பங்கு வகிக்கப்பட்டது. இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறை (SOP) என்பது உள்ளூரில் ஒருங்கிணைக்கும் வாகனங்களுக்கான 'உள்ளூர் பெறுமதி சேர்த்தல் மெட்ரிக்ஸ்'' உடன் அனைத்து வழிகாட்டல்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்கிய சுய விளக்க ஆவணமாகும்.

கைத்தொழில் அமைச்சு நாட்டினுள் தன்னியக்க வாகனக் கைத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கும் புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உதிரிப்பாகங்களுடன் உள்ளூரில் ஒருங்கிணைக்கப்பட்ட வாகனங்களை ஊக்குவிப்பதற்குப் பாரிய முயற்சியினை மேற்கொள்ளுகின்றது.

இந்த வருடம் நியம தொழிற்பாட்டு நடைமுறை (SOP) அறிமுகப்படுத்தியதன் பின்னர், பதினெட்டு (18) ஒருங்குகூட்டும் நிறுவனங்கள் நாற்பத்திஐந்து (45) புதிய வகை வாகனங்களை உள்ளூரில் ஒருங்கிணைப்பதற்கான அனுமதியைப் பெற்றிருந்தன.

செப்டெம்பர் 2022 வரை பதினான்கு (14) புதிய வாகன மாதிரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதுடன் பத்து (10) ஒருங்குகூட்டும் நிறுவனங்கள் புதிய வகை வாகனங்களை உள்ளூரில் ஒருங்கிணைப்பதற்கான அனுமதியைக் கோரியிருந்தன.

அதற்கமைவாக, நியம தொழிற்பாட்டு நடைமுறையின் கீழ் 7,739 மோட்டார் வாகனங்கள் (1,957 நான்கு சக்கர வாகனங்களும் மற்றும் 5,782 இரு சக்கர வாகனங்களும்) 2022 ஜனவரியில் இருந்து செப்டெம்பர் 15 வரை ஒருங்குகூட்டப்பட்டது. நாடு எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சினை மற்றும் வாகன இறக்குமதிக்கான தடைகள் என்பன நாட்டின் வாகன கைத்தொழிற்துறைக்கு கதவினை நியம தொழிற்பாட்டு நடைமுறை திறந்துள்ளது.

## 1.3 எதிர்காலத் திட்டங்கள் - 2023

### கைத்தொழிற்துறை அபிவிருத்திக்குத் தேசிய கொள்கையை வடிவமைத்தல்.

2023 ஆரம்பத்தில், அதன் செயற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்கு பொறுப்புள்ள தரப்பினருடன் செயலாற்றுகை ஒப்பந்தத்தை கையெழுத்திட்டவுடன், உபாயமார்க்கத் திட்டத்தின் ஊடாக, கைத்தொழில் அபிவிருத்திக்கு தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### தீர்வை தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து, 2023ஆம் ஆண்டில் நாட்டின் வருவாயை மேம்படுத்துவதன் மூலம் அல்லது பராமரிப்பதன் மூலம் நிலையான கட்டணக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு தொடர்ந்து பங்களிப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இதில், கொள்கை அபிவிருத்திப் பிரிவு உள்ளூர் பெறுமதி சேர்ப்பு மற்றும் சூழல் நட்பு தயாரிப்பு கைத்தொழிற்துறை மீது அதிக கவனத்தை செலுத்தும்.

2023இல், 2022 இல் உள்ளூரில் மோட்டார் வாகனங்களை ஒருங்கிணைக்கும் போது நடைமுறையில் எதிர்நோக்கிய அனுபவங்கள் மற்றும் தாக்கங்கள் தொடர்பான தன்னியக்க வாகன தொழிற்துறையினரின் கருத்துகளுடன் நியம தொழிற்பாட்டு நடைமுறை (SOP) யின் 1ஆம் பதிப்பினை மீளாய்வு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் மோட்டார் வாகனங்களை உள்ளூரில் ஒருங்கிணைப்பதை அபிவிருத்தி செய்வதற்கும் உள்ளூர் கம்பனிகளுடன் கூட்டுத் தொழில்முயற்சி முறையின் கீழ் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# 02

# கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

## 2.1. முன்னுரை

### பிரதான நோக்கம் / குறிக்கோள்கள்

தேசிய வருமானத்திற்குக் கைத்தொழிற்துறையில் இருந்து வழங்கப்படும் பங்களிப்பை மேம்படுத்துவதற்கு அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களில் பரவியிருக்கும் கைத்தொழிற்துறையைப் பிராந்திய மட்டத்திலும் அபிவிருத்தி செய்வதே கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவின் கட்டாயப் பணியாகும். இதனை பிராந்திய மட்டத்தில் புதிய கைத்தொழிற் பேட்டைகளை நிறுவுவதன் ஊடாகவும் தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதன் ஊடாகவும் இதனை அடைய முடியும். மேலும் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு பிராந்திய மட்டத்தில் உள்ள கைத்தொழிற்துறைகளுக்கு முதலீடுகளை ஊக்குவித்தல், புதிய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கல், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், முதலீட்டாளர்களுக்கு தொழில்நுட்ப உதவி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல் போன்ற கைத்தொழிற்துறை அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கும் தனது பங்களிப்பினை கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு ஆற்றுகின்றது

## புதிய கைத்தொழிற் பேட்டைகளின் நிறுவல் மற்றும் தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி

கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு மேலே விபரித்த நடவடிக்கைகளையும், முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு வாய்ப்புகளை வழங்குதல் தொழில்வாய்ப்புகளை உருவாக்குதல், ஏற்றுமதிக்குப் பெறுமதி சேர்த்தல் மற்றும் இறக்குமதிப் பதிலீடுகளை ஊக்குவித்தல் போன்றவற்றையும் கைத்தொழில் பேட்டைகளில் மேற்கொள்ளுகின்றது. 2022 ஜனவரியில் இருந்து 2022 டிசம்பர் வரை மேற்குறிப்பிட்ட கருத்திட்டங்களுக்கு ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

06 முதலீட்டு முன்மொழிவுகள் 2022இற்கு கிடைக்கப்பெற்றுள்துடன் அவற்றில் 04இற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. ஏனைய கருத்திட்டங்களுக்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றதுடன், இவற்றை 2022 முடிவடைவதற்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## பிராந்திய கைத்தொழில் சேவைக் குழுக்கள்

மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்காக, 1990ஆம் ஆண்டு 46ஆம் இலக்க கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின் கீழ் பிரதேச கைத்தொழில் சேவைக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளது. இக்குழுக்களின் பணிகளாக அமைவது, மாகாணங்களில் உள்ள கைத்தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு செயற்பாட்டுத் திட்டம் உட்படத் திட்டங்களைத் தயாரித்தல், கைத்தொழிற்சாலைகளுக்கு அவசியமான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் கைத்தொழிற்துறை தொடர்பான மூதலீட்டுத் தீர்மானங்களுக்கு உதவுதல் என்பனவாகும்.

இக் குழுக்களின் தலைவராக தனியார்துறையைச் சேர்ந்த வியாபாரியொருவர் கௌரவ கைத்தொழில் அமைச்சரினால், அந்த மாகாணத்திற்குரிய மாகாண சபையின் முதலமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர் நியமிக்கப்படுவார். ஏனைய அங்கத்தவர்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, இலங்கை முதலீட்டு சபை மற்றும் இலங்கை மின்சார சபை போன்ற கைத்தொழிற்துறையுடன் நேரடியாக தொடர்புபட்ட மாகாணத்தில் அமைந்துள்ள நிறுவனங்களின் அங்கத்தவர்களை உள்ளடக்கியிருக்கும்.

## பிராந்திய கைத்தொழில் சேவை நிலையங்கள்

இந்தக் குழுக்களின் பணிகளை மேற்கொள்வதற்காக, ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு சேவை நிலையத்தின் அடிப்படையில் ஒன்பது பிரதேச கைத்தொழில் சேவை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. சாட்டப்பட்டுள்ள இலக்குகளை உதவுவதற்கு பிராந்திய கைத்தொழில் சேவைக் குழுக்களுக்கு உதவுவதற்கு இக்குழுவின் செயலாளராக பிராந்தியப் பணிப்பாளர் நியமிக்கப்படுவார்.

பிரதேச கைத்தொழில் சேவை நிலையத்திற்குக் கிடைக்கும், கைத்தொழில் பேட்டையில் கைத்தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான அவசியமான காணிகளை வேண்டி வழங்கப்படும் புதிய கருத்திட்ட முன்மொழிவுகள் 1990ஆம் ஆண்டு 46ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பிரதேச கைத்தொழில் சேவைக் குழுக்களினால் மதிப்பிடப்படும். இக்குழு, பிரதேச மட்டத்தில் புதிய கைத்தொழிற்சாலையாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். பிரதேச கைத்தொழில் சேவைக் குழுக்களினால் சிபாரிசு செய்யப்பட்ட கருத்திட்டங்கள், அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவினால் பார்வையிடப்படும்.

பிரதேச கைத்தொழில் சேவைக் குழுக்களினால் சிபாரிசு செய்யப்பட்ட கருத்திட்டங்கள், கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவினால் கருத்திட்டங்களின் உற்பத்திப் படிமுறை, பெறுமதி சேர்க்கையின் வீதம்,

உருவாக்கப்படும் தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை, சூழல் தாக்கம் மற்றும் நிதி நிலமை என்பவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

இதற்கு மேலதிகமாக, புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதினால் சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதற்காக, சூழல் சார்ந்த கருத்திட்டங்களுக்கான விதப்புரையை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. குழுவினால் விதப்புரை செய்யப்பட்ட கருத்திட்டங்கள் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்படும். ஒப்புதல் வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு 35 வருட நீண்ட கால குத்தகை அடிப்படையில் அமைச்சினால் காணிகள் ஒதுக்கப்படும்.

**பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் வலயத்தை நிறுவுவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்.**

தொழில்முயற்சியாளர்களின் முதலீடுகள், உரிய துறைக்கு சம்பந்தப்பட்ட பாரம்பரிய கைத்தொழிற்துறையினர், அத்துடன் உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்திப் பண்டங்களை தயாரிப்பதற்கான மற்றும் உள்ளூர் பொருளாதாரத்தில் தாக்கத்தை உருவாக்கும் முதலீடுகளை மேற்கொள்ளும் தொழில்முயற்சியாளர்களுக்கு சாத்தியக்கூறுள்ள தொழில்நுட்ப அடிப்படையிலான முதலீடுகளுக்கு காணிகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டம்.

இந்தக் கருத்திட்டத்தின் கீழ், புதிய கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிப்பதற்கும் 15 பொருத்தமான காணிகள் வேறுபட்ட இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 2023இல் முதல் கட்டத்தில் 10 கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, இந்த 10 கைத்தொழில் பேட்டைகளின் நிர்மாணிப்பின் ஊடாக, அண்ணளவாக 20 கைத்தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவும் ரூபா 3000 மில்லியன் முதலீடுகளை மேற்கொள்ளவும் 800 தொழில்வாய்ப்புகளை வழங்கவும் முடியும். பொருளாதாரத்திற்கு ஏற்றுமதி வருமானமாக ரூபா 8000 மில்லியனை சேர்க்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.2 முன்னேற்றம் (30 செப்டெம்பர் 2022 அன்று)

அமைச்சு 33 கைத்தொழில் பேட்டைகளை 1024.25 ஏக்கர் நிலப்பரப்பில் மின்சாரம், தண்ணீர் மற்றும் பாதை வசதிகளுடன் நிறுவியுள்ளது. அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் 33 கைத்தொழில் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசு ரூபா 3980.05 மில்லியனை முதலீடு செய்துள்ளது. இந்த கைத்தொழில் பேட்டைகளில் கைத்தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு தனியார் கம்பனிகள் ரூபா 56,480.70 மில்லியனை முதலீடு செய்துள்ளது.

**கைத்தொழிற் பேட்டைகள்**

| 30 செப்டெம்பர் 2022 அன்று திரட்டிய முன்னேற்றம் | |
|---|---|
| கைத்தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை | 33 |
| அபிவிருத்தி செய்யப்பட்ட நிலப்பரப்பு (அதாவது மின்சாரம், நீர் மற்றும் பாதை முறைமை) | 1,024 |
| மொத்த முதலீடு (அண்ணளவாக) | 52,826 |
| அரசாங்க முதலீடு (அண்ணளவாக) | 3,980 |
| தனியார் முதலீடு (அண்ணளவாக) | 56,480 |
| வர்த்தகத் தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | 469 |
| நிர்மாணிப்பு நிலையில் உள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | 32 |
| தொழில்வாய்ப்புகள் | 22,818 |

மூலம் : கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

## புதிய கைத்தொழில்களுக்கு காணிகளை ஒதுக்குதல்

2021ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டினுள் 60 முதலீட்டாளர்களுக்கு காணிகளை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், 2022 ஜனவரி மாதத்தினுள் காணிகள் ஒதுக்கீட்டு கடிதம் விநியோகிக்கப்பட்டது.

| 2022 ஜனவரி 01 இருந்து செப்டெம்பர் 30 வரையிலான முன்னேற்றம் | |
|---|---|
| பிரதேச கைத்தொழில் சேவைக் குழுக்களினால் அனுமதியளிக்கப்பட்ட புதிய கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 48 |
| அமைச்சின் மதிப்பீட்டுக் குழுவினால் விதப்புரை செய்யப்பட்ட புதிய கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 42 |
| அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பட்ட புதிய கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 41 |
| பெயர் மாற்றத்தில் ஈடுபட்டுள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | 8 |
| பண்ட வகைகளை மாற்றும் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. | 2 |

*மூலம் : கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு*

## ரைகம கைத்தொழிற்பேட்டையை நிறுவுதல்





ரைகம கைத்தொழில்பேடையின் உட்கட்மைப்பு வசதிகயை அபிவிருத்தி செய்வதற்காக ரூ.346 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த தற்போதைய மூலப்பொருட்களின் விலை மற்றும் ஏனைய செலவுகள் காரணமாக ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதாக இல்லாத காரணத்தினால் மீண்டும் ரூபா 400 மில்லியனைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிர்வாக கட்டிடத்தின் நிர்மாணிப்பு பணிகள் 95% வீதமளவில் பூர்த்தியடைந்துள்ளதுடன், உள்ளக பாதைகளின் ஆரம்ப அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளது. கைத்தொழில்பேட்டைக்கான நீர் வழங்கல் மற்றும் ஏனைய உட்கட்மைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இதுவரை ரூபா 318 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டிற்கு ரூபா 120 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

### உலப்பன கைத்தொழில்பேட்டையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்





உலப்பனை கைத்தொழில் பேட்டையின் வேலி, தடையை புதுப்பித்தல் மற்றும் பிரதான வாயில் கேட்டை செய்தல் போன்ற பணிகள் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான முழுமையான செலவு ரூபா 2.69 மில்லியன் ஆகும்.

### 2.3. எதிர்காலத் திட்டம் - 2023

பிரதேச கைத்தொழிற்பேட்டை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய கைத்தொழில்பேட்டைகள் இரண்டினை நிர்மாணிப்பினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டள்ளது.

பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில் வலயங்களை உருவாக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 காணிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்திசெய்து முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது

## கைத்தொழில் பேட்டைகளின் சுருக்க அறிக்கை (30.09.2022 வரை திரட்டிய முன்னேற்றம்) கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

| மாவட்டம் | கைத்தொழில் பேட்டை | நிலப்பரப்பு (ஏக்கர்) | அரசாங்க முதலீடு – மொத்தம் (ரூ.மில்) | தனிப்பட்ட முதலீடு – மொத்தம் (ரூ.மில்) | முதலீட்டாளர்களின் எண்ணிக்கை | நேரடி தொழில்வாய்ப்புகள் | மொத்தப் புரள்வு (ரூபா.மில்) |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | கொலொன்னாவை | 7 | 36.17 | 636.8 | 13 | 618 | 612.80 |
| | இரத்மலானை கட்டம் I & II | 17 | 89.78 | 2,617.4 | 21 | 1526 | 2750.00 |
| | டெம்பில்பேர்க் கட்டம் I & II | 48 | 180.58 | 4,820.0 | 37 | 1798 | 6072.00 |
| களுத்துறை | களுத்துறை | 50 | 118.54 | 5,006.0 | 38 | 909 | 1209.00 |
| | மத்துகம | 50 | 174.43 | 3,155.0 | 14 | 462 | 3549.00 |
| | மில்லவ | 11 | 76.13 | 738.5 | 15 | 437 | 2228.90 |
| | ரைகம்புர | 24 | 318.78 | கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன | | | |
| கம்பஹா | மினுவாங்கொட | 15 | 44.12 | 1,747.5 | 14 | 699 | 1805.00 |
| | மஹர | 2.5 | 14.05 | 636.8 | 7 | 104 | 263.00 |
| புத்தளம் | புத்தளம் | 40 | 124.19 | 768.5 | 17 | 132 | 50.26 |
| | தங்கொட்டுவை | 53 | 109.74 | 5,065.0 | 36 | 1552 | 12947.50 |
| | நுரானி | 15.84 | 12.579 | 2000.0 | 16 | 374 | 120.00 |
| குருநாகல் | மாகந்துர – கிழக்கு | 27.19 | 35.79 | 5120.0 | 2 | 735 | 8511.89 |
| | மாகந்துரவ வடக்கு | 65.56 | 95.94 | 3,657.0 | 15 | 1131 | 18343 |
| | தம்பதெனிய | 10.15 | 38.36 | 663.0 | 3 | 1024 | 389.13 |
| | நிக்ரவட்டிய | 2.55 | 6.12 | 413.0 | 1 | 747 | 662.97 |
| பொலொன்னறுவை | லக்ஸஉயன கட்டம் I & II | 63.9 | 176.04 | 3,070.0 | 22 | 1152 | |
| மாத்தளை | நாலந்த | 24.7 | 77.28 | 2616.0 | 16 | 1158 | 4931.00 |
| கண்டி | உலப்பன | 25 | 135.43 | 2431.0 | 18 | 587 | 686.50 |
| காலி | கரந்தெனிய | 40 | 64.28 | 704.2 | 19 | 491 | 602.01 |
| மாத்தறை | உடுக்காவ | 21.13 | 50.93 | 870.8 | 3 | 1102 | 3422.50 |
| ஹம்பாந்தோட்டை | பட்டாத்தா | 105 | 320.08 | 2,031.4 | 16 | 621 | 3345.04 |
| அம்பாறை | நவகம்புர | 20 | 45.83 | 215.2 | 11 | 56 | |
| திருகோணமலை | திருகோணமலை கட்டம் I & II | 50 | 511.07 | 919.9 | 10 | 984 | 6420.00 |
| மட்டக்களப்பு | திரைமடு | 24.3 | 8.35 | 241.0 | கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன | | |
| இரத்தினபுரி | நாலந்த எல்லாவெல I | 36.38 | 66.1 | 1375.5 | 29 | 307 | 1525.37 |
| | நாலந்த எல்லாவெல II | 45 | 112.54 | 950.5 | 37 | 729 | 515.36 |
| | எம்பிலிபிட்டிய | 22.81 | 98.98 | 1060.2 | 3 | 180 | 1060.00 |
| கேகாலை | கலிகமுவ | 21.59 | 168.49 | 2141.1 | 9 | 341 | 1141.00 |
| மொனராகலை | புத்தளை | 18.35 | 118.76 | 480.0 | 21 | 900 | 1300.00 |
| பதுளை | ஊவா பரணகம | 3.3 | 0.81 | 50.0 | 2 | 20 | 729.00 |
| மன்னார் | மன்னார் | 24 | 351.775 | 1.4 | 1 | 415 | 83.75 |
| முல்லைத்தீவு | வெலிஓயா | 40 | 198.01 | 278.0 | 3 | 1527 | 314.50 |
| **ஏனையவை** | **மொத்தம்** | **1024.25** | **3980.05** | **56,480.70** | **469** | **22,818** | **85,590.48** |

*மூலம் : கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு*

# 03

# அபிவிருத்திப பிரிவு – 01

## 3.1 முன்னுரை

அமைச்சின் கீழ் சேவைகளை வழங்குவதற்கு பிரதான 20 பிரிவுகளில் விவசாய கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகள் அபிவிருத்தி பிரிவு 01 இன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. பதனிடப்பட்ட உணவு, தேயிலை, வாசனைத் திரவியம், பொதியிடல், தும்பு மற்றும் தெங்கு சார்ந்த கைத்தொழிற்துறை போன்ற விவசாயப் பொருட்களுக்கு இவ்வலகு பொறுப்பாக உள்ளது.

## பிரதான நோக்கங்கள்

1. சர்வதேசச் சந்தையில் போட்டியை எதிர்நோக்கக் கூடியவாறு உயர்தரமுடைய பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் தேசிய கைத்தொழிற்துறையினை ஊக்குவித்தல்,
2. தேசிய சந்தைத் தேவைகளைக் கண்டறிந்து அவற்றினைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில் அவசியமான கைத்தொழிற்துறையினை அபிவிருத்தி செய்தல்.
   உள்ளூர் சந்தையின் தேவையை அடையாளம் கண்டு, அந்த தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான கைத்தொழில் பிரிவுகளை அபிவிருத்தி செய்தல்.

## செயற்பாடுகள்

- சமூக பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் உரிய துறையை அபிவிருத்தி செய்வதற்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிட்டு அமுல்படுத்தல்.

- தனியார் கைத்தொழில் துறையைச்சார்ந்தவர்கள், ஏற்றுமதியாளர்கள், கல்வியியலாளர்கள் என்பவர்களை உள்ளடக்கி அமைக்கப்பட்ட ஆலோசனைக்குழுவின் மூலம் அபிவிருத்தித் திட்டங்கள், உபாயமார்க்கத்திட்டங்கள் போன்றவற்றைத் தயாரித்தல்.

- மேற்குறித்த துறைகளுக்கான சர்வதேசச் சந்தை நிலமைகளை அவதானித்து, அபிவிருத்திக் குறிக்கோள்களை எட்டக்கூடிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.

- இத்துறையில் காணப்படும் பிரச்சினைகளை கலந்துரையாடி அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆலோசனைக் குழுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.

- இத்துறையுடன் தொடர்புடைய அமைச்சுகள், பொதுத் திறைசேரி, வர்த்தக சபைகள், தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் ஏனைய நலன்விரும்பிகளுடன் ஒருங்கிணைத்தல்.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில் பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றல் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம், கைத்தொழிற்துறையினரின் திறனை இற்றைப்படுத்தல்.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில் பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றல் நிகழ்சிகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம், கைத்தொழிற்துறையினரின் திறனை இற்றைப்படுத்தல்.

- தேசிய மற்றும் சர்வதேச கண்காட்சிகளை நடாத்துவதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கான சந்தைவாய்ப்புகளை அபிவிருத்திசெய்தல் மற்றும் ஊக்குவித்தல்.

- ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் உள்ளீடுகளுக்கான தீர்வை நன்மைகளைக் கைத்தொழிற்சாலைகளுக்குப் பெற்றுக் கொடுத்தல்.

- சர்வதேச தரத்திற்கு ஏற்றவகையில் இறுதிப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தவும், பொருட் சான்றிதழினைப் பெற்றுக்கொடுக்கவும் கைத்தொழிற்துறைக்கு உறுதுணையாக இருத்தல்.

## செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

### உணவு ஆய்வுகூட நிர்மாணிப்பின் நான்காவது கட்டம் (Accredited Food Laboratory)

- கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் (IDB) தர உறுதிப்படுத்தப்பட்ட உணவு ஆய்வுகூடமொன்றினை ஸ்தாபித்தலின் நான்காம் கட்டமானது இலங்கையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கான ஆய்வுகூட பரிசோதனைகள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சேவைகளினை அளிக்கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டத்தில், ஆய்வுகூடக் கட்டிடமானது முதலாம் மற்றும் இரண்டாம் தளங்களுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் பொருத்துதல் ஊடாக இடவசதியினை விரிவுபடுத்துடன், கைத்தொழிற்துறையினருக்கு ஆய்வுகூட சேவைகளைப் போட்டி விலையில் வழங்குவதற்கான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக ஆய்வுகூடம் 2022ஆம் ஆண்டில் 206ற்கு மேற்பட்ட உணவுத் தயாரிப்புகளுக்கு சர்வதேசத்தினால் அங்கீகாரிக்கப்பட்ட SLS/ISO இரசாயன அறிக்கையை வழங்குவதற்கு தரச் சான்றிதல் லேபல்படுத்தல் தேவைக்கு அமைவாக பரீட்சித்தல்,

போசனை அளவின் பரீட்சிப்பு என்பனவற்றுக்கான ஆய்வுகூடத்தை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டள்ளது. இதற்கான ஒதுக்கீடு ரூபா 1.2 மில்லியன் ஆகும். உணவு ஆய்வுக்கான இரசாயன ஆய்வுகூடம் திறக்கப்பட்டது.

- கைத்தொழிலாளர்கள், ஏற்றுமதி செயல்முறைத் திட்டத்திற்கான (TIEP) தற்காலிக இறக்குமதியினூடாக சுங்கத் தீர்வையற்ற அடிப்படையில் மூலப் பொருட்களின் இறக்குமதிக்கு அவற்றினை வசதிப்படுத்துவதன் மூலம் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். இந்த மீளாய்வுக் காலப்பகுதியில் இவ்வாறான வசதிகள் வழங்கப்பட்டன. 2022இல் இந்தத் திட்டத்தின் கீழ் 59 கைத்தொழிற்துறையாளர்களுக்கு வசதிகள் வழங்கப்பட்டது.

- பொதி செய்தல், உணவைப் பதப்படுத்தல், வாசனைத் திரவியங்கள், தும்பு உற்பத்திகள் மற்றும் தேயிலைப் பண்டங்களுக்குப் பெறுமதி சேர்ப்பினை மேற்கொண்டு நேரடியாக மற்றும் மறைமுகமாக ஏற்றுமதியில் ஈடுபடுகின்ற, இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் துறை மற்றும் பால் மற்றும் பால்சார்ந்த பண்டங்கள் கைத்தொழிலாளர்களுக்கு இத்தகைய வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்த அமைச்சானது பெறுமதி சேர்ப்பினை அதிகரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்களின் இறக்குமதிக்கு வரிச் சலுகைகளினை அளிப்பதன் மூலம் கைத்தொழில் துறைக்கு தனது ஆதரவினை வழங்கி வருகின்றது. இது சர்வதேச சந்தையில் ஏற்றுமதிகளுக்கான போட்டியினை அதிகரிப்பதற்கு வழி வகுக்கும்.

## தர மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்

- அமைச்சானது தரம், பாதுகாப்பு மற்றும் முறைமைச் சான்றிதழ்கள் (ISO 9001, ISO 14001, ISO 22000, ISO 50001) என்பவற்றினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு கைத்தொழிலாளர்களுக்கான தர மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது. கைத்தொழில்கள் அமைச்சுக்கு சான்றிதழ்களினைச் சமர்ப்பித்ததன் பின்னர், மொத்தச் சான்றுப்படுத்தல் செலவினை (ஆகக்கூடுதலாக ரூபா.300,000/- வரையில்) மீளளிப்புச் செய்வதன் மூலம், இந்நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளன. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், பதப்படுத்தப்பட்ட உணவுக் கைத்தொழிற்துறை, பொதியிடல் கைத்தொழிற்துறை, பெறுமதி சேர்த்த தேயிலைத் துறை, பெறுமதி சேர்த்த வாசனைத் திரவியத்துறை மற்றும் தும்பு கைத்தொழிற்துறை என்பவற்றினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 58 கைத்தொழிலாளர்களுக்கு 2022 ஆம் ஆண்டிற்கான இந்த வாய்ப்பு அளிக்கப்படும்.

- 58 கைத்தொழிற்சாலைகள்வெற்றிகரமாக ISO சன்றிதழைப் பெற்றுக்கொண்டதுடன் நிதியியல் வசதிகளும் இக்கைத்தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாது ரூபா 16 மில்லியன் ஆகும்.

## திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

- பொதியிடல் தொழில்நுட்பத்தில் 12 நாட்களினைக் கொண்ட வார இறுதிச் சான்றிதழ் பாடநெறியினை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமானது, பொதியிடல் கைத்தொழிற் துறைக்கான காலத் தேவையாகவுள்ள தொழில்நுட்பவியலாளர்களின் அறிவு மற்றும் திறன்களை அதிகரிப்பதேயாகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது, அமைச்சு மற்றும் பொதியிடல் அபிவிருத்தி நிலையத்துடன் இணைந்து அமுல்படுத்தப்படும். பொதியிடல் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற 25 தொழில்நுட்பவியலாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள்.

- இந்தக் கருத்திட்டத்தின் கீழ் சேதன சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக உணவு பதனிடும் துறையில் உள்ள தயாரிப்பு மற்றும் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள 25 தொழிற்சாலைகளுக்கு நிதியில் நிவாரணம் வழங்கப்பட்டதுடன் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் அமுல்படுத்தப்பட்டது.

இங்கு உச்சளவாக ரூபா 250000.00 கள பரிசோதனை மற்றும் ஆய்வுகூட பரிசோதனைகள் உள்ளடங்களாக நிதியியல் ஆகு செலவு மீளளிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடு ரூபா 6.75 மில்லியன் ஆகும்.

**சந்தை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

- உணவு தொடர்பான /பொதியிடல் தொடர்பான Profoods/ Propack கண்காட்சி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2022 நவம்பர் மாதத்தில் பெருமளவிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காட்சியாளர்களின் பங்குபற்றுதலுடன் பத்தொன்பதாவது தடவையாகவும் இலங்கை உணவு பதப்படுத்துனர் சங்கத்துடன் ஒருங்கிணைந்து அமைச்சினால் நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான ஒதுக்கீடு ரூபா 2.0 மில்லியன் ஆகும்.
- “லங்கா பக் 2022” கண்காட்சியானது உள்நாட்டு பொதியிடல் கைத்தொழில்களுக்கு வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்களினை அதிகரிக்கும் நோக்குடன் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2022 பெப்பரவரி 12,13 மற்றும் 14ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது. இதற்கான ஒதுக்கீடு ரூபா 2.0 மில்லியன் ஆகும்.

## 3.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் இறுதியில்)

**1. உணவு ஆய்வுகூடத்தை நிறுவுதல்**
**(ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 1.2 மில்லியன்)**

- நான்காம் கட்டமாக ஆய்வுகூடத்திற்கு அவசியமான வசதிகளை வழங்கல் ஆரம்பிக்கப்பட்டள்ளது.
- 206ற்கும் மேற்பட்ட உணவுத் தயாரிப்புகளுக்கு சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரசாயனச் சான்றிதழை வழங்குதல்.
- பெறுமதி சேர்த்தலை மேம்படுத்துவதற்கு இறக்குமதி தீர்வை நிவாரணத்தை வழங்குவதற்கு அமைச்சின் உதவியினை வழங்குதல்.

**2. தரத்தினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்**
**(ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 16 மில்லியன்)**

- ISO சான்றிதழைப் பெற்றுக்கொண்ட 58 கைத்தொழிற்சாலைகளுக்கு நிதி வசதி வழங்கப்பட்டது

**3. திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

(ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 6.75 மில்லியன்)

- பொதியிடல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 25 தொழில்நுட்ப கலைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- உணவு தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள 25 கைத்தொழிற்சாலைகளுக்கு சேதன சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு நிதி வசதி வழங்கப்பட்டுள்ளது.

**4. விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்**

(ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 2.0 மில்லியன்)

- Propack கண்காட்சியை 2022 நவம்பர மாதத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- Lankapack கண்காட்சி 2022 பெப்பரவரியில் நடாத்தப்பட்டது.

## 3.3 எதிர்காலத் திட்டங்கள் - 2023

1. மதியுரைக் குழுக்களினால் பரிந்துரை செய்யப்பட்ட மற்றும் கருத்துகளுக்கு அமைவாக உரிய துறையின் அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல் மற்றும் அமுல்படுத்தல்.

2. பதப்படுத்தப்பட்ட உணவுக் கைத்தொழில்துறை மற்றும் பொதியிடல் கைத்தொழிற்துறைக்கான சர்வதேசக் கண்காட்சியினை ஏற்பாடு செய்வதனூடாக சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆதரவளித்தல்.

3. தர, பாதுகாப்பு மற்றும் முறைமைச் சான்றிதழ்களினைப் பெற்றுக் கொள்வதற்காக பதப்படுத்தப்பட்ட உணவு, பொதியிடப்பட்ட தேயிலை, தும்பு, பால் மற்றும் பால் சார்ந்த பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியத் துறைகளின் கைத்தொழில்சார் உற்பத்தித்திறன், சந்தைப் போட்டி மற்றும் வலுவாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் (ISO 9001, ISO 14001, ISO 22000, ISO 50001) என்பவற்றினை அமுலாக்குதல்.

4. சிறிய நடுத்தர கைத்தொழில்களில் உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக சிறந்த தயாரிப்புச் செயல்முறைகளினை (GMP) அமுல்படுத்துதல்.

5. கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் தாபிக்கப்பட்டு வரும் சான்றுப்படுத்தப்பட்ட உணவு ஆய்வுகூடத்திற்குத் தேவையான சேவைகளினை வழங்குவதற்கான நடவடிக்கையினை எடுத்தல்.

6. பெறுமதி சேர்த்த பொருட்களின் ஏற்றுமதிக்கான வசதிகளினை மேம்படுத்தும் பொருட்டுத் தேவையான நடவடிக்கைகளினை எடுத்தல்.

7. புதிய தொழில்நுட்பங்களை பெற்றுக் கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களின் திறன்களை மேம்படுத்துதல்.

8. "இலங்கையின் சமையல் முறை" எனும் தொனிப் பொருளில் இலங்கை உணவின் அடையாளத்தினைப் பாதுகாக்கும் பொருட்டு உலக சந்தைக்கு உள்ளூர் உணவுகளை அறிமுகப்படுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் உணவு பதப்படுத்துனர் சங்கம் என்பவற்றுடன் இணைந்து கூட்டாக நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

9. உணவுத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியினரின் பொதியிடல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தவதற்கு வசதிகளை வழங்குவதற்கான கருத்திட்டம்.

# 04

# அபிவிருத்திப பிரிவு 02

## 4.1 முன்னுரை

### பிரதான இலக்கு

இப்பிரிவின் பிரதான நோக்கம் உலகளாவிய ரீதியில் போட்டிமிக்க அதி உயர் தரமான பொருட்களை உற்பத்தி செய்யும் அதன் நோக்கெல்லையின் கீழான தயாரிப்புத் துறைகளுக்கு வசதியளிப்பதேயாகும்.

இப் பிரிவின் நோக்கெல்லையின் கீழான துறைகள்

- இறப்பர் அடிப்படையிலான கைத்தொழில்
- தரையோடுகள், கிரனைட் மற்றும் மட்பாண்டக் கைத்தொழில்
- படகு கட்டுமானக் கைத்தொழில்
- மோட்டார் வாகன ஒருங்கிணைப்பு மற்றும் மோட்டார் வாகன உதிரிப்பாகக் கைத்தொழில்
- மரம் மற்றும் மர அடிப்படையிலான கைத்தொழில்
- பிளாஸ்ரிக் அடிப்படையிலான கைத்தொழில் மின்சார மற்றும் மின்னிலத்திரனியல் கைத்தொழில்
- வர்ணப்பூச்சுக் கைத்தொழில்
- கனிய மற்றும் கனியப் பண்டங்கள் சார்ந்த தயாரிப்பு

### செயற்பாடுகள்

- அரச துறை, கல்வி மற்றும் தயாரிப்புக் கைத்தொழிற்துறையுடன் இணைந்து கைத்தொழில் அபிவிருத்திக்கான திட்டங்களை உருவாக்குதல்.
- முகாமைத்துவ தொழில்நுட்பம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அவசியமான ஆலோசனை மற்றும் வசதிகளை வழங்குவதற்கும் உதவுதல்.

- கைத்தொழில் அபிவிருத்திக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தக சம்மேளனங்கள், அரசுக்குச் சொந்தமான கூட்டுத்தாபனங்கள், கம்பனிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல்.

- பணியாளர்களின் திறனையும் தயாரிப்புக் கைத்தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதற்கு அவசியமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

- ஏற்றுமதி சார்ந்த கைத்தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்கு வசதியளித்தல்.

- நிபுணர்களின் விசாக்களுக்கு விதப்புரை, TIEP வசதிகளுக்கான விதப்புரை மற்றும் தடை செய்யப்பட்ட இறக்குமதிப் பண்டங்களுக்கு விதப்புரையை வழங்குதல் போன்ற கைத்தொழிற்துறைக்கு வசதிகளை வழங்குதல்.

- தற்போது தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ள கைத்தொழில்துறைக்கு அவசியடான மூலப் பொருடகளை இறக்குமதி செய்வதற்கு விதப்புரையினை வழங்குதல் போன்ற பணிகளின் ஊடாக கைத்தொழிலாளர்களுக்கு அவர்களுடைய கைத்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு வசதி வழங்கல்.

## 4.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் 30ஆம் திகதியில்)

### சர்வதேச டகுக் கண்காட்சி

2022 ஆரம்பித்ததில் இருந்து நாட்டில் ஏற்பட்ட நிலமை, எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்வெட்டு போன்ற காரணங்களினால் படகு நிர்மாணிப்பு கைத்தொழில் பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்ட சர்வதேச படகுக் கண்காட்சியை இரத்துசெய்ய வேண்டிய நிலையேற்பட்டது.

### இறப்பர் சார்ந்த கைத்தொழிற்துறை

இறப்பர் சார்ந்த கைத்தொழில் பிரிவின் பெறுமதி சேர் தயாரிப்பு கைத்தொழில் பிரிவினால் அதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு அந்த கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில்நுட்ப கலைஞர்களுக்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை இந்த ஆண்டினுள் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் கீழ் இலங்கை இறப்பர் பிளாஸ்டிக் நிறுவனத்தின் 4 பாடநெறிகளை இந்த ஆண்டினுள் செயற்படுத்துதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக ரூ.1.6 மில்லயனை செலவு செய்ய எதிரிபார்க்கப்படுகின்றது.

### வாகன தயாரிப்பு மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் தயாரிப்புக் கைத்தொழில்

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாக வாகன இறக்குமதி தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு அரசு மேற்கொண்ட பின்புலத்தில் உள்நாட்டில் வாகனத்தை பொருத்தும் கைத்தொழில் குறிப்பிட்டுக் கூறத்தக்கவகையில் முன்னெற்றத்தைப் பெற்றுள்ளது.

### அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பாட்டு நடைமுறையினை (SOP) வெளியிடுதல்

2021இல் அறிமுகப்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பாட்டு நடைமுறையின் நன்மையினைக் கருத்தில்கொண்டு 21 கைத்தொழிற்சாலைகள் வாகனங்களைப் பொருத்தும் கைத்தொழிலில் நுழைந்துள்ளன.

வாகனங்களை பொருத்தும் கைத்தொழிலுக்கு சமாந்தரமாக தேசிய மோட்டார் வாகன உதிரிப்பாக கைத்தொழிலும் குறிப்பிட்டுக்கூறத்தக்க முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. இந்த தயாரிப்பு முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கு

சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரச் சான்றிதழை அறிமுயப்படுத்துதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் படி IATF 16949 (International Automotive Task Force) தரச் சான்றிதழை வழங்குவதற்காக உள்ளூர் வாகன உதிரிப்பாகங்களைத் தயாரிக்கும் 7 கைத்தொழிற்சாலையாளர்களுக்கு வசதிகளை வழங்குவதற்கு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றதுடன், இதற்காக அமைச்சு ரூ.4.2 மில்லியனை செலவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றது.

## 4.3 எதிர்காலத் திட்டங்கள் - 2023

- வாகன உதிரிப்பாகங்களைத் தயாரிக்கும் கைத்தொழில் பிரிவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள IATF 16949 (International Automotive Task Force) தரச் சான்றிதழை 202ஆம் ஆண்டினுள் 15 கைத்தொழிற்சாலைகளுக்கு அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- செங்களிமண் ஓடுகளுக்கான SLSI தரச் சான்றிதழைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தல்.
- சிறிய மற்றும் மத்தியளவிலான நிகழ்ச்சித்திட்டத்திற்கு வளங்களின் பாவனையின் வினைத்திறனை அளவிடுதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில்நுட்ப கலைஞர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.
- இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் கைத்தொழில் பிரிவுக்கு Polymer Technology பற்றிய பட்டதாரி மட்ட பாடநெறியை நடாத்துதல்.
- மரம் மற்றும் மரம் சார்ந்த தயாரிப்பு கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில்நுட்ப கலைஞர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்.
- படகு நிர்மாணிப்பு பிரிவுக்கான சர்வதேச வியாபாரக் கண்காட்சியை நடாத்துதல்.
- மின்சார மற்றும் மின்னிலத்திரனியல் பண்ட கைத்தொழிலுக்கு சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றுக்கொடுக்குமம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- மாலைதீவு.`.இந்தியா.`.சீஸெல்ஸ் என்பவற்றுடன் பிராந்திய சந்தையில் படகுக்கு உள்ள கேள்வியை மேம்படுத்துவதற்கு ஒன்றியைந்த கடல் சுற்றுலா நிகழ்ச்சித்திட்டத்தை மேம்படுத்தவதற்கான சந்தர்ப்பம் தொடர்பாக பிரந்திய மாநாட்டினை ஒழுங்குசெய்தல்.

# 05

# அபிவிருத்திப பிரிவு 03

## 5.1 முன்னுரை

### பிரதான நோக்கம்

சர்வதேச சந்தையில் போட்டியாக இருக்கும் வகையில் உயர் தரமான பொருட்களை உற்பத்தி செய்யும் பொருட்டு கீழ்வரும் தயாரிப்புகளின் உப துறைகளினை ஊக்குவித்தலும் வசதிப்படுத்தலும்.

- பாதணிக் கைத்தொழில்
- தோற் கைத்தொழில்
- மருந்தாக்கற் கைத்தொழில்
- அழகுசாதனப் பொருட்கள் கைத்தொழில்
- உருக்கு சார்ந்த கைத்தொழில்

### பிரதான செயற்பாடுகள்

- ஆலோசனைக் கூட்டங்களை ஒழுங்குசெய்தல், அபிவிருத்தி உபாயமார்க்கங்களைக் கலந்துரையாடல், ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் அமுல்படுத்தல்.
- பொறுப்புடைய தயாரிப்புக் கைத்தொழிற்துறைக்கான அபிவிருத்தித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்தல்.
- இத்துறையோடு தொடர்புடைய அமைச்சுகள், வர்த்தக சங்கங்கள், சம்மேளனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பணிபுரிதல்
- தேர்ந்தெடுக்கப்பட்ட கைத்தொழிற்துறைக்கான திறமையினை விருத்திசெய்வதற்கு உதவிகளை வழங்கல்.
- சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் சந்தைப் பங்கினை அதிகரித்துக்கொள்ளுதல் தொடர்பாகக் கைத்தொழிற்துறைகளுக்கு உதவுதல்.
- முதலீட்டு மற்றும் வர்த்தக ஊக்குவிப்புகள் தொடர்பாக ஆலோசனைச் சேவைகளை வழங்கல்.
- TIEP யோசனைத்திட்டத்தின் கீழ் ஏற்றுமதி சார் கைத்தொழிற்துறைனருக்கு, வசதியளித்தல்.

- உள்நாட்டு கைத்தொழிற்துறைக்கு அவசியமான மூலப்பொருட்களுக்குத் தீர்வைச் சலுகையைப் பெற்றுக்கொள்வதற்கான விதப்புரைகளை வழங்குதல்.

- சர்வதேச சந்தையின் போட்டித்தன்மையைப் பூர்த்திசெய்வதற்காக சர்வதேச நியமச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு உள்நாட்டு கைத்தொழிற்துறைக்கு வசதியளித்தல்.

- உருக்கு சார் கைத்தொழிற்துறையினருக்கு பெறுமதி சேர்த்தலை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.

- கொள்கை நடவடிக்கைகளின் ஊடாக மூலப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு கைத்தொழிற்துறையினருக்கு உதவுதல்.

- உருக்கு மிகுதிகளை ஏற்றுமதி செய்வதற்கான விதப்புரைகளை வழங்குதல்.

- மேற்குறித்த கைத்தொழிற்துறையில் பணிபுரியும் நிபுணர்களுக்கான விசாக்களுக்கான விதப்புரையை வழங்கல்.

- தயாரிப்பு கைத்தொழிலுக்கு அவசியமான கைத்தொழில் மூலப்பொருட்களை இந்தியாவின் கடன் முறைமையின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு அவசிய விதப்புரைகளை வழங்கல்.

- எரிபொருள் சிக்கலினால் கைத்தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்து எரிபொருளைப் பெற்றுக்கொடுப்பதற்கு முன்னுரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான விதப்புரையை வழங்கல்.

- திறந்த கணக்கின் கீழ் கைத்தொழிலுக்கு அவசியமான மூலப் பொருள் இறக்குமதிக்கு அவசிய விதப்புரையை வழங்குதல்.

## 5.2 முன்னேற்றம் (30 செப்டெம்பர் 2022 வரை)

- உருக்கு சார் கைத்தொழிற்துறைப் பண்டங்களுக்குப் பெறுமதி சேர்த்தல் சூத்திரத்தை உருவாக்குவதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் இணைந்து கருத்திட்டமொன்று அமுல்படுத்தப்படுகின்றது.

- இலங்கையில் நீராவி ஜெனரேட்டர் மற்றும் அழுத்த உள்வாங்கி ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மத்தியநிலையத்தை நிறுவுவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன், கைத்தொழில் அபிவிருத்தி சபை அதற்கான மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

- இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனத்துடன் இணைந்து திறன் அபிவிருத்தி மற்றும் அடிப்படைக் கருவிகள் மற்றும் உபகரணங்களை வழங்குவதன் ஊடாக 100 இற்கு மேற்பட்ட பயன்பெறுனர்களை வலுவூட்டுவதற்கு கொழும்பு மாவட்டத்தில் பாதணித்துறையினருக்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அமுல்செய்யப்பட்டது.

**தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் அறிவை வழங்குவதன் ஊடாக**

















*லம் : அபிவிருத்திப் பிரிவு 03*

- ஊதுபத்தி கைத்தொழிற்துறைக்கு அவசியமான மொத்த மூங்கில் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்கான கருத்திட்டம் கைத்தொழில் அபிருத்தி சபையுடன் இணைந்து கருத்திட்டமொன்று அமுல்படுத்தப்படுகின்றது. தற்போது மூங்கில் அறுவடை செய்வதற்கான பகுதிகள் கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் பேராதெனிய பல்கலைக்கழகத்துடன் இணைந்து புளூ தொழில்நுட்பத்தின் ஊடாக அடையாளம் காணப்படுகின்றது.

- இலங்கை கைத்தொழில் கண்காட்சி மற்றும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் இணைந்து விருது வழங்கும் நிகழ்வு 2022 பெப்பரவரி 3,4,5 மற்றும் 6ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் ஒழுங்குசெய்யப்பட்டது.

- மேலும் அபிவிருத்தி அலகு 3இன் ஊடாக கைத்தொழிலாளர்களுக்கு அவர்களுடைய தயாரிப்பு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்துவதற்கு வழங்கப்பட்ட விதப்புரை, நடாத்தப்பட்ட குழுக் கூட்டங்கள் தொடர்பான விரிவான விபரங்கள் கீழ்வரும் அட்டவணை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**விதப்புரை**

| விபரம் | உப பிரிவு | எண்ணிக்கை |
|---|---|---|
| Raw Hide விதப்புரை | பாதணிப் பிரிவு | 7 |
| இந்தியா கடன் யோசனைத் திட்டத்தின் கீழ் விதப்புரை | - | 250 |
| எரிபொருளுக்கான விதப்புரை | - | 77 |
| வரி விலக்கு தொடர்பான விதப்புரை | பாதணிப் பிரிவு | 19 |
| விலைக் கேள்வி | உலோகப் பிரிவு | 11 |
| ஆலோசனைக் குழு | பாதணிப் பிரிவு/ அழகுசாதனப் பிரிவு | 4 |
| Chamber குழுக் கூட்டம் | | 1 |
| நிறுவனங்களின் எண்ணிக்கை | | **369** |

*மூலம் : அபிவிருத்திப் பிரிவு 03*

## 5.3 எதிர்காலத் திட்டங்கள்- 2023

- இளைஞர் மற்றும் யுவதிகளை வலுவூட்டுவதற்கு SLITA நிறுவனத்தின் ஊடாக நாடு முழுவதிலும் உள்ள தொழில்வாய்ப்பற்ற பயிற்சி பெறாத சமூகத்திற்கு மற்றும் பெண்களுக்கு பாதணி தயாரிப்பு தொடர்பான திறமையை வளர்த்துக்கொள்வதற்காக ஆரம்ப பயிற்சி பாடநெறியினை நடாத்தப்பட்டது. பயிற்சி பெற்றவர்களை பாதணி தயாரிப்பு சுயதொழிலுக்கு அனுப்புதற்காக, அவர்களுக்கு அவசியமான முக்கியமான உபகரணங்களை வழங்குவதற்கும், நிதி உதவியினை வழங்குவதற்கும் ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- தோல் மற்றும் பாதணிப் பிரிவின் திறன அபிவிருத்தி தொடர்பாக கடந்த காலங்களில் நடாத்தப்பட்ட திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்த்தின் ஊடாக பாதணி மற்றும் தோல் பொருள் தயாரிப்புக்கு வந்தள்ளவர்களுக்கு உயர் பாடநெறியினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- தோல் மற்றும் பாதணிப் பிரிவு ஏற்றுமதி சந்தைக்கு நுழைவதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் தற்போதுள்ள ஊழியர்களின் திறனை மேம்படுத்தவதற்கு பயிற்சி பாடநெறியினை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- அழகுசாதன தயாரிப்பு பிரிவினை மேம்படுத்தல் - (தரத்தினை மேம்படுத்தல்) இதற்காக அழகுசாதனத் தயாரிப்புகளுக்கான ஆய்வு அறிக்கையைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அழகுசாதன ஏற்றுமதியை மேற்கொள்வது வரை அவர்களுக்கு அவசியமான தரச் சான்றிதழைப் பெற்றக்கொள்வதற்கு அவசியமான நிதி வசதியினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- 2007 இருந்து வருடாந்தம் நடாத்தப்படும் பாதணி மற்றும் தோல் பொருள் விற்பனைக் கண்காட்சியை 2023ஆம் ஆண்டிலும் நடாத்துவதற்கு கைத்தொழில் அமைச்சு அனுசரணையை வழங்கும்.

- சிறிய மற்றும் நடுத்தர அளவு தோல் மற்றும் பாதணி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை விரிவுபடுத்தவதற்கு வசதியளித்தல

# 06

# கைத்தொழில் பதிவுப் பிரிவு

## 6.1 முன்னுரை

கைத்தொழில் பதிவுப் பிரிவின் பிரதான இலக்கு 1990ஆம் ஆண்டு 46ஆம் இலக்க கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின் கீழ் அனைத்துத் தயாரிப்பு கைத்தொழிற்துறையினரையும் பதிவுசெய்தல் ஆகும். அதற்கமைவாக தயாரிப்புக் கைத்தொழில் தொழில்முயற்சியை மேற்கொள்ளும் ஒவ்வொரு நபரும், அவர்களுடைய கைத்தொழிற்சாலையை கைத்தொழில் அமைச்சின் கீழ் பதிவுசெய்தல் வேண்டும். அவர்களுடைய கைத்தொழில் திருப்திகரமாக இருந்தால் கைத்தொழில் அமைச்சினால் பல்வேறு பரப்புகளில் இருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்,

தற்போது பதிவுசெய்யப்பட்டுள்ள கைத்தொழிற்சாலைகள் கீழ்வரும் பிரதான 9 வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- 31 - உணவு, குடி பானம் மற்றும் புகையிலைத் தயாரிப்புகள்
- 32 - துணி, ஆடைகள் மற்றும் தோற்பொருட் தயாரிப்புகள்
- 33 - மரம், மரம் சார்ந்த பொருட் தயாரிப்புகள்
- 34 - கடதாசி மற்றும் கடதாசிப் பொருட் தயாரிப்புகள்
- 35- இரசாயன, பெற்றோலியம், இறப்பர், பளாஸ்டிக் பொருட் தயாரிப்புகள்
- 36 - உலோகம் அல்லாத பொருட்கள் மற்றும் கனியப் பொருட் தயாரிப்புகள்
- 37 - உலோக அடிப்படைப் பொருட் தயாரிப்புகள்
- 38 - உலோக நிர்மாணப் பொருட்கள், பொறிகள் மற்றும் போக்குவரத்து உபகரணத் தயாரிப்புகள்,
- 39 – மேலே குறிப்பிடப்படாத ஏனைய தயாரிப்புகள்

கைத்தொழல் அமைச்சின் கீழ் பதிவதன் ஊடாக, இந்தக் கைத்தொழிற்துறைகளின் தற்போதுள்ள நிலையை அறிந்து கொள்வதற்கும், எதிர்காலத்தில் சரியான உபாயமார்க்கத்தைச் செயற்படுத்த சரியான முடிவுகளை எடுப்பதற்கும், தற்போதுள்ள சட்டத்தை சிறந்த முறையில் உருவாக்க உதவுகின்றதுடன், கைத்தொழிற்துறை பற்றி புள்ளிவிபரங்கள் பற்றிய விரிவான தரவுத்தளத்தை உருவாக்க எங்களுக்கு தகவல்களை வழங்குகின்றது.

பதிவுசெய்யப்பட்ட கைத்தொழில் தொழில்முயற்சிகளினதும் அனைத்து விபரங்களும் dBase III தரவுத்தளத்தில் பராமரிக்கப்படுகின்றது. இதில் ஆரம்பத்தில் பதிவுசெய்தல் கணனியல்லாத முறைமையின் ஊடாக மேற்கொள்ளப்பட்டதுடன், அத்தகவல்களையும் தற்போது 3380 உருவகங்களின் விபரங்கள் தளவுத்தளத்தில் காணப்படுகின்றன.

கைத்தொழில் அமைச்சின் கீழ் 30 செப்டெம்பர் 2022 வரை 3380 தயாரிப்பு கைத்தொழிற்சாலைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.




*மூலம் : கைத்தொழில் பதிவுப் பிரிவு*

**இந்த அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கைத்தொழில்களின் பரம்பல்**




*மூலம் : கைத்தொழில் பதிவுப் பிரிவு*

## 6.2. முன்னேற்றம் (30 செப்டெம்பர் 2021 அன்று)

01 ஜனவரி 2022இல் இருந்து 30 செப்டெம்பர் 2021 வரை கைத்தொழில் அமைச்சுக்கு 157 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன், .இதில் 121 கைத்தொழில் முயற்சிகள் மாத்திரம் கீழ் பதிவுசெய்யப்பட்டது.

| துறை | எண்ணிக்கை |
|---|---|
| 31 - உணவு, குடி பானம் மற்றும் புகையிலைத் தயாரிப்புகள் | 29 |
| 32 - துணி, ஆடைகள் மற்றும் தோற்பொருட் தயாரிப்புகள் | 15 |
| 33 - மரம், மரம் சார்ந்த பொருட் தயாரிப்புகள் | 4 |
| 34 - கடதாசி மற்றும் கடதாசிப் பொருட் தயாரிப்புகள் | 7 |
| 35 - இரசாயன, பெற்றோலியம், இறப்பர், பிளாஸ்டிக் பொருட் தயாரிப்புகள் | 26 |
| 36 - உலோகம் அல்லாத பொருட்கள் மற்றும் கனியப் பொருட் தயாரிப்புகள் | 4 |
| 37 - உலோக அடிப்படைப் பொருட் தயாரிப்புகள் | 5 |
| 38 - உலோக நிர்மாணப் பொருட்கள், பொறிகள் மற்றும் போக்குவரத்து உபகரணத் தயாரிப்புகள், | 29 |
| 39 – மேலே குறிப்பிடப்படாத ஏனைய தயாரிப்புகள் | 2 |
| **மொத்தம்** | **121** |

*மூலம் : கைத்தொழில் பதிவுப் பிரிவு*

2022 வருடத்தினுள் இதுவரை பதிவுசெய்துள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறிப்பிட்டளவில் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், இந்த எண்ணிக்கையை 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த எண்ணிக்கையினை வெளிப்படுத்துகின்றது.

இந்த வருடமாகும் போது Manual முறையினை ஒன்லைன் முறைமையாக மாற்றுவதற்கான நடவடிக்கையினை அமைச்சு எடுத்துள்ளதுடன், அதற்கான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

1990ஆம் ஆண்டு 46ஆம் இலக்க கைத்தொழில் ஊக்குவிப்பு சட்டத்தின் திருத்தத்தில் கைத்தொழில்களை பதிவுசெய்வதற்கான செயற்பாட்டினை வினைத்திறனுடையதாகவும் மற்றும் வலுவுள்ளதாகவும் மாற்றுவதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.




மூலம் : கைத்தொழில் பதிவுப் பிரிவு

## 6.3 எதிர்காலத் திட்டங்கள - 2023

அமைச்சினுள் ஒன்லைன் கைத்தொழில் பதிவுசெய்யும் முறை உள்ளது. அத்துடன் நாடு முழுவதற்குமான பரந்தளவிலான தேசிய தரவுத்தளத்தினை உருவாக்குவதற்கான தேவைப்பாடு அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்தகாலப் பகுதியினுள், நேரவிரயமின்றி அல்லது காலதாமதமின்றி மக்களுக்கு அவசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த செயற்பாட்டின முழுமையாக வினைத்திறன் மற்றும் செயற்திறன் உடையதாக மேம்படுத்துத்துவதற்கு கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் பங்களிப்புடன் இந்தக் கூட்டம் NEDA வில் நடைபெற்றது. கலந்துரையாடலில் எதிர்காலத்தில் குறித்துரைத்த ஒப்புதலுடன் முன்னோக்கி செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது

# 07

# கருத்திட்ட முகாமைத்துவ அலகு

## 7.1 முன்னுரை

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் வரும் கருத்திட்ட முகாமைத்துவ அலகு கீழ்வரும் இரண்டு கடன் திட்டங்களை அமுல்படுத்துகின்றது.

1. சிறிய மற்றும் நுண் கைத்தொழிற்துறைத் தலைவர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் கருத்திட்டம் III சுழற்சி நிதியம் (SMILE III Revolving Fund) மற்றும்

2 சூழல் விரும்பும் தீர்வுகளுக்கான நிதிக் கருத்திட்டம் II (E-Friends II) எனும் இரு கடன் திட்டங்கள் நாடு முழுவதிலுமுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்காக செயற்படுத்தப்படுகின்றது.

**1. சிறிய மற்றும் நுண்நிலைக் கைத்தொழிற்சாலைத் தலைவர் மற்றும் தொழில்முயற்சியாளர் ஊக்குவிப்புக் கருத்திட்டம் 111 – சுழற்சிநிதியம்**

புதிய தொழில்முயற்சிகளைத் தொடங்குவதற்கு, அவர்களின் உற்பத்தித்திறனை அல்லது உற்பத்தியினை அதிகரிப்பதற்கு, உற்பத்திப் பொருட்களின் தரத்தினை அதிகரிப்பதற்குக் குறைந்த வட்டி வீதத்தில் கடன்களை வழங்குவதற்கு SMILE III சுழற்சி நிதியம், உருவாக்கப்பட்டுள்ளது. அத்தோடு இக்கடன்திட்டம், நிறுவனத்தின் இயலளவினையும், உற்பத்தித்திறன் அபிவிருத்தியினையும் சிறிய மற்றும் நுண்பாகத் தொழில்முயற்சியாளர்கள் மேற்கொள்வதற்கும் உதவும். இந்தக் கருத்திட்டம் நிதி அமைச்சின்

ஆலோசனையுடன் கீழ்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, 2012 மே 01ஆம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

இலக்கு

- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு நிதியியல் உதவிகளை வழங்குதல் அல்லது பொருளாதார ரீதியாக அல்லது நிதியியல் ரீதியாக பயனுள்ள கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு உதவுதல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு அவர்களின் முகாமைத்துவ, கணக்கியல் மற்றும் தொழில்நுட்பத் திறனை அபிவிருத்தி செய்வதற்கு மூலதனத்தை வழங்குதல்.
- இடைநிலை நிதியியல் நிறுவனங்களின் நிறுவன இயலளவை பலப்படுத்தல்.

இந்தக் கடன்கள் 10 பங்குபற்றும் கடன் நிறுவனங்களின் (இலங்கை வங்கி, மக்கள் வங்கி , பிரதேச அபிவிருத்தி வங்கி, கொமர்சல் வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, செலான் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி மற்றும் டிஎப்சீசீ வங்கி, சணச வங்கி) ஊடாக மீளளிப்புச் செய்யப்படுகின்றது.

**2. சுற்றாடல் நட்புடனான தீர்வுகள் நிதியம் II - சுழற்சிநிதியம் கருத்திட்டம் (E-Friends II) சுழற்சி நிதிக் கடன் திட்டம**

சுற்றாடல் நட்புடனான தீர்வுகள் நிதியம் II சுழற்சி நிதிய கடன் முறைமை குறைந்த ஆகுசெலவுக் கடன்களை தொழில்முயற்சியாளர்களுக்கு, அவர்களுடைய தயாரிப்பின் காரணமாக ஏற்படும் சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் வலுச்சக்தி நுகர்வு, கழிவு முகாமைத்துவம், வளத்தை மீளப் பெறுதல் மற்றும் சேமிப்பு போன்ற சூழல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கும், மாசுறுதலைக் கட்டுப்படுத்துவதற்கும் தீர்வினைக் காண்பதற்காக வழங்குகின்றது. இந்தக் கருத்திட்டம் கைத்தொழிற்துறைகள் தேசிய சுற்றாடல் சட்டத்துடன் இணங்கும் வகையிலான ஒழுங்குவிதிகள் மற்றும் நியமத்துடன் இணங்குவதற்கும் உதவுகின்றது.

இந்தக் கருத்திட்டம் நிதி அமைச்சின் ஆலோசனையின் கீழ் உப கடன்களை 11 பங்குபற்றும் கடன் நிறுவனங்களின் (இலங்கை வங்கி, மக்கள் வங்கி , பிரதேச அபிவிருத்தி வங்கி,

கொமர்சல் வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, செலான் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி மற்றும் DFCC வங்கி, லங்கா ஓரிக்ஸ் லீசிங் பைனான்சிங், பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பைனாஸ் பிஎல்சி ) ஊடாக மீளளிப்பு செய்யப்படுவதுடன், இந்த மீளளிப்பு 2018இல் இருந்து வழங்கப்படுகின்றன.

**7.2 முன்னேற்றம் (30 செப்டெம்பர் 2022 அன்று))**

(1) சிறிய மற்றும் நுண்நிலைக் கைத்தொழிற்சாலைத் தலைவா் மற்றும் தொழில்முயற்சியாளா் ஊக்குவிப்புக் கருத்திட்டம் 111 – சுழற்சிநிதியம்

இந்த வருடத்திற்கான ஒதுக்கீடு ரூபா 600 மில்லியன் ஆவதுடன், கருத்திட்ட முகாமைத்துவ அலகு 33 உப கருத்திட்டங்களுக்குப் பங்குபற்றும் 10 கடன் நிறுவனங்களின் ஊடாக ரூபா 293.4 மில்லியனை வழங்கியுள்ளது.

(2) சுற்றாடல் நட்புடனான தீர்வுகள் நிதியம் II - சுழற்சிநிதியம் கருத்திட்டம் (E-Friends II) சுழற்சி நிதிக் கடன் திட்டம்

இந்த வருடத்திற்கான ஒதுக்கீடு ரூபா 400.00 மில்லியன் ஆவதுடன், கருத்திட்ட முகாமைத்துவ அலகு 06 உப கருத்திட்டங்களுக்கு மேற்குறிப்பிட்ட பங்குபற்றும் கடன் நிறுவனங்களின் ஊடாக ரூபா 92 மில்லியனை வழங்கியுள்ளது.

## 7.3. எதிர்காலத் திட்டம் - 2023

**1. சிறிய மற்றும் நுண்நிலைக் கைத்தொழிற்சாலைத் தலைவர் மற்றும் தொழில்முயற்சியாளர் ஊக்குவிப்புக் கருத்திட்டம் 111 – சுழற்சிநிதியம்**

2023ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு ரூபா 2000 மில்லியன் ஆவதுடன், கருத்திட்ட முகாமைத்துவ அலகு 200 உப கருத்திட்டங்களுக்குப் ஊடாக வழங்குவதற்கும், அதனூடாக 700 தொழில்வாய்ப்புகளை உருவாக்குதல்.

**2..சுற்றாடல் நட்புடனான தீர்வுகள் நிதியம் II - சுழற்சிநிதியம் கருத்திட்டம் (E-Friends II) சுழற்சி நிதிக் கடன் திட்டம்**

2023ஆம் ஆண்டுக்கு ரூபா 100 மில்லியனைக் கோரியுள்ளதுடன் கிட்டத்தட்ட 60 உப கருத்திட்டங்களுக்கு அவற்றினை விடுவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கடன் திட்டத்தின் கீழ் வள சேமிப்பு, வள மீட்டு, ஏனைய கைத்தொழிற்சாலைகளின் கழிவுகளை மீள்சுழற்சி செய்தல், கழிவு நீர் முகாமைத்துவம், மீள்சுழற்சி மற்றும் வலுச்சக்தி சேமிப்பு என்பவற்றுக்கு நிதியுதவியளிப்பதன் ஊடாக சூழல் விரும்பி கைத்தொழில் சுற்றாடலை உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

# 08

# அரச தொழில்முயற்சி மற்றும் மறுசீரமைப்பு பிரிவு

## 8.1 முன்னுரை

### தொலைநோக்கு

2035இல் அரச தொழில்முயற்சியின் நிலைபேற்றை உறுதிப்படுத்தல்

### செயற்பணி

அரச தொழில்முயற்சிகளின் நிர்வாகக் கட்டமைப்பை ஒழுங்குமுறைப்படுத்தல், போட்டித்தன்மையுள்ள வணக சூழலுக்கு உகந்த வகையில் தயாரிப்பு மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் இயலளவு மற்றும் தரத்தினை மேம்படுத்தவதற்கு அவசியமான வழிகாட்டல், ஒருங்கிணைத்தல் மற்றும் பின்னூட்டலை மேற்கொள்ளல்.

### இலக்கு

- இலாபத்தை அடையக்கூடிய சாத்திய நிலையில் உள்ள செயற்படாதுள்ள அரச தொழில்முயற்சிகளை மீண்டும் செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவருதல்.

- தற்போது நட்டத்தில் இயங்கும் மற்றும் இலாபத்தை ஈட்டுவதற்கு சாத்தியமில்லாத அரச தொழில்முயற்சிகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அரச தொழில்முயற்சியின் தயாரிப்பு நடவடிக்கைகளுக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல், தயாரிப்பு செயல்பாட்டின் முன்னேற்றம் மற்றும் பெறுமதி சேர்ப்பு மூலம் தயாரிப்புகளின் அளவு மற்றும் தரத்தினை மேம்படுத்துவதன் ஊடாக இலாபத்தை உச்சப்படுத்தல்.
- அரச தனியார் பங்குடமை முறையின் கீழ் அரச தொழில்முயற்சிகளின் நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு மற்றும் தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல்.
- தேசிய உள்நாட்டு உற்பத்திக்கு உச்சளவான பங்களிப்பினை வழங்குவதற்கு அரச தொழில்முயற்சிகளை கொண்டு நடாத்தல்.
- அரச தொழில்முயற்சிகளின் பௌதீக மற்றும் மனிதவளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குதல்.

## அரச வியாபார மற்றும் மறுசீரமைப்பு பிரிவினால் செய்யப்படும் பிரதான பணிகள்

- அரச தொழில்முயற்சிகளுக்குரிய நிர்வாக நடவடிக்கைகளின் மேற்பார்வை, ஒருங்கிணைத்தல் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குதல்.
- அரச தொழில்முயற்சிகளுக்குரிய அபிவிருத்தி நடவடிக்கைகளின் மேற்பார்வை, ஒருங்கிணைத்தல் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குதல்.
- அரச தொழில்முயற்சிகளுக்குரிய நிர்வாக நடவடிக்கைகள்
  - அரச தொழில்முயற்சிகளுக்குரிய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்குரிய அங்கத்தவர்களை நியமித்தல்.
  - அரச தொழில்முயற்சி பணிப்பாளர் சபைக்கு அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் மேற்பார்வை அலுவலர்களை நியமித்தல்.
  - அரச தொழில்முயற்சிகளின் வருடாந்த அறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அதன் பின்னர் பாராளுமன்ற அவைக்கு சமாரப்பிப்பதற்காக அனுப்புதல்.
  - அரச தொழில்முயற்சி பணியாட்கள் குழுவை அங்கீகரிப்பது தொடர்பாக முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு விதப்புரையை சமர்ப்பித்தல்.
  - அரச தொழில்முயற்சிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையைத் தயாரிப்பதற்கு அந்த நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றல்.
  - அங்கீகரிக்கப்பட்ட பணியாட்குழுவிற்குரிய ஆட்சேர்ப்பு மற்றும் பதிவியுயர்வு நடைமுறையை தயாரித்து அங்கீகரிப்பது தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு விதப்புரைக்கு சமர்ப்பித்தல்.
  - அங்கீகரிக்கப்பட்ட பணியாட்குழுவிற்குரிய ஆட்சேர்ப்பு

மற்றும் பதிவியுயர்வு நடைமுறையை திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு விதப்புரைக்கு சமர்ப்பித்தல்.

- அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு ஏற்படும் வெற்றிடங்களுக்கு அலுவலர்களை ∴ ஊழியர்களை நிரப்புவதற்கு அங்கீகாரத்தை வழங்குதல்.

- கலைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள அரச தொழில்முயற்சிகளை கலைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- அரச தொழில்முயற்சிகயுக்குரரிய வாகனங்களின் ரூபா 200,000 மேற்பட்ட திருத்தங்களுக்கான அங்கீகாரத்தை வழங்குதல்.

- அரசதொழில்முயற்சிபணிக்குழுவிற்குரிய கொடுப்பனவுகளுக்கு முன்மொழியப்பட்ட கொடுப்பனவுகளை வழங்கவதற்கு நிதியமைச்சுக்கு விதப்புரையினை சமர்ப்பித்தல்.

- நிறைவேற்றுத் தரமுள்ள அலுவலர்கள் வார இறுதி விடுமுறை நாட்கள் மற்றும் வணிக விடுமுறை நாட்களில் சேவையாற்றுவதற்கு அனுமதியினை வழங்குதல்.

- அரச தொழில்முயற்சிகளில் சேவையாற்றும் வெளிநாட்டு நபர்களுக்கு வதிவிட விசாவினைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் வழங்கப்பட்டுள்ள விசாவினைப் புதுப்பிப்பதற்கு விதப்புரைகளை வழங்குதல்.

- தன்னார்வா ஓய்வு இழப்பீட்டு முறையினை செயற்படுத்தப்படும் அரச தொழில்முயற்சிகளுக்கு மீண்டும் பணியாட்கைள ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- அரச தொழில்முயற்சி சேவைகளில் ஈடுபட்டிருக்கும் அலுவலர்களினால் தனிப்பட்ட வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்வதற்கு கோரப்படும் விடுமுறைகளுக்கு அங்கீகாரத்தை வழங்குதல்.

- அரச தொழில்முயற்சிகளுக்கு புதிய வாகனங்களை கொள்வனவு செய்தல் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் வேண்டுகோள்களுக்கு அரச தொழில்முயற்சி திணைக்களத்திற்கு விதப்புரையினை வழங்குதல்

- அரச தொழில்முயற்சிகள் தொடர்பாக வழங்கப்படும் முறைபாடுகளி தொடர்பாக அவசியமான சந்தர்ப்பங்களில் விசாரணைகளை மேற்கொண்டு பணிப்பார் சபைக்கு விதப்புரையை சமர்ப்பித்தல்.

- அரச தொழில்முற்சி நடவடிக்கைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு விசாரணை தொடர்பாக அவசியமான வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல்களை மேற்கொள்ளல்.

- அரச தொழில்முயற்சிகளினால் சமர்ப்பிக்கப்படும் பணிப்பாளர் சபை தீர்மானங்களை கற்கைசெய்து, அதில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியமான தீர்மானங்கள் தொடர்பாக

செயலாளருக்கு விதப்புரைக்கு சமர்ப்பித்தல்.

- அரச தொழில்முயற்சிகளினால் வருடாந்தம் சமர்ப்பிக்கப்படும் செயற்பாட்டு திட்டம், பெறுகைத் திட்டம், நிதி அதிகாரங்களை சாட்டுதல் செய்யும் கடிதம், பயிற்சி திட்டம், வரவுசெலவு ஆவணம் மற்றும் வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரித்தல் போன்றவற்றுக்கு அந்த நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றுதல்.

- ஜனாதிபதி செயலகம், அரச தொழில்முயற்சிகளுக்கான குழு, அமைச்சரவை ஆலோசனைக் குழு, பொது முறைப்பாட்டு குழு, அரச தொழில்முயற்சி தினைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம் உட்பட அரச தொழில்முயற்சி தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் அனைத்து நிறுவனங்களுக்கும் தகவல் அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பித்தல்.

- தகவல் அறியும் சட்டத்திற்கு அமைவாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கு உரிய தகவல்களை சமர்ப்பித்து மேலதிக செயலாளருக்கு (வலயம்) சமர்ப்பித்தல்.

## அரச தொழில்முயற்சிகளுக்குரிய அபிவிருத்தி நடவடிக்கைகள்

திறைசேரியினால் வழங்கப்படும் ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்குரிய நடவடிக்கை,

- கருத்திட்ட முன்மொழிவை தயாரிப்பதற்கு அமைச்சின் திட்டமிடல் பிரிவு மற்றும் உரிய அரச தொழில்முயற்சியுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அரச தொழில்முயற்சி கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரித்து சமர்ப்பித்தன் பின்னர் அதனை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு விதப்புரையினை திட்டமிடல் பிரிவுக்கு வழங்குதல்.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதியை / ஒப்புதலைப் பெற்றதன் பின்னர், அது தொடர்பாக அரச தொழில்முயற்சிக்கு அறிவித்து, அதன் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு அறிதித்தல்.
- கருத்திட்டத்திற்குரிய தொழில்நுட்ப மதிப்பிட்டுக் குழு, கருத்திட்டக் குழு, சாத்தியக்கூறு கற்கைக் குழு, ஆலோசனைக் குழு என்பவற்றை நியமிப்பதற்குரிய அரச தொழில்முயற்சி மற்றும் அமைச்சின் பெறுகைக் பிரிவுடன் ஒருங்கிணைத்தல்.
- கருத்திட்டத்திற்குரிய செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதற்கு அரச தொழில்முயற்சிக்கு அவசியமான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
- செயற்பாட்டு திட்டத்திற்கு அமைவாக கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தியாகும் வரை திட்டமிடல் பிரிவுடன் இணைந்து மாதாந்தம் நடைபெறும் மீளாய்வுக் கூட்டத்தில் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

## அரச மற்றும் தனியார் பங்குடமை அமைப்பின் கீழ் செயற்படுத்தப்படும் அபிவிருத்திக் கருத்திட்டம்

- மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் கருத்திட்டம் தொடர்பாக சமாந்தர அமைச்சு, உரிய அரச கருத்திட்டம் மற்றும் ஏனைய அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்மானத்திற்கு வருதல்.
- சாத்தியக்கூறு கற்கையை மேற்கொள்வதற்கு அவசியமாயின், அரச தொழில்முயற்சியுடன்

இணைந்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

- கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரைவ விஞ்ஞாபனத்தை தயாரித்து அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல்.
- அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர், கருத்திட்டத்திற்கு அவசியமான கருத்திட்டக் குழுவை நியமிப்பதற்கு அரச நிதித் திணைக்களத்திற்கு பெயர் முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.
- கருத்திட்டத்திற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்படும் கலந்துரையாடல் குழுவினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரச நிதித் திணைக்களத்திற்கு அறிவித்தல்.
- கருத்திட்டக் குழு மற்றும் அமைச்சரவையினால் கலந்துரையாடல் குழு நியமிக்கப்பட்டதன் பின்னர், கருத்திட்டக் குழு கூட்டம் மற்றும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்குரிய அனைத்து ஒருங்கிணைத்தல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
- கருத்திட்டத்திற்குரிய செயற்பாட்டுத்திட்டத்தை தயாரித்தல்.
- கருத்திட்டக் குழுவின் விதப்புரைக்கு அமைவாக இலட்சியத்தை கோரும் ஆவணங்கள் மற்றும் விபரமான கருத்திட்ட முன்மொழிவைக் கோரும் ஆவணங்களை கோருவதற்கு உரிய பத்திரிகை அறிவித்தலை தயாரித்தல்.
- இலட்சியத்தை கோரும் ஆவணங்கள் மற்றும் விபரமான கருத்திட்ட முன்மொழிவைக் கோரும் ஆவணங்களை கோருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இலட்சியத்தை கோரும் ஆவணங்கள் மற்றும் விபரமான கருத்திட்ட முன்மொழிவைக் கோரும் ஆவணங்களை கோருவதற்கு உரிய தொழில்நுட்ப மற்றும் நிதி மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு அவசியமான ஒருங்கிணைத்தலை மேற்கொள்ளல்.
- கேள்விக் முன்னான கூட்டத்தை ஒருங்கிணைத்தல்.
- மதிப்பீட்டு நடவடிக்கைகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட தகைமை பெற்ற முதலீட்டு நிறுவனம் மற்றும் அரச தொழில்முயற்சியினால் கையொப்பமிட வேண்டிய ஒப்பந்தத்தை தயாரித்தல் மற்றும் அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு சட்டப் பிரிவு மற்றும் சட்டமா திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- முதலீட்டு நிறுவனத்தை தேர்ந்தெடுத்ததன் பின்னர் அரச தொழில்முயற்சி மற்றும் முதலீட்டு நிறுவனத்துடன் கையொப்பமிடல் நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தல் மற்றும் ஒருங்கிணைத்தலை மேற்கொள்ளல்.

# 09

# புடவைக்கைத்தொழில் மற்றும் உள்ளுர் ஆடைகள் உற்பத்தி மேம்பாட்டு பிரிவு

## 9.1 முன்னுரை

ஆடைக்கைத்தொழில் மற்றும் உள்ளுர் ஆடைகள் உற்பத்தி மேம்பாட்டு பிரிவின் உரிய கடமைகளும் செயற்பாடுகளும் பின்வரும் அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1. புடவைக் கைத்தொழில் திணைக்களம் (னுவுஐ)
2.. இலங்கை புடவைக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவனம். (ளுடுஐவுயு)
3. தேசிய வடிவமைப்பு நிலையம் (னேுஊ)
4. லங்கா சலுசல லிமிடட்.
5. கைத்திறன் அபிவிருத்தி சபை. (லக்சலா)

## குறிக்கோள்கள்

1. உள்நாட்டு ஆடை ஏற்றுமதியை 2025 ற்குள் அதிகரித்து 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் கூடுதல் வருவாய் ஈட்டுதல்.
2. 2025 ஆண்டிற்குள் கிராம அளவில் 500 சிறிய அளவிலான ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவி ஆடைத்தொழிலை விட்டு வெளியேறிய 9000 ஆடைத்தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குதல்.
3. தேசிய பாரம்பரியத்திலிருந்து மாற்று வடிவமைப்புகளுடன கூடிய பத்திக் தொழில்துறையை விரிவுபடுத்தி சந்தை வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் 2025 ஆம் ஆண்டில் 50மூ த்தால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவருதல்.
4. 2025 ஆம் ஆண்டில் 40மூ நுகர்வோரைக் கவரும் வகையில் புதிய வடிவங்கள் மற்றும் வண்ணங்களுடன் எளிதாக அணியும் உடைகள் என்னும் எண்ணக்கரு மூலம் கைத்தறி தொழிலை விரிவுபடுத்தல்.
5. 2025ல் பல்கலைக்கழகங்கள் உட்பட தொழில்நுட்ப தொழில்கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியின் பயிற்சிகளை 60மூ த்தினால் அதிகரிப்பதன் மூலம் தரமான மற்றும் திறமையான தொழிற்படையினை உறுதி செய்தல்.
6. 2022 ஆம் ஆண்டிற்குள் மின்னிலத்திரனியல் தளத்தை (இ-பிளாட்போர்ம்) நிறுவுவதன் மூலம் பத்திகஇ கைத்தறி மற்றும் ஆடைத்தொழிலுக்கு சாதகமான சூழலை உருவாக்குதல்.

7. 2025 ஆம் ஆண்டிளவில் பத்திக்இ கைத்தறி மற்றும் ஆடை தயாரிப்பு செயன்முறையை 50மு வீதத்தால் அதிகரிக்கும் வகையில் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல்.

8. தொழில்நுட்பம் மற்றும் தொழிற்திறன்கள் உட்பட தொடர்புடைய திறன்களைக் கொண்ட இளைஞர்கள் மற்றும் பெரியவர்களுக்கு 50இ000 புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்.திருப்திகரமான மற்றும் வசதியான வணிகச் சூழலை உருவாக்குவதன் மூலம் 5000 புதிய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல

## 9.2 முன்னேற்றம் (30 செப்டெம்பர் 2022 வரை)

2022ம் ஆண்டிற்குரிய வரவுசெலவு திட்ட மதிப்பீட்டின் படி 50 மில்லியன் ரூபாயும்இ வரவுசெலவு திட்டத்தின் முன்மொழிவிற்கு இணங்க 1000.00 மில்லியன் ரூபாயும் உள்ளுர் ஆடை உற்பத்தி மேம்பாட்டிற்கென புடவைக்கைத்தொழில் மற்றும் உள்ளுர் ஆடை உற்பத்தி மேம்பாட்டு பிரிவிற்கு இவ்வருடம் ஒதுக்கப்பட்டது. திறைசேரியின் வழிகாட்டலகளிற்கும் அறிவுறுத்தல்களிற்கும் இணங்க ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூபாய் 900 மில்லியன் குறைக்கப்பட்டு ரூபாய் 150 மில்லியன் இப்பிரிவிற்கென தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது.இதற்கிணங்க செயற்பாட்டு திட்டமானது மீளமைக்கப்பட்டு பின்வரும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

### 1. பத்திக் உற்பத்திகள் மேம்பாட்டு திட்டம்

தற்போது 25 பத்திக் பயிற்சி நிலையங்கள் 15 மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கென 20 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2. கைத்தறி நெசவு கிராமத் திட்டம்

இத்திட்டதின் கீழ் 08 மாகாணங்களில் 15 கைத்தறி நெசவு உற்பத்தி கிராமங்களிற்கு நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்குவதற்கும் மற்றும் பொது உற்பத்தி நிலையங்களிற்கு பொது வசதிகளை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களிலிருந்து 10 உற்பத்தியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தேவையான உபகரணங்கள் வழங்குதலும் மேலும் மின்சாரத்தில் இயங்கக்கூடிய

வார்பு இயந்திரம் உட்பட ஏனைய இயந்திரங்கள் தெரிவு செய்யப்பட்ட இக்கிராமங்களின் எல்லைகளிற்கு உட்பட்ட பொது உற்பத்தி நிலையங்களிற்கு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென ரூபா 27 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 3. சிறிய அளவிலான ஆடைத்தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான திட்டம்

உள்ளுர் ஆடை உற்பத்தியை மேம்படுத்தவும் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும்இ ஆடைகளின் இறக்குமதியை கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும் 40 சிறிய அளவிலான ஆடைத்தொழிற்சாலைகளை அமைக்க இத்திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது.எனினும் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை காரணமாகவும் அரச செலவீனங்களை கட்டுப்படுத்தும் நோக்குடனும்இ அன்னிய செலாவணி பற்றாக்குறை காரணமாக தையல் இயந்திரங்களை இறக்குமதி செய்வது கடினமான காரியமாக செயற்பாடாக காணபபட்டமையாலும் இத்திட்டமானது நிறுத்தப்பட்டது.இத்தட்டத்திற்கென ரூபா 98 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்நது.

### 4. சந்தைப்படுத்தல் மேம்பாட்டுத்திட்டம

பத்திக், கைத்தறி நெசவு மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தியாளர்களின் விற்பனையை மேம்படுத்தும் நோக்கத்துடன் இரண்டு விற்பனை சந்தைகளும் ஓர் ஆடைக்கண்காட்சியும் இத்திட்டதின் கீழ் நடாத்த திட்டமிட்டமிடப்பட்டிருந்நது.இத்திட்டங்கள் அனைத்தும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதற்கென ரூபா 3.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

விற்பனை மேம்பாட்டு கண்காட்சி 12.01.2022 மற்றும்13ம்திகதிகளில் வடமாகாணகைத்தொழில் திணைக்களத்தால் நடாத்தப்பட்டது



## 9.3 எதிர்காலத்திட்டங்கள் - 2023

1. உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பெயர் முத்திரை பொதிக்கப்பட்ட ஆடை உற்பத்திகளுக்கென பயன்படுத்தப்படும் மூலப்பொருட்டகள் மற்றும் அதற்கென பயன்படுத்தப்படும் பாகங்கள் என்பவற்றிற்கான விதிக்கப்பட்ட இறக்குமதி தடைகளை நீக்குவதும் வரிச்சலுகைகளை வழங்குவதும்.
2. சிறிய அளவிலான ஆடைத்தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம் மேலதிக அன்னிய செலாவணியை 2025ம் ஆண்டளவில் ஈட்டுதல்.
3. இத்திட்டத்தின் கீழ் 2023ம் ஆண்டளவில் 40 சிறிய அளவிலான ஆடைத்தொழிற்சாலைகளை பாரிய ஆடைத்தொழிற்சாலைகளிற்கு அருகில் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டமானது தற்போதைய நாட்டின் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொள்கையில் கிராமப்புறங்களில் உள்ள பெண்களிற்கு வேலைவாய்ப்பை வழங்குதல்இ உள்ளூர் ஆடை உற்பத்தியை ஊக்கப்படுத்துதலஇ ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கச்செய்தல்இ மற்றும்ஆடைகளின் இறக்குமதியை கட்டுப்படுத்தல் என பல நோக்கங்களை இலக்காக கொண்டுள்ளது.
4. பத்திக் உற்பத்திகள் மேம்பாட்டு திட்டம் - உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிக கேள்வியை கொண்டுள்ள நவீன வடிவமைப்புடன் கூடிய பத்திக் உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்குடன் உயர்தரமான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பத்திக் பயிற்சிநெறிகளை தற்போது உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 300 பத்திக் உற்பத்தியாளர்களிற்கு வழங்குதல்.
5. செயற்கை சாயங்களிற்கு பதிலாக இயற்கை சாயங்களை பயன்படுத்தும் நோக்குடன் தாவரங்கள் மற்றும் ஏனைய இயற்கை பொருட்களிலிருந்து சாயங்களை தயாரிப்பதற்கும் உற்பத்தி செய்வதற்குமான ஆய்வுகளை மேற்கொள்ளல்.
6. கைத்தறி நெசவு உறபத்தியில் ஈடுபடுவோருக்கும்
7. நவீன உபகரணங்கள் வழங்குதல்.
8. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிகம் பயணிக்கும் பிரபலமான இடங்களில் உள்ளூர் ஆடை உற்பத்திகளின் விற்பனையை அதிகரிக்கும் முகமாக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். மேலும் பத்திக் கைத்தறி மற்றும் உள்ளூர் ஆடைகளுக்குரிய விற்பனை நகரங்களை உருவாக்குவதன் மூலம் சுற்றுலா பயணிகள் ஒரே இடத்தில அனைத்து பொருட்களையும் பெறக்கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்குதல் .
9. பத்திக் கைத்தறி நெசவு மற்றும் ஆடை உற்பத்தி பொருட்களை பல்வகைப்படுத்தலஇவிசேடமாக இளைஞர்களை இலக்காக கொண்டு புதிய பாணிகள் மற்றும் வடிவமைப்புகள் உருவாக்குதலஇ இவற்றை உள்நாட்டு மற்றம் வெளிநாட்டு சந்தையில் அறிமுகப்படுத்துதல்

1. மின்னிலத்திரனியல் தளத்தை (இ-பிளாட்போர்ம்) நிறுவுவதன் மூலம் பத்திகஇ கைத்தறி மற்றும் ஆடைத்தொழிலுக்குரிய உற்பத்தியாளர்கள்இ விற்பனையாளர்கள் ஏனைய பங்குதாரர்கள் என்பவர்களிற்கிடையிலான வழங்கல் சங்கிலியிற்குரிய சாதகமான சூழலை உருவாக்குதல்.

மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்களை 2023ம் ஆண்டு செயற்படுத்துவதன் மூலம் உள்ளூர் ஆடைக்கைத்தொழிலை மேம்படுத்தி அன்னியச்செலாவணி வருமானத்தை அதிகரிப்பதுடன் ஆடை இறக்குமதியை கட்டுப்படுத்த முடியும் என்பதுடன் இது நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஓர் சிறந்த தீர்வாகவும் அமையும்.

# 10

# இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழில் பிரிவு

## 10.1 முன்னுரை

இரத்தினத் தொழில் , உலகிலேயே விலைமதிப்பற்ற மற்றும் அரிய இரத்தினங்களைக் கொண்ட ஒரு சிறந்த நாடாகப் புகழ் பெற்றுள்ளது. அதேபோன்று, இலங்கையின் ஆபரணத் தொழிற்துறையானது கடந்த காலத்திலிருந்து பாரம்பரிய பாரம்பரியத்தை பாதுகாத்து நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்து வரும் ஒரு தொழில்துறையாகும். அதற்கிணங்க இலங்கையை இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில்துறையின் போட்டித்தன்மை வாய்ந்த சர்வதேச மையமாக மாற்றுவதற்கு நாம் உறுதிபூண்டுள்ளோம்.

நமது நாடு தனியாரை இணைத்துக்கொண்டு மதிப்பை அதிகரிப்பதற்கான வழிமுறைகளைப் பின்பற்றி , நகைத் தொழிலை ஊக்குவித்து , இரத்தின வளத்தையும் சுற்றுச்சூழலையும் அதிகபட்ச பாதுகாப்பு மற்றும் நவீனத்துடன் இணைத்து, இரத்தினம் மற்றும் ஆபரணத் துறையின் நிலையான வளர்ச்சிக்கு நாங்கள் முன்னிலை வகிக்கிறோம்.

இலங்கையின் மொத்த ஏற்றுமதி பெறுமதியில் கிட்டத்தட்ட %3 பங்களிக்கும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்துறையினருக்கு வரிச்சலுகைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் உட்பட தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, இதன் மூலம் அதிக அந்நிய செலாவணி வருமானத்தை ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சுற்றுலாத் துறையுடன் கைகோர்த்து, நமது நாட்டை உலகிலேயே இரத்தினக் கற்கள் வாங்குவோரின் இலக்காக மாற்றுவதும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நவீன தொழில்நுட்பம் , தரம் மற்றும் சிறந்த அலங்காரத்துடன் கூடிய நகைகளை உற்பத்தி செய்யும் தொழில்துறையை உருவாக்குவதும் எங்கள் உறுதி .

ந்த பிரிவின் கீழ்,

- தேசிய இரத்தினங்கள் மற்றும் நகைகள் ஆணையம்
- கற்கள் மற்றும் நகை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

## செயல்பாடுகள் மற்றும் பணிகள்

01. தனியார் துறையுடன் போட்டியிடும் வகையில் ஆக்கப்பூர்வமான அணுகுமுறை மூலம் இரத்தினத் தொழில்களை புதுமைப்படுத்துதல்.

02. மதிப்பு கூட்டல் இல்லாமல் இரத்தினங்களின் ஏற்றுமதியை கட்டுப்படுத்தி அதற்கு பதிலாக மதிப்பு கூட்டப்பட்ட இரத்தினம் தொடர்பான பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கவும்.

03. வெட்டி ஏற்றுமதி செய்வதற்கு பதிலாக பூர்த்திசெய்யப்பட்ட ஆபரண தயாரிப்புக்கு அவசியமான நவீன அதிதொழில்நுட்ப உபகரணத்தை வரியில் இருந்து விலக்களித்தல்.

04. இரத்தினக்கல் மற்றும் கனிய வள கைத்தொழில் சார்ந்த சூழல் மற்றும் ஏனைய அனுமதிப்பத்திர செயற்பாடுகள் தொடர்பாக மீளாய்வுக்கு உள்பட்டு இலகுவாக்கல் மற்றும் கைத்தொழிலாளர்களுக்கு அந்த சேவையை வழங்குதல்

## 10.2 முன்னேற்றம் 2022 (30.09.2022 அன்று)

- கற்கள் மற்றும் நகைகள் தொழில்துறையின் பொருளாதார பங்களிப்பு

2021 ஆம் ஆண்டில், அந்த மதிப்பு சுமார் 264.71 மில்லியன் அமெரிக்க டாலர்கள், மற்றும் செப்டம்பர் 15, 2022 இல் சம்பாதித்த ஏற்றுமதி மதிப்பு 294.92 மில்லியன் அமெரிக்க டாலர்கள்.

| ஏற்றுமதி மதிப்பு – செப்டெம்பர் 2022 15ம் திகதி | | |
|---|---|---|
| ஏற்றுமதி உற்பத்தி | ஏற்றுமதி மதிப்பு (USD மில்லியன்) | % |
| இரத்தினங்கள் | 136.79 | 46% |
| அணிகலன்கள் | 10.18 | 3% |
| வைரங்கள் | 147.95 | 51% |
| மொத்த தொகை | 294.92 | 100% |

*மூலம்: இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழில் பிரிவு*

- இலங்கையில் புதிய மாணிக்கக்கல் வைப்புகளை ஆய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
    - இலங்கையின் நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல், அதாவது 70%, ரத்தின வைப்புகளைக் கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வளங்களில் 20% மட்டுமே இதுவரை ஆய்வு செய்யப்பட்டுள்ளது.



- இந்த திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில் கிரியெல்ல மற்றும் நயாகம பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இரத்தினக்கற்களின் சாத்தியக்கூறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன .

- இந்த இரத்தினங்களை ஆராயுங்கள் திட்டம் விரைவில் செய்துக்கு இரத்தினங்கள் மற்றும் அணிகலன்கள் தொடர்புடைய தொழில் நிலை அமைச்சகம் சப்ரகமுவ பல்கலைகழகத்தின் உடன் கூட்டாக இரத்தினங்கள் நிதி ஆய்வு பற்றி இணைந்த ஒரு திட்டம் தொடங்கப்படவுள்ளது.. இதன்மூலம் , சப்ரகமுவ பல்கலைகழகம் தொடர்புடைய தொழில் பேராசிரியர்கள் மற்றும் பட்டம் மற்றும் அஞ்சல் பட்டம் வேட்பாளர்கள் திட்டங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளது.

- கற்கள் மற்றும் ஆபரணத் துறையில் தொழில்முறைத் திறனை மேம்படுத்துதல்

2022 ஆம் ஆண்டிற்கான இலக்கு மாணவர்களின் எண்ணிக்கை 555 ஆகும் இதற்கிடையில், செப்டம்பர் 15, 2022 க்குள் 570 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு படிப்பை முடித்த மாணவர்களின் எண்ணிக்கை 214 ஆகும்.

சப்ரகமுவ பல்கலைக்கழகமானது இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி நிறுவனத்தினால் தற்போது நடத்தப்படும் கற்கைநெறிகளுக்கு மேலதிகமாக இரத்தினக்கல் தொடர்பான உயர்தர சான்றிதழ் கற்கை நெறியையும் பின்னர் டிப்ளோமா பாடநெறியையும் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் இருந்து ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. இரத்னா அறிவியல் டிப்ளமோ படிப்பு இந்த ஆண்டு இறுதியில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது

மதிப்புக் கூட்டல் இன்றி ஏற்றுமதி செய்யப்படும் இரத்தினக் கற்களின் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தி, அவற்றை அதிக மதிப்பு கூட்டப்பட்ட ஏற்றுமதி வருமானம் ஈட்டும் பொருட்களாக மாற்றுதல் மற்றும் ஏற்றுமதிக்கான ஆதரவு வழங்குதல்.

ை. இரத்தினங்களின் வெப்ப சிகிச்சை மற்றும் நிறத்தை மேம்படுத்துவதற்கான வசதிகளை உருவாக்குதல். **(ந்நயவ வுசநயவஅநவெ யனெ ஊழடழச நு஌யஉநஅநவெ)**

இரத்தின வெப்பம் மற்றும் வண்ணம் சப்ரகமுவ பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய வர்த்தகர்களுக்கு ஆராய்ச்சி மற்றும் சேவைகளை வழங்குதல். ஒருங்கிணைந்த திட்டங்கள் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ைை. கற்கள் மற்றும் நகைகள் துறையில் தேவையான கைவினைஞர்கள் தொழில் வல்லுனர்களை உருவாக்க பயிற்சி வகுப்புகளை உருவாக்குதல். மூன்றாம் நிலை மற்றும் நடத்தும் பயிற்சி வகுப்புகளுக்கு தேசிய தொழில் தகுதி ( ழேஞ) பெறுவதற்கு

தொழிற்கல்வி ஆணைக்குழுவில் இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

ைைை. வெட்டப்பட்ட மற்றும் மெருகூட்டப்பட்ட இரத்தினங்களை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக முடிக்கப்பட்ட நகைகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான நவீன உயர் தொழில்நுட்ப உபகரணங்களின் இறக்குமதிக்கான வரியில் இருந்து விலக்கு.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலுக்கு உரிய உபகரணங்கள் பயன்படுத்தப்படும் என அதிகாரசபை வழங்கிய சான்றிதழின் அடிப்படையில், நகை உற்பத்தியாளர்களுக்கு உரிய வரிச்சலுகைகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- தற்போது நிலத்தடியில் இருப்பதாக நம்பப்படும் இரத்தின வளங்களை ஆய்வு செய்தல் மற்றும் நாட்டின் உற்பத்தி செயல்முறையை வலுப்படுத்தப் பயன்படுகிறது.

ை. பல்வேறு அனுமதிகள் மற்றும் அனுமதிகளைப் பெறுவதற்கான செயல்முறையை

எளிதாக்குதல் மற்றும் சேவைகளை விரைவுபடுத்துதல் சேவை வழங்கும் (**முநெ ளுவழி ளுாழி)** அமைப்பை தொடங்குதல் .

• ஒரே கூரையின் கீழ் புதிய உரிமங்களை வழங்குவது தொடர்பானது பல்வேறு உரிமங்கள் மற்றும் ஒப்புதல்களை வழங்குதல் மற்றும் பெறுதல் இந்த செயல்முறை விரைவுபடுத்தப்பட்டு தற்போது வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது .

• இதன்படி, உரிமம் விண்ணப்பிப்பவர்கள் வெவ்வேறு நிறுவனங்களுக்குச் செல்லத் தேவையில்லை மற்றும் தேசிய இரத்தினங்கள் மற்றும் நகை ஆணையம் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து 3 வாரங்களுக்குள் உரிமங்களை வழங்க ஏற்பாடு செய்யும் .

ை. நெற்பயிர்களை வெட்டி எடுப்பதற்கான கட்டுப்பாடுகளை தளர்த்தும் பணி.

- ஒரே நேரத்தில் 20 பேர்ச்சஸாக இருந்த சுரங்க அனுமதிப்பத்திரத்தை 40 பேர்ச்சஸாக அதிகரிப்பது.

- 20 பேர்ச்களுக்கு மேல் இருக்கும் போது, ஒரு பேர்ச்சிற்கு 1,000 ரூபாவாக இருந்த மேலதிக சேவைக் கட்டணம் ஒரு பேர்ச்சிற்கு 250 ரூபாவாக குறைக்கப்படும்.

- சப்பரகமுவ பல்கலைக்கழகத்தின் இரத்தினக்கல் மற்றும் ஆபரண பாடநெறியினை புதுப்பிப்பதற்கு தற்போதுள்ள ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துவதற்கு அவசியமான பங்களிப்பினை வழங்குதல்

இதற்காக இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கங்களின் நிதி பங்களிப்பின் கீழ் ரூபா 10 மில்லியன் பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்களையும் ஏனைய பண்டங்களையும் கொள்வனவு செய்வதற்கான ஒருங்கிணைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தை திருத்துவதற்கான அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்..

- இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழிலுக்கு உரிய பொது மக்கள் முறைப்பாட்டினை விசாரித்தல்.

- இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழில் துறைக்கு 2022ஆம் ஆண்டு 28 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அதில் 18ற்கு பதில் அனுப்பப்பட்டுள்ளது.

## 10.3 எதிர்கால திட்டங்கள் - 2023

- 2023 இல் இரத்தினங்கள் மற்றும் நகை ஏற்றுமதி வருவாய் அமெரிக்கா டொலர் ஒரு பில்லியனை அளவிடுவதற்கான களத்தை அமைத்தல்.
- இலங்கையில் புதிய மாணிக்கக்கல் வைப்புகளை ஆராய்ந்து மதிப்பிடுவதற்கான கூட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

மடகாஸ்கர், தான்சானியா, நைஜீரியா, மொசாம்பிக் போன்ற வெளிநாடுகளில் இருந்து கரடுமுரடான இரத்தினங்களை நாட்டிற்கு கொண்டு வந்து அவற்றின் மதிப்பை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் .

- இரத்தினங்கள் வெப்பமயமாக்கல், அதிக மதிப்புடையதாக செய்யக் கூடிய ஆய்வக வசதிகளை ஏற்படுத்தல்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்த சர்வதேச அளவிலான தொழில்முறை அறிவு நிபுணர்கள் மற்றும் தேவையான உபகரணங்களைக் கொண்ட ஆய்வகத்தை நிறுவுவதற்கு தேவையான ஆதரவை வழங்குதல் .

| | |
|---|---|
| • இலங்கையில் சர்வதேச மட்ட இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண கண்காட்சியை நடத்துதல்.<br>• வெட்டப்பட்ட மற்றும் பளபளப்பான கற்களை ஏலம் நடத்துதல். | • ரத்தினங்கள் மற்றும் நகைகள் துறையில் ஈடுபட்டுள்ள தனியார் மற்றும் பொது நிறுவனங்களுடன் முறையான ஒருங்கிணைப்பு பொறிமுறையை நிறுவுதல்.<br>• கற்கள் மற்றும் ஆபரணத் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர்களிடம் கணக்கெடுப்பு நடத்துதல். |
| • கற்கள் மற்றும் ஆபரணத் துறையில் தொழில்முனைவோரை உருவாக்க தேவையான சூழலை உருவாக்குதல்.<br>• கற்கள் மற்றும் ஆபரணத் துறையில் உள்ள போக்குகளுக்கு ஏற்ப தொழில்முறை பயிற்சி வகுப்புகளை உருவாக்குதல் மற்றும் பயிற்சியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு வேலை செய்தல் மற்றும் தேவைக்கேற்ப புதிய பயிற்சி மையங்களை நிறுவுதல். | • அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் கட்டளைகள் மற்றும் வர்த்தமானிகளை காலத்தின் தேவைக்கேற்ப திருத்துதல்.<br>• இரத்தின ஏற்றுமதிக்கான புதிய சந்தைகளை அடையாளம் கண்டு, அந்த சந்தைகளுடன் ஒப்பந்தங்களைச் செய்தல்.<br>• தொழில்துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் பொருத்தமான திருத்தங்களைச் செய்தல் |

# 11

# சிறிய மற்றும் நடுத்தளவான தொழில்முயற்சி அபிவிருத்தி நடவடிக்கைகள் பிரிவு

## 11.1 முன்னுரை

பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் உள்ளிட்ட கிராமிய கைத்தொழில் பெறுமானம் சேர்க்கும் கைத்தொழில்களாக மேம்படுத்துவதற்கு முன்னுரிமையளித்து தேவையான ஊக்கமளிப்புகளை வழங்குவதற்காக நிறுவப்பட்டுள்ள இந்த பிரிவின் மூலம் உரிய கைத்தொழில்களின் முன்னேற்றத்திற்காக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பல செயல்படுத்தப்பட்டுள்ளது.

## 11.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் 30ஆம் திகதியில்)

### கிராமிய மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் சார்ந்த மூலப்பொருள் பயிரிடும் நிகழ்ச்சித்திட்டம்

கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திகள் தொடர்பில் பயன்படுத்தப்படுகின்ற அரிதான மூலப்பொட்கள் எளிதில் கிடைக்கக்கூடியதாக அரசாங்கத்தினால் பயன்படுத்தாத மற்றும் குறைப் பயன்பாட்டுக் காணிகளைப் பயன்படுத்தி இந்த நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. கிராமியக் கைத்தொழிலுக்காக பயன்படுத்தப்படுகின்ற மூலப்பொருட்களின் பற்றாக்குறை ஏற்படுவதனைக் கட்டுப்படுத்தி உற்பத்தி செயல்முறையைத் தொடர்ந்தும் கொண்டு செல்வதற்குத் தேவையான மூலப்பொருட்களை வழங்குதல்இ மூலப்பொருட்கள் இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் அந்நிய

செலாவணி மீதப்படுத்துதல்இ உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு நியாயமான விலைக்குத் தேவையான மூலப்பொருட்களை வழங்குவதற்கு வாய்ப்பை ஏற்படுத்துதல் மற்றும் கிராமியக் கைத்தொழில் சார்ந்த பொருட்களின் உற்பத்திச் செலவுகளைக் குறைத்தல் ஆகியவை முதன்மை நோக்கமாகக் கொண்டு 400 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. முதன்மை நோக்கமாகக் கொண்டு இந்த வருடத்தின் 150 ஏக்கர் மூலப்பொருட்களைப் பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதுடன் இதுவரை 46 ஏக்கர் பயிரிடப்பட்டுள்ளது. (செலவு ரூ. 41.01 மில்லியன்).

- மகாவலி பீ வலயத்தில் 36 ஏக்கரில் 36000 சணல் செடிகள் மற்றும் பதுளை கந்தகெட்டியவில் 7.5 ஏக்கரில் 7000 செடிகள் நடப்பட்டிருப்பதுடன் ஓபநாயக்க 2 1/2 ஏக்கரில் பிரம்பு செடிகள் பயிரிடப்பட்டுள்ளன
- மகாவலி பீ. வலயத்தில் 7முஅ பாதுகாப்பான வேலி தொடர்பிலான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- ‘மாத்தறை கம்புறுப்பிட்டிய பிரம்பு மற்றும் அனுராதபுரத்தில் சணல் சாகுபடியின் பராமரிப்பு நடவடிக்கைகளான வன பாதுகாப்புத் திணைக்களம் மேற்கொண்டு வருவதுடன் காலி பெந்தோட்டை கல்லெஹபன் 1 ஏக்கருக்காக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மகாவலி பீ வலயத்தில் சணல் சாகுபடி**



***மூலம்: சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு***



*மூலம்: சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு*

## தேசிய மூலப்பொருள் முகாமைத்துவ அலகு நிறுவுதல்

பிரம்பு, பித்தளை, களிமண் மற்றும் ஏனைய சிறப்பு வாய்ந்த பாராம்பரிய மற்றும் கிராமியக் கைத்தொழில் பயன்படுத்தப்படுகின்ற மூலப்பொருட்களை பெறுவதிலுள்ள வசதிகள் விரிவாக்கம் செய்து கைப்பணிகள் உற்பத்திக்காக உள்ள கேள்வியினை விரிவுபடுத்தல் மற்றும் கிராமியக் கைத்தொழில் உற்பத்தித் துறை மற்றும் மூலப்பொருள் வழங்கும் வலையமைப்பை வலுப்படுத்தும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தேசிய அருங்கலை மன்றத்தின் கீழ் மாகாண மட்டங்களில் மூலப்பொருள் களஞ்சியசாலைகளை நிறுவி கைத்தொழிலாளர்களுக்காக தேவைப்படுகின்ற மூலப்பொருட்கள் மிகவும் நியாயமான விலைக்கு வழங்குவதற்காகத் தேவையான வசதிகள் இந்த கருத்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்படும். (செலவினம் ரூ.மி.(3.37

- புலத்சிங்ஹல மூலப்பொருள் களஞ்சியசாலை அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.
- நன்னபுராவ மற்றும் வராகொடை மூலப்பொருள் களஞ்சியசாலைகளுக்காக மற்றும் வாரகொடை மூலப்பொருள் களஞ்சியசாலைகளுக்காக மும்முனை மின்சாரம் பெறுவதற்குத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- வராகொட பயிற்சி நிலையத்திற்கு மற்றும் மூலப்பொருட்கள் முகாமைத்துவ அலகுகளுக்காகத் தேவையான உபகரணங்கள் அரச வணிக கூட்டுத்தாபனத்தின் (ளுவுஊ) மூலம் பெற்றுள்ளது.

## கிராமிய மற்றும் பாரம்பரிய கைத்தொழில் கிராமங்கள் ஒருங்கிணைந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

பாரம்பரிய மற்றும் கிராமியக் கைத்தொழில் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு பொருட்களை வழங்கக்கூடியவாறு தரமான பொருட்களை உருவாக்கும் கைத்தொழில் கிராமங்களாக உருவாக்குதல் மற்றும் அந்த கிராமங்கள் தொடர்பாக நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்தி பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி ஏற்படுத்துதல்இ மகளிர்களிடையே வேலைவாய்ப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்தக் கருத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. (செலவினம் ரூ.மி..3 75)

- 2021 வருடத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட 21 கிராமங்களில் புதிய உற்பத்தி மற்றும் வடிவமைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. (640 பயனாளிகள்)

## உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்

பாரம்பரிய மற்றும் கிராமியக் கைத்தொழில் சார்ந்த உற்பத்திக்களுக்காக உள்ள கேள்வி அதிகரித்தல், இலங்கை கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திகளுடன் தொடர்புடைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நுகர்வோர் மத்தியில் விழிப்புணர்வை மேம்படுத்துதல் மற்றும் உள்நாட்டு கைப்பணிக் கைத்தொழிலாளர்களின் வருமான மட்டத்தினை மேம்படுத்துவதனூடாக அவர்களின் வாழ்வாதாரத்தினை மேலோங்கச் செய்வதனை நோக்கமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

இதன் கீழ் , இந்த பிரிவின் மூலம் தேசிய அருங்கலை மன்றத்தினூடாக கைப்பணிக் கைத்தொழில் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விசேட தினங்களில் மற்றும் வைபங்கள் இடம்பெறும் நேரங்களில் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்துதல், மாகாண மட்டங்களில் மாதாந்தம் அல்லது காலாண்டுக்கு ஒருமுறை சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்துதல், தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பாங்காடிகளில் விசேட விற்பனை அறைகள் நிறுவப்பட்டு பொருட்கள் விற்பனை ஆகிய நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(செலவினம் ரூ.மி.(24.26

- பத்தரமுல்லை தியத்த உயன வளாகத்தை மையமாகக் கொண்டு "ளுாடைிய வுாரசளனயல" 04 உள்நாட்டு விற்பனை சந்தை வாய்ப்புகள் நடாத்தப்பட்டிருப்பதுடன் (சனவரி 06இ13 மற்றும் மார்ச் 24இ 31 ஆகிய தினங்கள்) அங்கு கைவினைஞர்கள் 85 பேருக்காக சந்தைப்படுத்தல் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**உள்ளூர் விற்பனை சந்தர்ப்பம்**





- நாரஹேன்பிட்டி "ரஜவாச" வளாகத்தை மையமாகக் கொண்டு கைப்பணிக் கைத்தொழில் உற்பத்தி சந்தைப்படுத்தல் 10 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. (மார்ச் 25,26,27 மற்றும் ஏப்ரல் 1,2,8,9,10,29,30 ஆகிய தினங்களில்) அங்கு, 20 கைவினைஞர்களுக்கு விற்பனை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- வராகொட, பல்லேகலே மற்றும் சிகிரிய "லக் ரீல்ப " விற்பனை காட்சியறைகள் திறப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.
- இந்தியாவின் ஹர்யானாவில் நடைபெற்ற சூரஜ் குண்ட் சர்வதேச கண்காட்சிக்காக கைப்பணிக் கைத்தொழில் 07 கைவினைஞர்களை பங்கேற்கச் செய்தல்.
- இந்தியாவில் நடைபெற்ற 09 ஆவது "நுனவைழைெ ழக நுஒைஅடியணணயச-2022" இல் 03 கைவினைஞர்கள் பங்கு பெற்றுள்ளனர்.
- துபாயில் நடைபெற்ற "நுஓிழ 2022" கண்காட்சிக்காக, கைப்பணிக் கைத்தொழில் கைவினைஞர்களின் வடிவமைப்புகள் "லக் ரீல்ப "வர்த்தக குறியின் கீழ் சமர்பிக்கப்பட்டுள்ளன.
- தாய்லாந்தின் பெங்கொக் தலைநகரத்தில் நடைபெறும் 55வது இராஜதந்திர செஞ்சிலுவைச் சந்தை கண்காட்சிக்காக கைப்பணிக் கைத்தொழில் கைவினைஞர்களின் ஆக்கங்கள் "லக்ரீல்ப" என்ற வர்த்தக குறியின் கீழ் சமர்பித்தல்
- 67வது "னுிடைழஅயவளை ஊாயசவைல டியணணயசஇ வுாயடையனெ" இற்கான வடிவமைப்பு மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- ஐக்கிய இராச்சியத்தின் "டீநன குழசன சுளைநச ளுனைந குநளவளையட" இற்காக (ஜூலை 23, (24ஆக்கங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன

வெளிநாட்டு விற்பனை சந்தை சந்தர்ப்பம்





*மூலம்: சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு*

- ஸ்ரீ. ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல் திணைக்களத்துடன் இணைந்து விற்பனை ஊக்குவிப்பு கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- இங்கு, சந்தைப்படுத்தல் பகுப்பாய்வு மற்றும் தொழில்முயற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவடைந்திருப்பதுடன், கருத்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் மேலும் நடைபெற்று வருகின்றன.
- ஸ்ரீ. ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல் திணைக்களத்துடன் இணைந்து விற்பனை ஊக்குவிப்பு கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு, சந்தைப்படுத்தல் பகுப்பாய்வு மற்றும் தொழில்முயற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவடைந்திருப்பதுடன், கருத்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் மேலும் நடைபெற்று வருகின்றன.
- 26 நாடுகளில் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து அந்த நாடுகளில் இலங்கை தயாரிப்புகளை விளம்பரப்படுத்துவதற்கு மற்றும் அந்த நாடுகளுக்கு ஏற்றவாறு இந்த நாட்டில் தயாரிப்புகளை மேற்கொள்வதற்காக அவசியமான

வடிவமைப்புகள் மற்றும் ஆக்கங்கள் பற்றிய தகவல்களைப் பெறவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

- தேசிய புத்தாக்க முகவாண்மையினூடாக கொரியாவில் முழசநயபு ஐவெநடடநஉவரயட ிசழிநசவல முககைஉந மற்றும் முழசநயபு டிைநெவெழைப ிசழஅழவழைப யுளளழஉயைவழைப ஆகிய நிறுவனங்களிடமிருந்து இலங்கையில் கைப்பணிக் கைத்தொழிலினை மேம்படுத்துவதற்காக தேவையான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களை மேற்கொள்வதற்குத் தேவையான ஆதரவைப் பெறுவதற்காக கருத்திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- டிஜிட்டல் தொழில்நுட்பம் குறித்து உள்ளூர் சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை விழிப்பூட்டுவதற்கு இலங்கை தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்ப முகவாண்மையின் மூலம் ளுஆநு புழ னுபைவையட என்ற பேரில் கருத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- தேசிய அருங்கலைகள் பேரவையின் 50 மாணவர்களுக்கான சந்தைப்படுத்தல் மற்றும் குசநநடயஉெைப குறித்த நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டிருப்பதுடன் தொழில்முயற்சியாளர்களுக்கான 02 செயலமர்வுகள் 110 அதிகாரிகளின் பங்கேற்புடன் நடைபெற்றது. தெரிவு செய்யப்பட்ட 11 கிராமங்களில் இந்த கருத்திட்டம் தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

**மரஞ் சார்ந்த வடிவமைப்புகள் மற்றும் புத்தாக்க நிலையத்தை நிறுவுதல்**

மரஞ் சார்ந்த வடிவமைப்புகளில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களுக்கு ஊக்கமளித்து அவர்களுக்குத் தேவையான புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் வடிவமைப்புகளின் புத்தாக்கத்துக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி,

- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவின் மூலம் இலங்கை கைப்பணிக் கைத்தொழில் சபையிடமிருந்த (லக்சல நிறுவனம்) மொரட்டுவை கட்டுபெத்த இயந்திர பயிற்சி வளாகம் 2022.09.09 ஆம் திகதி கையேற்று. மரஞ் சார்ந்த கைத்தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் நிலையமாக இதை மேம்படுத்தும் பணி நடந்து வருகிறது

- நார் தொடர்பான உற்பத்திக் கைத்தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்காக, வஸ்கடுவை மற்றும் எஹெலியகொடை ஆகிய நார் உற்பத்தி செய்யும் கிராமங்களுக்கு விடய நிபுணர்களைக் கொண்டு சென்று கள ஆய்வு மேற்கொண்டு இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து அடுத்து மேகொள்ளப்பட வேண்டிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

**தேசிய உலோகவேலை கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

இந்நாட்டில் பாரம்பரிய உலோகப் பொருட்கள் உற்பத்தித் கைத்தொழிலை மேற்கொள்ளும் கைத்தொழிலாளர்களைப் பாதுகாத்து அவர்களுக்குத் தேவையான புதிய தொழில்நுட்பம், வடிவமைப்புகள் மற்றும் உயர்தரப் பொருட்களை உருவாக்குவதற்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் உள்நாட்டு சந்தையில் போட்டியடிப்படையில் உலோகப் பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழிலாளர்களின் சிலரை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. அதனடிப்படையில், அடையாளம் காணப்பட்ட தொழில்நுட்ப மேம்பாட்டு நிகழச்சித்திட்டங்களின்

கீழ், வேபட மற்றும் எஹெலியகொட பிரதேசங்களில் தற்போது பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ள உலோகப் பொருட்கள் உற்பத்தி. இயந்திரங்களின் பழுதுபார்க்கும் பணியை ஊஜநேூஊ பல்கலைக்கழகத்தின் மூலம் மேற்கொண்டுள்ளது.

## 11.3 எதிர்கால திட்டங்கள் - 2023

இந்த பிரிவின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள அதனுடன் தொடர்புடைய பணிகள் மற்றும் கடமைகளில் சேர்க்கப்பட்டுள்ள கைத்தொழில்களின் முன்னேற்றத்திற்காக அடையாளம் காணப்பட்ட அபிவிருத்தி நிகழச்சித்திட்டங்கள் 2025 ஆம் ஆண்டு வரை தொடர்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, 2023 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் திட்டம் பின்வருமாறு.

1. கிராமியக் கைத்தொழில்களுக்காகத் தேவையான மூலப்பொருட்கள் பயிரிடும் நிகழ்ச்சித்திட்டம் (எதிர்பார்க்கப்படும் செலவு ரூ.20 மில்லியன்)

2. தேசிய மூலப்பொருள் வங்கியை நிறுவுதல் (எதிர்பார்க்கப்படும் செலவு ரூ.10 மில்லியன்)

3. மரப் பொருட்கள் தொடர்பான வடிவமைப்புகள் மற்றும் செயல்முறை நவீனமயப்படுத்தும் நிலையத்தினை நிறுவுதல் (எதிர்பார்க்கப்படுகின்ற செலவு ரூ.15 மில்லியன்)

4. கிராமியக் கைத்தொழில்களுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் (எதிர்பார்க்கப்படும் செலவு ரூ.38 மில்லியன்)

5. கிராமிய மற்றும் பாரம்பரிய கைத்தொழில் கிராமங்களின் ஒருங்கிணைந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (எதிர்பார்க்கப்படும் செலவு ரூ.12 மில்லியன்)

6. தேசிய உலோகக் கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (எதிர்பார்க்கப்படும் செலவு ரூ.05 மில்லியன்)

# நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்



# 12

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDB)

## 12.1 அறிமுகம்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை (ஐனுடீ) 1969 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.

### நோக்கு

இலங்கை முழுவதும் அனைத்து கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்தல்.

### பணி

இலங்கை முழுவதும் உள்ள அனைத்து கைத்தொழில்களையும் ஊக்குவித்தல்இ மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்திசெய்தல் ஆகியவற்றிற்கு தேவையாக அமையும் மூலோபாய தொழில்நுட்ப மற்றும் வாணிப அடிப்படையினை பெற்றுத்தருதல்.

### பிரதான இலக்குகள் / குறிக்கோள்கள்

- இலங்கையில் கைத்தொழில்களை ஊக்குவித்தல்இ மேம்படுத்துதல் மற்றும் முன்னேற்றளுக்கு துணைபுரிதல்.
- நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக தனியார் மற்றும் பொதுத்தொழில்துறை நிறுவனங்களின் முறையான ஒருங்கிணைப்புகளுக்கு துணைப்புரிதல்
- இலங்கையின் இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் தொழில்துறை ஆராய்ச்சியை வளர்ச்சிசெய்தல்இ மற்றும் கழிவுப்பொருட்களை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கான செயல்முறைகள் மற்றும் வழிமுறைகளை கண்டறிதல்.
- வெளிநாட்டுச் சந்தைகளுக்கு உள்நாட்டு பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவித்தல்
- சர்வதேச வர்த்தகம் மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கு தேவையான நடவடிக்கைகளுக்கு அல்லது தொழில்துறை வளர்ச்சிக்கு உரியமுறையில் துணைபுரிதல்.
- மூலதனம்இ கடன்இ சந்தைப்படுத்தல்இ மேலாண்மைஇ தொழில்நுட்பவசதிகள் மற்றும் சட்ட ஆலோசனை உட்பட இலங்கையில் உள்ள எந்தவொரு தொழிற்துறை அல்லது தொழிற்துறை ஸ்தாபனத்துடனும் அல்லது தொடர்புடைய விடயங்களுக்கு தேவையான சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல்.

**ஐனுடீ யின்முக்கியசெயற்பாடுகள்.:. தொழிற்பாடுகள்**

ஐனுடீ தொழில்முயற்சியாளர்களஇ தற்போது இயங்கிகொண்டிருக்கும் மற்றும் தொடக்க நிலையில் இருக்கும் கைத்தொழில்கள் போன்றவற்றுக்கு பின்வரும் முறைகளில் சேவைகளை வழங்குகிறது.

- மேலாண்மை மற்றும் தொழில்நுட்பபொறியியல் முன்னோக்குகள் பற்றிய பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகள்.
- உள்நாட்டுதொழில்களுக்கான பொறியியல் சேவைகள்இ பட்டறை மற்றும் வார்ப்பு வசதிகளை வழங்குதல்.
- தொழில்முயற்சியாளர் மேம்பாடுஇ சாத்தியமான மற்றும் நம்பிக்கைக்குரிய வணிகமுயற்சிகளுக்கு மூலோபாயத்தை உருவாக்க சேவைகளை வழங்கல்
- தொழில்முனைவோர்இ வாடிக்கையாளர்கள் மற்றும் ஐனுடீ ஊழியர்களுக்கு தொழில்துறை தொடர்பான தகவல்களை பரப்புதல் … போன்றவை.
- உள்நாட்டு உற்பத்தியிலிருந்து உலோகக்கழிவுகளை ஏற்றுமதி செய்வதற்கான பரிந்துரைகளை வழங்குதல்.
- உள்நாட்டு தயாரிப்பு மேம்பாட்டுக்கு தேவையான மூலப்பொருட்கள்இ கலவைகள் மற்றும் அறிவை கைத்தொழிலாளர்களுக்கு வழங்குதல்
- கைத்தொழில்களுக்கு தேவையான சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனையில் வசதிகளை வழங்குதல்
- உள்நாட்டு வார்ப்பு தொழிற்துறையை வளர்க்க துணைப்புரிதல் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உலோகபொருட்கள் ஏற்றுமதிக்கு பரிந்துரை மற்றும்ஒருங்கிணைப்பை வழங்குதல்

*வசதிகள் மற்றும் சேவைகள்*

1. கைத்தொழில் குடியேற்றம்
2. இறப்பர் பண்ட அபிவிருத்திச் சேவை
3. மின்னிலத்தினியல் உலோக பூச்சு சேவை
4. பொறியியல் சேவை
5. தொழில்நுட்ப ஆய்வுகூட சேவை
6. உணவு மற்றும் பானங்களின் தர அறிக் கையை வழங்குவதற்கான வசதிகள்
7. தோல் பண்ட தயாரிப்பு அபிவிருத்தி சேவை
8. பொறியியல் வார்ப்பு
9. பண்ட பரிசோதனை ஆய்வுகூட சே வை
10. லக்கம் விற்னை மத்தியநலையம்
11. உலோகம் சார்ந்த தயாரிப்புகளின் மீதிகளை வழங்கல்
12. உயர்தொழில்நுட்ப தயாரிப்பு மற்றும் உதிரிப்பாக அபிவிருத்தி சேவை

**12.2 செயல்திறன் - 2022**
**(செப்டம்பர் 15, 2022 நிலவரப்படி முன்னேற்றம்)**

2022 ஆம் ஆண்டில்இ ஐனுடீ நாட்டின் வணிக சமூகத்தை மேம்படுத்த பல்வேறு உதவி மற்றும் ஆதரவு சேவைகளை வழங்கியுள்ளது. மேலும்இ தொழில்முனைவோர் மேம்பாடு தொடர்பான உத்திகளை வடிவமைத்து செயல்படுத்தவும்இ நுண்இ சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை (ஆளுஆநுள) ஊக்குவிப்புஇ மற்றும் அபிவிருத்திக்கு சபையானது கடமையாற்றியுள்ளது. இந்நோக்கங்களை அடைவதற்கும்இ உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் சாத்தியமான வணிகங்களின் சந்தையை விரிவுபடுத்துவதற்கும்இ கைத்தொழில் அமைச்சின் ஒருங்கிணைப்புடன்இ ஐனுடீ பல்வேறு செயற்றிட்டங்களை ஆரம்பித்து செயற்படுத்தியுள்ளது.

**செப்டம்பர் 30, 2022 இன் செயற்பாட்டு முன்னேற்றம்**

| செயல்பாடு | முன்னேற்றம் |
|---|---|
| **புதிய தொழில்முயற்சிகளை உருவாக்க பங்களித்தல் )கைத்தொழில்களின் எண்ணிக்கை(** | 103 |
| தற்போதுள்ள தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்காக பங்களித்தல் )கைத்தொழில்களின் எண்ணிக்கை( | 302 |
| **தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகள்** | 262 |
| தொழில் முனைவோர் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் | 51 |
| **உலோக அடிப்படையிலான தொழிற்சாலைகளுக்கு உலோகக் கழிவுகளை மூலப்பொருளாக வழங்குதல்** | 956 ஆவு |
| இறப்பர் பொருட்கள் உற்பத்தித் தொழில்களுக்கு )200 தொழில் முனைவோர்களுக்கு (இறப்பர் கலவைகளை வழங்குதல் | 21,173 முப |
| **உணவு ஆய்வகத்தின் மூலம் உணவு பரிசோதனை அறிக்கைகளை வழங்குதல்** | 233 |
| "லக்கம்" விற்பனை நிலையத்தின் மூலம் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல் | 325தொழில்முனைவோர்கள் |
| **பொறியியல் சேவைகளை வழங்குதல்** | 260 |
| முதலீட்டாளர்களுக்காக ஐனுடீ தொழிற்பேட்டையில்ஒதுக்கப்பட்டஇடஅலகுகளின்எண்ணிக்கை | 13 |

*தகவல்: கைத்தொழில் அபிவிருத்தி சபை*

| தொழிற்பேட்டைகள் -கைத்தொழில் அபிவிருத்தி சபை | |
|---|---|
| தொழிற்பேட்டைகளின் எண்ணிக்கை | 16 |
| வணிக உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்களின் எண்ணிக்கை | 277 |
| கைத்தொழில் துறைகளின் எண்ணிக்கை | 20 |
| வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கை | 8595 |
| எதிர்பார்க்கப்படும் ஆண்டு வருவாய் )ரூ .மில்லியன்( | 52இ818 |

**சேவைகள்**

| | விளக்கம் | பயனாளிகள் / மதிப்பு |
|---|---|---|
| 1 | ஆலோசனைகள் மற்றும் தகவல்களை பரப்புங்கள் | 347 |
| 2 | பொறியியல் உதவி | 489 |
| 3 | சந்தைப்படுத்தல் வசதி | 1347 |
| 4 | வங்கிகளுடன் நிதி உதவிக்கான ஒருங்கிணைப்பு | 187 |
| 5 | தொழில்நுட்ப உதவி | 457 |
| | **மொத்தம்** | **2827** |

*தகவல்: கைத்தொழில் அபிவிருத்தி சபை*

***கைத்தொழில் குடியேற்றங்களில் கைத்தொழிற்சாலைகளை நிறுவுதல்***

*தகவல்: கைத்தொழில் அபிவிருத்தி சபை*

***பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்***

*தகவல்: கைத்தொழில் அபிவிருத்தி சபை*

வேறு கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்கள்

**(1) தேசிய கைத்தொழில் கண்காட்சி**



பொருட்கள் மற்றும் சேவைகளின் கண்காட்சி - இதன் போது உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளுக்கான தயாரிப்புகள்இ சேவைகள் மற்றும் தொழில்நுட்பங்களை உற்பத்தி செய்வதில் உள்ளூர் தொழில்களின் தகுதிகள் மற்றும் திறன்கள் வெளிப்படுத்தப்பட்டன."கர்மாந்த -2022" தேசிய கைத்தொழில் கண்காட்சி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (டீஆஐஊர்) ஆரம்பிக்கப்பட்டது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச ஆகியோர் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

(2) தேசிய கைத்தொழில் சிறப்பு விருதுகள் 2022



செழிப்பின் பார்வை" பிரகடனத்தை நோக்கமாகக் கொண்டுஇ கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட "தேசிய கைத்தொழில் சிறப்பு விருதுகள் 2022"இ கைத்தொழில்துறை மறுமலர்ச்சிக்கு வழி வகுக்கும் மற்றொரு முன்னோடிநடவடிக்கையாக" கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்சவின் யோசனைகள் மற்றும் வழிகாட்டலுடன் ஆரம்பிக்கப்பட்டு நாட்டிற்கு புத்துயிர் அளித்தது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில்

பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் வைபவம் நடைபெற்றது.

(3) ஏகல தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலைகளின் ஆற்றல் திறனை அதிகரிப்பதற்கானமுன்னோடி திட்டம்



ஏகல தொழிற் பேட்டையின் கைத்தொழில்களின் ஆற்றல் திறனை அதிகரிப்பதற்கான முன்னோடி திட்டத்தில் தொழில்நுட்ப பங்காளியாக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகமையகம் (ருளுயுஐனு) பணியாற்ற ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

(4) ழளவ- நுபெளைநெநசபைெ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மின்சார காரின் உள்நாட்டு முன்மாதிரி தயாரிப்பு



கைத்தொழில் அபிவிருத்தி சபைஇ 'ழளவ-நுபெளைநெநசபைெ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செலவு குறைந்த மின்சார கார் தயாரிப்பதற்கான உள்நாட்டு முன்மாதிரிக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்தியுள்ளது. டிலாங்கோ கார்ஸ் தனியார் நிறுவனத்தின் இணை நிறுவனர் டிலந்த மலகமுவவுடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. டிலாங்கோ கார்ஸ் தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஜப்பானிய ஆட்டோமொபைல் உற்பத்தி நிறுவனம் ஒன்றின் அனுசரணையின் கீழ் இந்த உற்பத்தி மேற்கொள்ளப்படும்.

(5) ஐனுடீ தொழிற்பேட்டை - ஏகலஇ ஜா-எல 2022.்.2023 இல் உற்பத்தித் தொழில்களில் ஆற்றல் செயல்திறனை மேம்படுத்துவதற்கான முன்னோடி திட்டம்

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமேரிக்க முகமையகத்தின் (ருளுயுஐனு) - இலங்கை எரிசக்தி திட்டமானது (மே 2021 - மே 2026) மின்சார கட்டணங்களின் செலவு-பிரதிபலிப்புத்தன்மையை மேம்படுத்தல்இ புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் அதிகரித்தல் தேவை-பக்க நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை செயல்படுத்தவிருக்கிறது. கெமோனிக்ஸ் இன்டர்நேஷனல் இந்த திட்டத்தின் செயற்பாட்டு பங்குதாரராக உள்ளதுஇ மற்றும் ஐனுடீ ஆனது ருளுயுஐனு - ளு.்டு முகமைய திட்டத்தின் ஒத்துழைப்புடன் ஜா-எல - ஏகல ஐனுடீ தொழிற்பேட்டையில் உள்ள 15 கைத்தொழில் நிறுவனங்களின் ஆற்றல்இ செயல்திறனை மேம்படுத்துவதற்கான முன்னோடி திட்டத்தை துவக்கியுள்ளது.

(6) ஐனுடீ மற்றும் மஹிந்திரா ஐடியல் லங்கா தனியார் நிறுவனத்தின் இடையிலான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது



மகிந்திரா ஐடியல் லங்கா தனியார் நிறுவனத்துடன் கைத்தொழில்துறையில் வெற்றிகரமான பயணத்தை ஆரம்பிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மஹிந்திரா வாகன உதிரிபாகங்களை உள்நாட்டிலேயே தயாரிக்கவும்இ தரக்கட்டுப்பாட்டை பராமரிக்கவும்இ மூன்றாம் தரப்பு தர உத்தரவாதத்தை வழங்கவும்

தேவையான தொழில்நுட்ப சோதனைகளை மேற்க்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

*(7). வீட்டிலேயே சவர்க்காரம் தயாரிப்பது எப்படி என்பது குறித்த பயிற்சி பட்டறை*



*வீட்டிலேயே சவர்க்காரம் தயாரிப்பது எப்படி என்பது குறித்த பயிற்சி பட்டறை கைத்தொழில் அமைச்சர் திரு. ரமேஷ் பத்திரன அவர்கள் ஐனுஉ யை பார்வையிட்டார்*

## 12.3 எதிர்காலத் திட்டங்கள் - 2023

(1) **ஐனுஉ** தொழிற்பேட்டை - ஏகலஇ ஜா-எல 2022.:.2023 இன் உற்பத்தித் தொழில்களின் ஆற்றல் செயல்திறனை மேம்படுத்துவதற்கான முன்னோடி திட்டம்

இத்திட்டம் பின்வரும் பயன்களைகைத்தொழில்களுக்கு வழங்கும்

- ஏரி சக்தியின் ஆற்றலை மேம்படுத்த (மின்சாரம்) தேர்ந்தெடுக்கப்பட்ட உயர் சக்தி பாவனைக் கொண்ட கைத் தொழில் நிறுனங்களுக்கு இலவச ஆலோசனை சேவைகள் வழங்குதல்
- தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து தொழில்துறைகளின் தொடர்புடைய அதிகாரிகள்/ஊழியர்களுக்கு இலவச எரிசக்தி மேலாளர் பயிற்சிகள்
- இலவச தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் தொழில்துறையின் பங்களிப்புடன் ஆற்றல் மற்றும் திறனை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள்
- வலு கணக்காய்வுகளுக்கு தேவையான நிதி உதவிகளை கைத்தொழில் அமைச்சினூடாக பெற்றுக் கொடுத்தல்
- சீரான பின்தொடர் சேவைகள்

(2) **இலங்கையின் கைத்தொழில்துறையினரால் காலநிலைக்கு ஏற்படுத்தக்கூடிய துலங்கல்களை துரிதப்படுத்துதல்**

தொழில்நுட்பஇ கொள்கைஇ ஒழுங்குமுறைமற்றும் நிதிக் கருவிகள் மற்றும் பொறிமுறைகளை வடிவமைத்து செயல்படுத்துவதன் மூலம்இ புதுப்பிக்கத்தக்க எரிசக்திஇ ஆற்றல் மற்றும் வள திறன் தொழில்நுட்பங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளை விரைவுபடுத்துவதற்காக இலங்கையின் கைத்தொழில் துறையின் காலநிலை மாற்ற துலங்கல்களை அளவிடுவதே குறிப்பிட்ட திட்டத்தின் நோக்கமாகும்.

(3) இலங்கையில் அறுவடைக்குப் பின்னரான வினைத்திறனை அதிகரிப்பதற்கான நடைமுறைகளை அமுல்படுத்துவதற்கு ஒரு திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

**செப்டம்பர் 30இ 2022 இல்ஜனுடீ தொழிற்பேட்டைகளின் நிலை அறிக்கையின் சுருக்கம்**

| இல | தொழிற்பேட்டைகள் | மாவட்டம் | மொத்த அலகுகள் | உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான முதலீடு (ரூ. மில்லியன்) | தற்போது இயங்கிக் கொண்டிருப்பவை | தனியார் முதலீடு (ரூ. மில்லியன்) | விற்பனைத் தொகை(ரூ. மில்லியன்) | வேலை வாய்ப்பு எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஏகல | கம்பஹா | 92 | 89.97 | 56 | 36669.5 | 25779 | 2759 |
| 2 | பல்லேகலை | கண்டி | 111 | 97.82 | 65 | 13181.6 | 18750.6 | 2010 |
| 3 | பானலுவ | கொழும்பு | 29 | 63.9 | 22 | 1154.9 | 1304.2 | 499 |
| 4 | ஹொரணை | களுத்துறை | 66 | 14.35 | 14 | 998.51 | 4295.8 | 1469 |
| 5 | வவுலுகல | களுத்துறை | 14 | 19.9 | 13 | 261.1 | 459 | 195 |
| 6 | புஸ்ஸல்லாவை | இரத்தினபுரி | 29 | 15.21 | 11 | 214 | 126.17 | 135 |
| 7 | கலிகமுவ | கேகாலை | 12 | 13.8 | 10 | 132 | 145.5 | 129 |
| 8 | புத்தல | மொனராகலை | 22 | 20 | 6 | 22.5 | 85 | 78 |
| 9 | கொட்டகலை | நுவரெலியா | 58 | 4.16 | 8 | 254.7 | 149.6 | 110 |
| 10 | கலுதாவலை | மாத்தளை | 45 | 45.3 | 14 | 164.8 | 420 | 260 |
| 11 | மிஹிந்தலை | அநுராதபுரம் | 38 | 5.04 | 3 | 3.7 | 20 | 20 |
| 12 | நாகம்பஹா | அநுராதபுரம் | 44 | 24 | 0 | 5 | 4.5 | 3 |
| 13 | பன்னலை - 1 வது நிலை | குருநாகல் | 34 | 61.29 | 17 | 365.5 | 579.39 | 285 |
| 0 | பன்னலை - 2 வது நிலை | | 9 | | 0 | 25 | - | 0 |
| 14 | லுனுவிலை | புத்தளம் | 18 | 4.9 | 12 | 83.9 | 175 | 203 |
| 15 | பூந்தோட்டம் | வவுனியா | 64 | 30.57 | 18 | 53.5 | 153.5 | 165 |
| 16 | அச்சுவேலி - 1ம் நிலை | யாழ்ப்பாணம் | 23 | 192 | 7 | 417.4 | 275 | 235 |
| | அச்சுவேலி - 2ம் கட்டம் | | 25 | 41.57 | 1 | 120 | 96 | 40 |
| | **மொத்தம்** | | **733** | **743.78** | **277** | **54127.61** | **52818.26** | **8595** |

*தகவல்: கைத்தொழில் அபிவிருத்தி சபை*

# 13

# தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை (NEDA)

## 13.1 அறிமுகம

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது (தே.தொ.மு.அ), நாட்டின் நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு (நு.சி.ந.தொ.மு) விசேட முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம், இலங்கைக்குள் தொழில் முயற்சிகளினை அபிவிருத்தி செய்யுமுகமாக அவற்றைத் முன்னேற்றுதல், ஒத்துழைப்பு வழங்கல், ஊக்குவித்தல் மற்றும் வசதிப்படுத்தல் ஆகியவற்றைச் செய்கின்றது. இது தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி, நிதிசார் வசதிப்படுத்தல், சந்தைப்படுத்தல் தொடர்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அத்துடன் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி போன்ற சேவைகளை, தொழில்முயற்சியாளர்களுக்கும் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களுக்குமென வழங்குகின்றது. தே.தொ.மு.அ. வானது தொழில் முயற்சி யாண்மை, சந்தைப்படுத்தல், வியாபாரத் திட்டமிடல், கணக்கீடு,பதிவேடுகள் பேணுதல், உற்பத்தி முன்னேற்றம் ஆகியனபற்றி இயலுமை அபிவிருத்திப் பயிற்சியளித்தலை தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கு கின்றது.

### தொலைநோக்கு

நுண், சிறிய நடுத்தர தொழில்முயற்சி களினை அபிவிருத்திசெய்து முன்னேற்றுதல், பாதுகாத்தல் மற்றும் கையாள்வதற்காக முன்னிலை வகிக்கும் முகமையாகவிருத்தல்.

### பணிக்கூற்று

ஏனைய தொழில் வல்லுநர்களுடன் ஒருங்கிணைந்து மற்றும் பங்காண்மை முறையில் சுறுசுறுப்பாகவும் வினைத்திறமை யாகவும் உற்பத்தி நோக்குடன் நு.சி.ந.தொ.மு.களின் வளர்ச்சி, நிலைபேறான தன்மை ஆகியவற்றை நிச்சயிப்பதற்கு இலங்கையிலுள்ள நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளினை அபிவிருத்திசெய்தல், முன்னேற்றுதல், பாதுகாத்தல் மற்றும் கையாள்தல்.

### நோக்கங்கள்

- இலங்கைக்குள், சிறிய, நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்திகளை ஊக்குவித்தல், முன்னேற்றுதல், மற்றும் வசதிப்படுத்துவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சி, விரிவாக்கல் மற்றும் அபிவிருத்திக்கு ஊக்கமளித்தல்.
- தே.தொ.அ.அ. இனதுஇ சட்டத்தின் நோக்கங்களை அடையுமுகமாக உள்நாட்டுத் தொழில் முயற்சி களினைச் சர்வதேசத்திற்கும், வெளிநாட்டுச் சந்தைக்கும் ஏற்ற விதமாக உட்புகுத்தும் நோக்கத் துடன், தொழில்முயற்சி வடிவமைப் பினை இலங்கைக்கு வெளியே தாபிப்பதையும், தொழிற்படுத்துவத னையும் ஊக்கமளித்துத் தூண்டுதல்.
- கைத்தொழில் மற்றும் விவசாயத் திலான வியாபாரத்தினை யும், அபிவிருத்தியினையும் கருத்தில் கொண்டு கொள்கை வகுத்தல், திட்டமிடல், அறிமுகத்திற்கான தூண்டுதலினை பொருத்தமான முறையில் வடிவமைப் பதுடன், வினைத் திறமையான ஒத்துழைப் பினையும், ஊக்குவிப் பினையும் வழங்கல்
- தொழில்நுட்பத் திறனுடன் கூடிய மனித மூலதன அபிவிருத்தியில் மக்களின் அதிகாரமளித்தலை, தொழில் முயற்சி அபிவிருத்தியினது ஒரு அவசியமான அங்கமாக்குதல்.
- அபிவிருத்தித் தேவைகளைச் சந்திப் பதற்கு வேண்டிய உட்கட்ட மைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் தொழிற்பாட்டிற்குத் தேவையான நிதி வசதியினை தொழில் முயற்சியாளர் களின் மூலமாகப்பெற வசதிகளைச் செய்தல்.
- உற்பத்தி, அபிவிருத்தி, தொழில் நுட்பவியல், கையாழுதல் மற்றும் வியாபாரக்குறி வர்த்தக மயமாக் கலுடன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை முன்னேற் றுவதற்கு ஒரு தொழில்நுட்பவியல் அபிவிருத்தி நிதியினைத் தாபித்தல்.
- பிராந்தியப் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுதல்.

## முக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள் -2022

1. இலங்கை உற்பத்தி வியாபார உள்நுளைவு.
2. நுண், சிறிய, நடுத்தர (நு.சி.ந.) தொழில் முயற்சிகளின் தரவுத் தளம்.
3. “இலங்கை உற்பத்தி” இலச்சினையை அறிமுகம் செய்தல் மற்றும் வழங்குதல்.
4. “இலங்கை உற்பத்தி” வியாபாரச் சந்தை.
5. “இலங்கை உற்பத்தி” இலச்சினை யின்கீழ் நடாத்துவதற்கு உரிமை பெற்ற கடைகளினைத் தாபித்தலை அறிமுகம்செய்தல்.
6. தொழில்முயற்சியாளர் விருது வழங்கு தல்.
7. “உபாதிதாரி வையவசாயக” உதானய நிகழ்ச்சித்திட்டம்.
8. வியாபாரக் கொத்தணி். துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.
9. பிராந்திய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.
10. தொழில்முயற்சி பற்றிய கலந்துரை யாடல் ஒன்றுகூடல்.

## 13.2 செயல்நிறைவேற்றம் ( 2022 செப்டெம்பர் மாத இறுதியியல்)

### 1. “இலங்கை உற்பத்தி” வியாபார உள்நுளைவு.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது இலங்கையின் உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்புக்களை உருவாக்குவதற்காகவும் வியாபார உள்நுளைவில் நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திகளை பதிவுசெய்தல்மூலம் சந்தைவாய்ப்புக்களை அதிகரிக்கவும் வினைத்திறமையானதும் பயனுள்ளதுமான உள் நுளைவினைத் தாபிப்பதற்காகும். இதன் பிரதானமான நோக்கமானது, வியாபாரங்களிற்கும் வியாபாரங்களிற்குமிடையிலும் (வி2வி): நுண்,சிறிய,நடுத்தர தொழில்முயற்சியாளர் களுக்கும் - பெரிய தொழில்முயற்சியாளர் களுக்குமிடையிலும்: வியாபாரங்களிற்கும் -வாடிக்கையாளர்களுக்குமிடையிலும் (வி2வா): பெரியஅளவிலான தொழில்முயற்சியாளர் களுக்கும் - அவர்களைப் போன்றவர்களுக் குமிடையிலும்: எண்தரவு முறையிலான (னுநபவையட) ஒரு மேடையினை அமைத்துக் கொடுப்பதாகும். தே.தொ.மு.அ.அ. வழிகாட்டல்களின் கீழ் மிகவும் உயர்ந்த வினைத்திறமையினை எல்லா வியாபாரங்களும் கொண்டிருப்பதனை வசதிப்படுத்துவதற்குமாகும். தே.தொ.மு.அ.அ. வானது 2021ஆம் ஆண்டு டிசம்பரில் இந்த உள் நுளைவினைத் தாபித்ததுடன், 2022ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ம் திகதிவரை 743 விற்பனையாளர்கள் தங்களைப் பதிவு செய்துள்ளனர்.

| நிகழ்ச்சித் திட்டம் | மூஜ | எதிர்பார்க் கப்படும் வருடாந்த வெளியீடு 2022 | அடையப்பெறல் |
|---|---|---|---|
| “இலங்கை ஊற்பத்தி” வியாபார உள் நுளைவு | வியாபாரஉள் நுளைவிற்குப் பதிவுசெய்த வழங்கு நர்களின் எண்ணி க்கை | குறைந்தது1,000வழங்குநர்கள் ள்நுழைவிற்குப்பதிவு செய்தல். | 743 வழங்குநர்கள் பதிவுசெய்துள்ளனர்.சந்தை ஏற்பாடுகள் நடைமுறை யில்உள்ளன .(சமுக,ஊடக, புதினப்பத் திரிகை,துண் டுப்பிரசுரம், தே.தொ.மு.அகையேடு. |

## 2. நு.சி.ந. தொழில்முயற்சிகளின் தரவுத் தளம்:

இலங்கையில் ஒரே இடத்தில் தரவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக எந்தவொரு நிறுவனத்தினாலும் பொருத்தமான தரவுத் தளமானது அபிவிருத்தி செய்யப்படவில்லை. கைத்தொழில் துறையில் மூலோபாயத் தீர்மானமொன்றைத் தயாரிக்கும் போது அர்ப்பணிப்புமிக்க நு.சி.ந.தொ.மு.களின் தரவுத் தளமின்மையானது ஒரு அடையா ளப்படுத்தப்படக்கூடிய பிரச்சினையாகக் காணப்படும். தரவுத் தளமானது, தே.தொ.மு.அ.இன் அபிவிருத்தி உத்தி யோகத்தர்களுக்கு தொழில் முயற்சியா ளர்களின் விபரங்களை காலப்பகுதிகளுக் கென தயாரித்து மென்பொருள் வடிவத்தில் வைத்திருக்க வழிவகை செய்கின்றது. தே.தொ.மு.அ. வானது, நு.சி.ந.தொ.மு.களின் தரவுத் தளத்தினைத் தாபித்துள்ளதுடன் தொழில்முயற்சிகளின் மீது 260,000 தரவுகளைப் பதிவுசெய்துள்ளது.

| நிகழ்ச்சித் திட்டம் | மூஜ | எதிர்பார்க் கப்படும் வருடாந்த வெளியீடு 2022 | அடையப்பெறல் |
|---|---|---|---|
| நு.சி.ந. தொ.மு. களின் தரவுத் தளம் (னுடீ) | தரவுத் தளத் திற்குப் பதிவு செய்த தொ.மு. களின் எண்ணி க்கை | குறைந் தது 500,000 தொ.மு. யாளர் கள் பதிவு செய்தல்.. | முறைமை யில் ஏற்கனவே 260,000 நு.சி.ந. தொ.மு. யாளர் கள் பதிவு செய்துள் ளனர். |

## 3. இலங்கை உற்பத்தி இலச்சினையின் அறிமுகமும், வழங்குதலும்.

உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி கணிசமான அளவு வியாபாரங்கள் நடைபெற்று வருகின்றபோதிலும் இறக்குமதிப் பொருட்களுடன் ஒப்பிடும்போது உள்நாட்டுப் பொருட்களுக்கு அவ்வளவு அடையாளம் கொடுக்கப்படவில்லை. எனவே, வாடிக்கை யாளர்கள் இறக்குமதி செய்யப்பபடும் பொருட்களுக்கு முன்னுரிமையளிக்கின்றனர். மேலும், உள்நாட்டு உற்பத்திகளுக்கான கேள்வியானது குறைவடைகின்ற அதே வேளையில் வாடிக்கையாளர்கள் உள்நாட்டு உற்பத்திகளிலும் பார்க்க இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் அதிக தரம்வாய்ந்தவையென்று சிந்திக்கப் பழகிக் கொண்டுள்ளனர். எனவே தே.தொ.மு.அ. வானது அவ்வாறு உள்நாட்டு உற்பத்திகளுக்கு அவற்றின் தரத்ததைப் பற்றித் தெளிவாக்கு முகமாக ஒரு இலச்சினையை அறிமுகம் செய்வதன் மூலம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான கேள்வியினை ஊக்கு விக்கப் படிமுறைகள் எடுத்துள்ளது. இதன்மூலம் குறைந்தது வருடாந்தம் 50 தொழில் முயற்சியாளர்களுக்கு இலச்சினை களை வழங்கும் செயற்பாட்டை முன்னெடுப்பதுடன் 2022ஆம் ஆண்டில் தே.தொ.மு.அ.வானது 50 தொழில்முயற்சி யாளர்களுக்கு இலச்சினைகளை வழங்க அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| நிகழ்ச்சித் திட்டம் | ழீஜ | எதிர்பார்க் கப்படும் வருடாந்த வெளியீடு 2022 | அடையப்பெறல் |
|---|---|---|---|
| இலங்கை உற்பத்தி இலச்சினையின் அறிமுகம் வழங் கலும். | இலச்சினையைப் பெற்றுக் கொண்ட தொழில்முயற்சிகளின் எண்ணி க்கை. | இலச்சினையானது குறைந்தது 50 தொழில் முயற்சி யுாளா் களுக்கு வழங்கப்ட படல். | இலச்சி னை பெறுபவர் இலச்சி னை வேண்டு கோள்விட்டு தரவு பூர்த்தி யாக்கல். 44 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இலச்சினை வழங்கல்முறைமை கையேடு. இறுதியாக்ககல். டீசம்பர் மாதத்தில் இலச்சினை வழங்கப்படும். |

## 4. ‘இலங்கை உற்பத்தி’ வியாபாரச் சந்தை.

நு.சி.ந.தொ.மு.களின் உண்மையான உற்பத்திகளினை உயர்ந்த பெறுமதிச் சேர்க்கையுடன் அபிவிருத்தி செய்யவும், அறிமுகம் செய்யவுமான நோக்கத்துடன் இலங்கை இலச்சினையை தே.தொ.மு.அ. வானது, முன்னெடுத்துச் சென்றுள்ளது. இதற்குச் சமாந்தரமாக இலங்கையின் உற்பத்திகளை சர்வதேச சந்தைகளுக்கு இடுவதற்கு ஏதுவாக வியாபாரச் சந்தைகளை நடாத்த தே.தொ.மு.அ. வானது, திட்டமிட்டுள்ளது. 2022ஆம் ஆண்டில், தே.தொ.மு.அ.வானது, 03 வியாபாரச் சந்தைகளை நடாத்துவதற்கு இருந்த போதிலும் நிச்சயமற்ற காரணங்களால் அது தாமதமாகியது. மேலும் பிராந்திய அலுவலர்கள் 65 பிராந்திய நுண், சிறிய, நடுத்தரச் சந்தைகளை நடாத்தியதுடன் நுண்மட்ட தொழில்முயற்சியாளர்களுக்கு விற்பனைச்சாலைகளும் வழங்கப்பட்டன.

| நிகழ்ச்சித் திட்டம் | மூஜ | எதிர்பார்க் கப்படும் வருடாந்த வெளியீடு 2022 | அடையப்பெறல் |
|---|---|---|---|
| “இலங்கை உற்பத்தி” வியாபா ரச் சந்தை. | நடாத் தப்பட்ட வியாபா ரச் சந்தை களின் எண்ணி க்கை. ஏற்பாடு செய்யப் பட்ட விற்பனை ச்சாலை களின் எண்ணி க்கை | “இலங்கை உற்பத்தி” வியாபாரச் சந்தை. யின்கீழ் குறைந் தது 03 வியா பாரச் சந்தை நூடாளா விய ரீதியில் நடாத்தப் படல்.(180 விற்பனை சாலைகள்) | 03 வியாபாரச் சந்தைகள் நடாத்தத் திட்ட முள்ளது. ஆயினும் நிதிப் பிரச்சினை யினால் இது தாமதமாகியது பிராந்திய அலுவலர்கள் 65பிராந்திய நுண்மட்டச் சந்தைகளை நடாத்தினர். |

## 5. “இலங்கை உற்பத்தி” இலச்சினையின் கீழ் உரிமைபெற்ற கடைகளின் ஊக்குவிப்பு.

இலங்கை உற்பத்தி இலச்சினையின் கீழ் உரிமைபெற்ற கடைகள் அதிகமான வாடிக்கையாளர்களைக் கவரும் இடங்களில் தாபிக்கப்படவுள்ளன. இந்த வியாபாரச் சந்தைகள் தனியார் துறையினரால் நடாத்தப்படுகின்றன. இந்தப் பொறிமுறை யானது நு.சி.ந.தொ.மு.களானவை நாடு பூராகவும் சந்தைப்படுத்தல் தொடர்பாடலை அபிவிருத்தி செய்ய உதவுமென்பதாகும். மேலும், இலங்கை இலச்சினையுடன் கூடிய வழங்குநர்கள் வருமானத்தை உருவாக்கு வதனை அபிவிருத்தி செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குமுகமாக தங்களின் உற்பத்திகளை இலச்சினையின் கீழான உரிமைக் கடைகளில் காட்சிப்படுத்த சந்தர்ப்பமளிக்கப்படுவார்கள். 2022ஆம் ஆண்டில் தே.தொ.மு.அ. வானது மாத்தளை மாவட்டத்தில் 01 “இலங்கை உற்பத்தி” இலச்சினையின் கீழான கடையினைத் தாபிக்கவுள்ளது.

| நிகழ்ச்சித் திட்டம் | மூஜ | எதிர்பார்க் கப்படும் வருடாந்த வெளியீடு 2022 | அடையப்பெறல் |
|---|---|---|---|
| ஊரிமை பெற்ற கடைகளைஅறிமுகம்செய்தல். | தாபிக்கப்பட்ட உரிமை பெற்ற கடைகளின் எண்ணிக்கை, பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களின் எண்ணிக்கை. | குறைந்தது 01 உரிமை பெற்ற கடை யானது தாபிக்கப்படல். | மாத்தளை மாவட்டத்தில் நாஉல மாவட்டச்செயலகத்தில் ஒரு உதிமைபெற்ற கடையினைத் தாபிக்க அடையாளம் காணப்பட் டுள்ளது. |

## 6. "உபாதிதாரி.வையவசாயக உதானய" நிகழ்ச்சித்திட்டம். (வியாபாரத்தினூடான மூளைசாலிகள்)

தே.தொ.மு.அ.வானது, வியாபாரக்களத்தில் பல்கலைக்கழகப் பட்டதாரிகளை ஈடுபடுத்து முகமாக தொழில்முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்கின்றது. பட்டதாரிகளுக்கு வியாபாரத் தினை அபிவிருத்தி செய்யுமுகமாக இதற்கு **"உபாதிதாரி வையவசாயக உதானய"** என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமானது, பட்டதாரிகளை வியாபாரச் சதுக்கத்திற்குள் பிரவேசிக்க ஊக்குவிக்கப்படுவதுடன் அவர்களை வெற்றிகரமாக தொழில் முயற்சியாளர்களாக வர ஊக்குவிப்பதுமாகும். தே.தொ.மு.அ. வானது, 2021ஆம் ஆண்டுவரை 200 வரையான பட்டதாரி தொழில் முயற்சி யாளர்களை அபிவிருத்தி செய்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் தே.தொ.மு.அ.வானது, கொழும்பு, களனி, தென்கிழக்கு மற்றும் றஜரட்ட பல்கலைக்கழகங்களில் 79 மாணவர்களுக்கு ஏற்கனவே தொழில்முயற்சி யாண்மை பயிற்சியளித்தல் நிகழ்ச்சி வழங்கப்பட்டுள்ளதுடன், 18 வியாபாரத் திட்டங்களும் அங்கீகாரத்திற்காகப் பெறப்பட்டன.

| நிகழ்ச்சித் திட்டம் | ழீஜ | எதிர்பார்க் கப்படும் வருடாந்த வெளியீடு 2022 | அடையப்பெறல் |
|---|---|---|---|
| "உபாதிதாரி வையவசாயக உதானய" | புயிற்சியளிக்கப்பட்ட பட்டதாரிகளின்˙ எண்ணிக்கை, நிதியுதவியளிக் கப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை. தாபிக்கப்பட்ட வியாபாரங்களின் எண்ணிக்கை. | 100 பட்டதாரிகளுக்கு பயிற்சி யளிப்பது. அத்துடன் தெரிவு செய்யப் பட்ட 20 பட்டதாரிகளுக்கு நிதி வசதியளித்தல்.˙. | ஏற்கனவே 79 மாணவர்களுக்கு தொழில்முயற்சியாளர் பயிற்சியளித் தலானது கொழும்பு, களனி, தென்கிழக்கு மற்றும் றஜரட்ட பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

## 7. தொழில்முயற்சியாளர் விருதுவழங்கும் விழாக்கள்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு யார் யார் உண்மையில் பங்களிப்புச் செய்தார்களோ, அத்தகைய தொழில்முயற்சியாளர்களினை அறிமுகம்செய்வதுடன் தெரிந்துகொள்ளல், ஊக்குவித்தல் மற்றும் உந்துசக்தியளிக்கு முகமாக மாகாணத் தொழில்முயற்சி விருது வழங்கல் விழாக்களினை தே.தொ.மு.அ. வானது நடாத்துகின்றது. 2022ஆம் ஆண்டில் தே.தொ.மு.அ.வானது, ஐந்து விருது வழங்கல் விழாக்களினை நடாத்தத் திட்டமிட்டதுடன், நிதிப்பிரச்சினை காரணமாக இந்த விருது வழங்கல் விழாவினை அடுத்த ஆண்டில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 8. வியாபாரக் கொத்தணி.்.துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நுண் சிறிய நடுத்தரதொழில்முயற்சிகள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் பலவகைப் படுத்தலுக்கான சாரதித்ததுவமாக அங்கீகரிக்கபபட்டுள்ளது. எப்படியாயினும் இலங்கையிலுள்ள நு.சி.ந.தொ.முயற்சிகள் தனித்தனியாக பெறுமதிச் சங்கிலியுடன் சேர்ந்தாற்போல சுதந்திரமாக தொழிற்பட

தொழில் முயற்சியாண்மை, சந்தைப்படுத்தல், தொழில்நுட்பம் மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகியவற்றில் போதிய அறிவின்மையுடைய தொழில்முயற்சியாளர்களின் வியாபாரப் பிரச்சினைகளை தே.தொ.மு.அ. வானது, அடையாளம் கண்டுள்ளது. அதேவேளை பிராந்திய மட்டத்தில் வேலைசெய்யும் தே.தொ.மு.அ. வினது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழில்

## 10. தொழில்முயற்சிக் கலந்துரையாடல் ஒன்றுகூடல்.

அரசாங்க அதிகாரசபைகள் தனியார்துறை அரசுசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரசாங்க சேவை வழங்குநர்களை ஒன்றுசேர்த்து பிரதிநிதித்துவப்படுத்தும் பிராந்திய மற்றும் மாவட்ட தொழில்முயற்சி ஒன்றுகூடல்களானவை மாவட்டச் செயலாளர் களினால் தலைமை வகிக்கப்படுகின்றன. பிராந்திய தொழில் முயற்சி கலந்துரையாடல் ஒன்றுகூடலானது பிரதேச செயலாளர்களினால் தலைமை வகிக்கப் படுவதுடன், வியாபாரத் துறையிலுள்ள பிரதான தொழில் முயற்சியாளர்கள், எல்லா அரசாங்க மட்டப் பிரிவுகள், தனியார் துறை வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்கள் மற்றும் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டத்திலுள்

வேண்டியுள்ளது. நு.சி.ந.தொ.முயற்சிகள் தனித்தனியாகத் தங்களின் இயலுமையை அபிவிருத்திசெய்ய முடியாதுள்ளதுடன் போட்டிச்சந்தை அழுத்தங்களுக்குத் தொடர்ந்தும் ஈடுகொடுக்க முடியாதநிலையில் காணப்படுகின்றன.

## 9. பிராந்திய தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

முயற்சியாளர் களின் இத்தகைய பிரச்சினைகளை அடையாளம் காண்பதுடன் அத்தகைய பிரச்சினைகளுக்கு வேண்டிய தீர்வினையும் பெற்றுக் கொடுக்கின்றனர். 2022ஆம் ஆண்டில் தே.தொ.மு.அ. வானது 14937 தொழில்முயற்சியாளர்களுக்குப் பயிற்சி
யளித்ததுடன் அவர்களுக்கு வேண்டிய ஏனைய உதவிகளையும் செய்து கொடுத்தது.

ளவர்கள். மேலும் தரமுயர்த்தலுக்கான தந்திரோபாயங் களையும், சி.ந.தொ. முயற்சிகளினை அபிவிருத்தி செய்யவும் ஆலோசனைச் சபைகளைத் தாபிக்கவும் படிமுறைகள் எடுக்கப்படும். அத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் தினயார் துறையின் சில பிரதிநிதித்துவம் உள்ளிட்ட, அரசாங்கத் தாபனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக தொழில்முயற்சியாளர் களுக்கான ஒரு. வசதிப்படுத்தலுக்கான ஒரு ஒன்றுகூடலிலினை உருவாக்கத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

மொத்த ஒதுக்கீடு ரூபா 40.0

மில்லியனாவதுடன், செப்டெம்பர் வரை திறைசேரியினால் ரூ.மில் 8.6 கிடைக்கப்பெற்றுள்ளது.

## 13.3 எதிர்காலத் திட்டம் - 2023

1. சிறிய பிராந்திய மற்றும் மாவட்ட வியாபாரக் கொத்தணிக் கழகங்களைத் தாபித்தல்.
2. அரச பல்கலைக் கழகங்கள், ஏனைய அரசாங்க நிறுவனங்கள், கைத்தொழில் அபிவிருத்திச் சபை (ஐனுடீ), ஐவுஐஐ ஏஐனுயுவுர்யு மற்றும் ஜேநு ஆகியன. அத்துடன் தேசிய மற்றும் சர்வதேச கழகங்கள், மற்றும் உதவி வழங்கும் முகமைகள் ஆகியவற்றின் உதவியுடன் பெறுமதி சேர் உற்பத்திகளின் ஊக்குவிப்பு.
3. இலங்கையிலுள்ள நு.சி.ந. தொழில் முயற்சிகளின் உற்பத்திகளை காட்சிப்படுத்தும் வகையில், உற்பத்தி களைப் படம்பிடிக்கும் நிலையங்க ளினைத் தாபித்தல்.
4. பலாப்பழம் சம்பந்தப்பட்ட பெறுமதிசேர் உற்பத்திகளை அறிமுகம் செய்தல் மற்றும் கொழும்பிலும் பிராந்திய ரீதியிலும் குறைந்தது 03 பலாப்பழம் சம்பந்தப்பட்ட பொருட்கள் விற்பனை நிலையத்தினைத் தாபித்தல்.

**பலா சார்ந்த பெறுமதி சேர்த்த பண்டங்களின் ஊக்குவிப்பு**



5. வினைத்திறமையானதும், பயனுள்ளது மான "இலங்கை உற்பத்தி", விற்பனைச் சந்தை வாய்ப்பினை ஒழுங்கு செய்தல்.

**Made in SriLanka" வியாபாரக் கண்காட்சி**




6. தே.தொ.மு.அ.இன் மேற்பார்வையின் கீழான ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இயலுமைக் கட்டமைப்பு கண்காணிப்பு மேடை நடவடிக்கைச் செயற்றிட்டத் தினை அமுலாக்கல்.
7. பிராந்திய தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முலம் புதிய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தலும் அபிவிருத்திசெய்தலும். (பிரதேச செயலாளர் பிரிவு ஒன்றுக்கு 05 - 20 புதிய தொழில்முயற்சிகள்)
8. பட்டதாரி தொழில் முயற்சியாளர்களின் உருவாக்கத்திற்கும், ஊக்குவித்தலுக்கு
9. வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களுக்கான ஒரு தரவு அடிப்படையினைத் (டீனுளு) தாபித்தல்.

# 14

# வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிகல்ஸ் இரசாயனக் கம்பனி

# (PCCL)

## 14.1 அறிமுகம்

வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கிவருகின்ற 100% ஆன அரசாங்கத்துக்கு உரித்தான இலாபம் உழைக்கும் அரச கம்பனியாகும். கம்பனியின் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இயங்கிவருகின்றது.

### நோக்கு

இலங்கையின் இரசாயன உற்பத்திகள் மற்றும் சந்தையின் முன்னோடியாதல்.

### செயற்பணி

வாடிக்கையாளர்களின் திருப்தியை உறுதி செய்வதற்காக தரமான, நம்பகமான மற்றும் உயர் தரத்தைக் கொண்ட இரசாயன பதார்த்தங்களை சந்தைக்கு உற்பத்தி செய்தல் மற்றும் வியாபாரம் செய்தல்.

### கம்பனியின் செயற்பாடுகள்

வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிகல்ஸ் கம்பனியின் பிரதான உற்பத்தித் தொழில்சாலை 1956 முதல் 1985 வரை கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தனில் அமைந்திருந்ததுடன், அந்தக் காலப்பகுதியில் அதன் உற்பத்திப் பணிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. 1985 ஆம் ஆண்டு நிலவிய யுத்த சூழல் காரணமாக இக்கைத்தொழில்சாலை முழுமையாக அழிவடைந்ததுடன், தற்போது மேற்படி தொழில்சாலையை மீண்டும் பரந்தனில் தாபிக்கும் செயன்முறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கம்பனியினால் கோஸ்ரிக் சோடா / குளோரின் தொழில்சாலையை மீண்டும் நிர்மாணிப்பதற்கான ஆரம்ப சாத்தியக்கூறு கற்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிகல்ஸ் கம்பனியினால் உள்நாட்டு

சந்தையின் கேள்விக்கு ஏற்றதொரு உற்பத்தியாக பொலி அலுமினியம் குளோரைட் (ீழடல யுடரஅைரெஅ ஊாடழசனைந (ீயுஊ)) மற்றும் ஹைட்ரோக்குளோரிக் அமிலம் (ர்லனசழஉாடழசஉை யுஉனை (ர்ஊட) உற்பத்திக்கான வசதிகளை அவ்விடத்தில் தாபிப்பதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி சேவை வளர்ச்சி வேகத்துடன் இயங்கிவருகின்ற வெற்றிகரமாக வியாபார நடவடிக்கைகளில் முன்னேறிச் செல்லும் இலபத்தை இலக்காகக் கொண்டதொரு அரச நிறுவனமாகும். கம்பனி 2022 செப்தெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா மில்லியன் 200 ஆன தேறிய இலாபத்தை (வரிக்கு முந்திய) பதிவு செய்துள்ளது. இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 285% வீத இலாப வளர்ச்சியாகும்.

கம்பனியானது, இரசாயன பதார்த்தங்களை உற்பத்தி செய்யும் அபிலாசையுடன் இயங்கிவருவதுடன், வாய்ப்புள்ள இரசாயன உற்பத்திக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு உபாயமுறை ரீதியாக கவனம் செலுத்துகின்றது. நிறுவனத்தினால் ஹொரண வனவத்த முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலும் களுத்துறை புளுடர்ன கைத்தொழில் வலயத்திலும் நிறுவப்பட்டள்ள வியாபர அலகில் கொஸ்டிக் திரவம் மற்றும் பிளீசிங் திரவம் என்பவற்றை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி உள்நாட்டு இரசாயன உற்பத்திக் கைத்தொழிலுக்கு உதவி மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மொரட்டுவை பல்கலைக் கழகத்தின் இரசாயன பொறியியல் பீடத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி, பரந்தன் கைத்தொழில் வயலத்தில் 30 இரசாயன கைத்தொழில்களைத் தாபிக்கக்கூடிய வகையில் சுற்றாடலுக்கு சாதகமான இரசாயன கைத்தொழில் வலயமொன்றை தாபிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இந்நாட்டிலிருந்து வெளிநாட்டுக்கு வெளியேறுகின்ற அந்நியச் செலாவணியைக் குறைத்துக் கொள்வதற்காக கம்பனியினால் பிரதானமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள குளோரின் சிலிண்டர் பராமரிப்பு மற்றும் அழுத்தத்தை பரிசோதிப்பதை வகவத்த பிரிவில் மேற்கொள்வதற்கான ஆரும்ப கட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும், இரசாயன விபத்துக்களுக்கான பாதுகாப்பு உபகரணத் தொகுதிகளை உற்பத்தி செய்வதும் கம்பனியினால் மேற்கொள்ளப்படுவதுடன், இரசாயன அனர்த்த முகாமைத்துவத்துக்கான செயன்முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் கம்பனியினால் நடாத்தப்படுகின்றன.

**தொழிற்சாலையின் செயற்பாடுகள்**





**இரசாயன ஆபத்துகளைத் தடுப்பதற்காக பாதுகாப்பு உபகரணம் மற்றும் கருவிகள் தயாரிப்பு**









- கம்பனியின் இலாபத்தை உச்சளவாக்கும் பொருட்டு தேவையான வினைத்திறனை வளர்ப்பதற்கு கம்பனியின் சகல செயற்பாடுகளையும் முறைப்படுத்துவதற்காக கம்பனியானது தொழில்முயற்சிசார் வளங்கள் திட்டமிடல் முறைமையை (நுசீ ஞலளவநஅ) தாபிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது. அதற்கு இசைவாக சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல்சார் காரணிகளின் அடிப்படையில் (வுடீடு) மனிதவள கொள்ளளவை மேம்படுத்த கம்பனி பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

- வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி சகல வகையிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகமான முறையில் செயற்பட்டு வருவதுடன், அதற்காக ஈ-பெறுகை செயன்முறை பயன்படுத்தப்படுகின்றது. எனது, பொருட்களை கொண்டு செல்வதற்காக பசுமை அலைவரிசையைப் பயன்படுத்தக் கூடியவகைளில் இலங்கை சுங்கத்தினால் வழங்கப்படுகின்ற **“இயைபு பொருளாதார செயற்பாட்டாளர் (ஊநுமு)”** தரச் சான்றிதழ் எமது கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிகல்ஸ் கம்பனியினால் 2021 ஆம் ஆண்டு வரை கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முறையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- தனியார் துறையினருடன் போட்டித்தன்மையுடன் வேலை செய்யும் சூழலை உருவாக்குவதற்காக “செயலாற்றுகை சுட்டி” களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யும் முறையியலை அமுல்படுத்தும் பணிகளை கம்பனி ஆரம்பித்துள்ளது. இதனை 2023 ஆம் ஆண்டு சனவரி முதல் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- கீழ் மட்டத்தில் ரூபா மில்லியன் 200 ஆன தேறிய இலாபத்தை பதிவு செய்து மற்றும் போட்டித்தன்மை மிக்க சந்தை நிறுவனமொன்று என்ற வைகயில் சந்தையில் புதிய பல உற்பத்திகளை ஒன்றிணைத்துக் கொண்டு தொடர்ச்சியான வளர்ச்சியின் மூலம் 2024 ஆம் ஆண்டு உற்பத்திப் பிரிவுக்கு மாற்றங்களை செய்யும் முக்கிய நோக்கத்துடன் கம்பனி செயற்பட்டு வருகின்றது.

## 14.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் 30 அன்று)

| விபரம் | 2022 ரூ.“000 | 2021 ரூ.“000 | % |
|---|---|---|---|
| **வருமானம்** | **496,494** | **250,517** | **198** |
| விற்பனை செலவினம் | (248,247) | (135,279) | 183 |
| **மொத்த இலாபம்** | 248,247 | 115,238 | 215 |
| வேறு செயற்பாட்டு வருமானங்கள் | 59,000 | 22,500 | 262 |
| **மொத்த வருமானம்** | **307,247** | **137,738** | **-** |
| மொத்த செலவினம் | **(106,750)** | **(68,715)** | **156** |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான இலாபம் | **200,497** | **69,023** | 290 |
| குறைக்க : நிதிச் செலவினம் | (100) | (33) | (67) |
| **வரிக்கு முன்னரான இலாபம் (ஏறக்குறைய)** | 200,397 | 68,990 | 290 |
| மொத்த இலாப விகிதம் **(%)** | 50.00 | 46.00 | - |
| இலாப விகிதம் **(%)** | 40.36 | 27.54 | - |

*தகவல்:* வரையறுக்கப்பட்ட பரந்தன் கெமிகல்ஸ் இரசாயனக் கம்பனி

## ஏனைய பிரிவுகளின் செயலாற்றுகை

| விடயம் | முன்னேற்றம் |
|---|---|
| **குளோரின் சலவைச் சோடா கைத்தொழிற்சாலையை நிறுவுதல்** | சாத்தியக்கூறு கற்கைப் பணிகள் முடிவடைந்துள்ளது.<br><br>கருத்திட்டத்திற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கிடைத்துள்ளது.<br><br>கருத்திட்டத்திற்கு அவசியமான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக ரூ.417 மில்லியன் தொகையை 2023ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டதின் கீழ் ஒதுக்குமாறு கோரப்பட்டுள்ளது. |
| **சூழல் விரும்பி கைத்தொழில் பூங்காவை உருவாக்குதல்** . | கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தனில் பழைய இரசாயனத் தொழிற்சாலை அமைந்திருந்த காணியை நீண்டகால குத்தகை அடிப்படையில் பந்தன் இரசாயனக் கம்பனிக்கு வழங்கவதற்கு அமைச்சரவையிடமிருந்து அனுமதி பெறப்பட்டள்ளது. நீண்டகால குத்தகை ஒப்பத்தை தயாரிப்பதற்கு காணி ஆணையாளரிடம் கோரப்பட்டுள்ளது.<br><br>நிலப் பகுதியின் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு பொறியியல் பணி தொடர்பான மத்திய ஆலோசனை அலுவலகத்துடன் ( ஊநுஊடீ) இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.<br><br>உள்ளூர் இரசாயன தயாரிப்பு கைத்தொழிலுக்கான உதவுவதற்கு மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் திணைக்களத்துடன் இணைந்து பணிபுரிதல். |

| | |
|---|---|
| **குளோரின் அல்லாத கைத்தொழில் இரசாயனப் பொருட்களை சந்தையில் ஊடுருவல் செய்தல்** | களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்து சந்தை ஆய்வினை மேற்கொள்ளல்.<br><br>சலவைச் சோடாவிற்கு 1000 மெற்றிக் தொன் இலக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், 300 மெற்றிக்தொன் ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 50 மெற்றிக்தொன்னுக்கான இறக்குமதி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

## 14.3 எதிர்காலத் திட்டங்கள் - 2023

01. பரந்தனின்ல் கோஸ்ரிக் சோட.ஃ. குளோரின் தயாரிப்பு இரசாயன கைத்தொழில்களை தாபித்தல்.

02. பரந்தனில் இரசாயன தயாரிப்பு கைத்தொழிலுடன் கூடிய சூழலுக்கு சாதகமான கைத்தொழில் வலயமொன்றை ஏற்படுத்தல்

- கைத்தொழில் வலயமொன்றை நிறுவுவதற்கு இயலுமையுள்ள இரசாயன கைத்தொழிலுக்கான முழுமையான சாத்தியக்கூறு கற்கையை மேற்கொள்ளல்.
- முன் சாத்தியக்கூறுக் கற்கையைப் பயன்படுத்தி இலங்கையில் வாய்ப்புள்ள இரசாயன கைத்தொழில்களுக்கு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

03. திரவக் குளோரினை களஞ்சியப்படுத்துவதற்கு சகல சிலிண்டர்களுக்கும் சிலிண்டர் பராமரிப்பு மற்றும் அழுத்த பரிசோதனை பிரிவை தாபித்தல்

04. பயன்படுத்தப்படாத வளங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

05. காபன் வெளியீட்டைக் குறைத்தல்.

- வகவத்த பிரிவின் கூரையின் மீது சூரிய கலங்களை பொருத்தல் (4500 சதுர அடிகள்)
- களுத்துறை அலகின் கூரையின் மீது சூரிய கலங்களை பொருத்தல் (3000 சதுர அடிகள்)

06. குளோரின் அல்லாத அபிவிருத்தி பிரிவை தாபித்தல்.

07. நிறுவனத்தை தரம் ஊ முதல் தரம் டீ வரை தரமுயர்த்தல்

08. செயலாற்றுகை சுட்டியை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடு செய்யும் முறையியலை தாபித்தல
.

- பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.
- மாதிரியமைப்பு அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது

09. 2022 இன் இறுதியளவில் செயற்பாட்டு தேறிய இலாபம் 300 மில்லியனை தாண்டுதல்.

# 15

# கஹட்டகஹ கிரபைட் லங்கா (KGLL)

## 15.1 முன்னுரை

### கஹட்டகஹ கிரபைட் சுரங்கங்கள்

கஹடகஹவின் சுரங்கங்கள் வட மத்திய மாகாணத்தில் குருணாகல் மாவட்டத்தில் ரிதிகம பிரதேச செயலகத்தில் உள்ள தொடலஸ்கமுவையில் அமைந்துள்ளதுடன், இது கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிட்டட் நிறுவனத்தினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. இது 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட, அரசுக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாகும்.

கஹட்டகஹ சுரங்கம் உள்ள இந்தக் காணியின் பரப்பு ஏறத்தாழ 102 ஏக்கர்கள் ஆகும்.

### கஹட்டகஹப் பண்டங்களின் தனிச்சிறப்பு

இலங்கை உயர் காபன் இயற்கைப் பளிங்குப் பாறைக் காரீயத்தை வழங்கும் வர்த்தக மூலமாகவும், குறிப்பாக கஹடகஹ சுரங்கம், 99% இற்கும் அதிகமான உயர் தூய இயற்கை பாறைக் காரீயத்தை அகழ்வதற்கான இயலுமையைக் கொண்டிருக்கின்றது. இது, காரீயக்கட்டி, மற்றும் பாளங்களின் துகழ்வுகள் தனித்துவமான மூலப்பொருளொன்றாக உலகச் சந்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### காரிய ஏற்றுமதிகள்

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் 100% ஏற்றுமதியை ஆற்றுப்படுத்திய கம்பனி என்பதுடன், 2021/2022இல் பிரதான ஏற்றுமதி நாடுகளாக

ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா உள்ளன.

### தொலைநோக்கு

“உலகத்தில் இயற்கையான பளிங்குத் தன்மையுள்ள காரீயத்தின் தனித்துவமான மூலமாக விளங்குதல்”

### செயற்பணி

“நாட்டில் காரீயக் கனிப்பொருள் மூலங்களில் உச்சப்பயன்பாட்டுடன் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதார, சமூக அபிவிருத்தியில் பயனுறுதிவாய்ந்த, வினைத்திறனுடைய செயலூக்கமுள்ள பங்குதாரரொருவராக இருத்தல்”

## குறிக்கோள்கள்

“கம்பனியின் குறிக்கோள்கள், உயர் தரமான தூய்மையான காரீயத்தை ஏற்றுமதி செய்வதற்காக அகழுதல், பதப்படுத்துதல் மற்றும் உயர்ந்தபட்ச பெறுமதியைச் சேர்த்தலும், காரீய அடிப்படையிலான கைத்தொழில்களை விருத்தி செய்தலுமாகும்“

## 15.2. முன்னேற்றம் (30 செப்டெம்பர் 2022 அன்று)

**தயாரிப்பு**




*மூ2021/22 தகவல்கள் 30 செப்டெம்பர 2021 வரை மட்டும்*

*மூலம்் கஹட்டகஹ காரீய லங்கா லிமிடட்*

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் 30 செப்டெம்பர் 2022 காலப் பகுதி வரை 176 மெற்றிக்தொன் வரை உற்பத்தி செய்துள்ளது. 2006 ஆம் ஆண்டிலிருந்து அகழ்வு புத்துயிர் பெற்றதன் பின்னர் இன்று வரை மொத்த உற்பத்தி 11,002 மெற்றிக் தொன் ஆகும். இந்த நிதியாண்டுக்கு மாதாந்த சராசரி உற்பத்தி இலக்கு 65 – 77.5 மெற்றிக்தொன் ஆகும்.

இந்த இலக்கானது சுரங்கங்களில் காணப்படும் காரியங்களின் செழுமை, நிலத்தின்கீழ் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் அபிவிருத்திப் பணிகளில் தங்கியுள்ளது. எனினும் கோவிட்-1 நோய்ப்பரவற் தாக்கம் காரணமாக மார்ச் மாதத்தில் இருந்து மே மாதம் வரை சுரங்கங்கள் மூடப்பட்டதனால் இலக்கினை அடைய முடியவில்லை.

## விற்பனை

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் 1 ஏப்பிரல் 2022 இருந்து 30 செப்டெம்பர் 2021 காலப் பகுதி வரை 200 மெற்றிக்தொன் வரை ஏற்றுமதி செய்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பெரிதாக வேறுபாடு ஏதுமில்லை. இதற்கு சமாந்தரமாக விற்பனை வருமானம் ரூபா 59.24 மில்லியனாக இருந்ததுடன், கடந்த ஆண்டின் வருமானமான ரூபா 59.24 மில்லியனுடன் ஒப்பிடுகையில் வருமானம் ரூபா 38.02 மில்லியனால் அதிகரித்துள்ளது. இது அவுஸ்திரேலியாவின் பெஸ்ட் கிரபைட் கோ லிமிடட் நிறுவனத்தின் களஞ்சிய கையிருப்பு வெளியேறல் குறைவடைந்ததனாலும், அமெரிக்காவின் அஸ்பெரி கிரபைட் மில் லிமிடட் கோவிட்-19 இன் தாக்கத்தின் காரணமாக உயர் தர கிரபைட் கட்டளையை இடைநிறுத்தியதன் காரணமாகவும் ஏற்பட்டதாகும்.

எனினும், உலகச் சந்தையில் காரியக் கேள்வி தளம்பலடைதல் அடிக்கடி நிகழும். மற்றும் உயர் தர காரியத்திற்கான கேள்வியின் வீழ்ச்சி என்பன காரணமாக விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. உலகச் சந்தையில் உற்பத்தி செய்யப்படும் 900,000 மெற்றிக்தொன் உற்பத்திக்கு எதிராக இலங்கையில் இரு சுரங்கங்களினாலும் உற்பத்தி செய்யப்படும் 7000 மெற்றிக்தொன் காரியத்தினால் எவ்விதமான தாக்கத்தையும் உருவாக்க முடியாது.

அகழ்வு புத்துயிர் பெற்றதன் பின்னர் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2022 செப்டெம்பர வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மொத்த ஏற்றுமதி 8,563 மெற்றிக்தொன் ஆகும்.

**விற்பனை 2008-2022**



*மூலம்˙ கஹடகஹ காரிய லங்கா லிமிடட்*

## வருமானம்

அகழ்வுகளை மீள் ஆரம்பித்ததன் பின்னர் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2021 செப்டெம்பர ˙ 30ஆம் திகதி வரை 1,550.32 மில்லியன் ரூபாவை வெளிநாட்டு நாணயமாகச் சம்பாதித்திருந்தது.

## இலாபம்




**** 2021/22 தகவல்கள் 30 செப்டெம்பர 2022 வரை மட்டும்***

*மூலம்˙ கஹடகஹ காரிய லங்கா லிமிடட்*

2022/2023 ஆம் நிதியாண்டினுள் 1 ஏப்பிரல் 2022 இல் இருந்து 30 செப்டெம்பர் 2022 காலப்பகுதியில் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் 40.9 மில்லியன் ரூபாவாகும். இது கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் இலாபமாக ரூபா 8.93 மில்லியன் பெறப்பட்டது. இருந்த போதிலும் மேற்குறித்த தரவுகள் கணக்கீடு செய்யப்படாத கணக்கின் அடிப்படையில் பெறப்பட்டதாகும்.

அகழ்வுகளை மீள் ஆரம்பித்ததன் பின்னர் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் 2006 ஆம் ஆண்டிலிருந்து 30 செப்டெம்பர ˙ 2021 வரை 252.12 மில்லியன் ரூபாவை வரிக்கு முன்னரான இலாபமாகப் பெற்றுக்கொண்டது.

அனைத்து அகழ்வுத் தொழிற்பாட்டுச் செலவினங்களும் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டின் சம்பாதிப்பில் இருந்து மேற்கொள்ளப்பட்டதுடன், திறைசேரிக்கு எவ்வித நிதிச்சுமையும் வழங்கப்படுவதில்லை.

காரியச் சந்தையில் காணப்பட்ட அனைத்துச் சிக்கல்கள், சுரங்கத்தில் காணப்பட்ட வரலாற்றில் காணப்படாத வெள்ளம், கோவிட்-19 பிரச்சினைகள் என்பவற்றின் மத்தியில் காரியக் கம்பனி 2021 செப்டெம்பர ˙ 30 இல் வங்கி மற்றும் பண நிலுவையாக ரூபா 15.89 மில்லியனை வைத்திருந்தது.

## கையிருப்புகள்

வங்கி மற்றும் காசு நிலுவைக்கு அப்பால் 2022 செப்டெம்பர 30ஆம் திகதிவரையிலான கையிருப்பின் சந்தைப் பெறுமதி 355 மில்லியன் ரூபாவாகும்.

## தொழிற்படை

தேர்ச்சியுள்ள அகழ்வு வேலையாளர்கள், ஏனைய உரிய தொழில்நுட்ப அனுவலர்கள் உள்ளடங்கலாக 125 பேர் அகழ்வு வேலையிலீடுபடுகின்றனர்.

## 15.3. எதிர்காலத் திட்டங்கள் - 2023

- உற்பத்தி இலக்கு – 930 மெற்றிக்தொன் (மாதத்திற்கு சராசரி 77.5 மெ/தொ)
- திட்டமிடப்பட்ட விற்பனைகள் - 844 மெ/தொ
- திட்டமிடப்பட்ட விற்பனை வருமானம் - ரூ.311 மில்லியன்
- திட்டமிடப்பட்ட வரிக்கு முன்னரான இலாபம் - ரூ.14.7 மில்லியன

## எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள்

### அகழ்வு மற்றும் நிலக்கீழ் அபிவிருத்தி

- **அகழ்வுகள்**

வளப் படிவுகள் மற்றும் பொருளாதாரப் பிரிப்புகள் என்பனவற்றின் கிடைப்பனவை உறுதி செய்வதற்கு, ஆராய்ச்சி என்பது சுரங்க நடவடிக்கைகளுடன் ஒன்றிணைந்த ஒரு பணியாக இருப்பதனால், புதிய படிவுகளை அடையாளம் காண்பதற்கு டயமன்ட் துளைக்கும் திட்டம் தொடரப்படுகின்றதுடன் புதிய

துளைத்தல் கருத்திட்டத்தின் 1,132 அடி ஆழத்தில் பொருளாதார பெறுமதியுடைய படிவினை அடையாளம் காண முடிந்தது. அத்துடன், இந்த ஆராய்ச்சி நெடுங்குத்தாகவும் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் மூலமும் படிவுகள் அடையாளம் காணப்படும். இந்தச் சுரங்கத்தின் விரிவான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், சுரங்கத்தின் படிவுகள் வள நில வரைபடத்துடன் கூடிய வரைபடம் தயாரிக்கப்படுகின்றது. இது எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கும் முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் உதவும்.

- **இரண்டாவது துளையிடல**

இரண்டாவது சுரங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு இரயில் தண்டவாளங்கள் அமைக்கப்பட்டு அவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **பணி நிலையம்**

புதிய பணி நிலையங்கள் 1132 அடி மட்டத்தில் மற்றும் 2000 அடி மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டன. 2000 அடி மட்டத்தில் அபிவிருத்திக்கு இரண்டு ஷிப்ட்கள் பணிகளை ஆரம்பித்துள்ளன.

- **பெறுமதி சேர்த்தல**

  அரசாங்க வங்கியிடமிருந்து கடனைப் பெற்று நுரைமிதக்கும் பொறியொன்றை நிறுவுவதற்கு திட்டமிடப்படுகின்றது.

**ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள**

- **அகழ்வு உபகரணம**

சுரங்கத்தினுள் காற்று விசிறி பொருத்துதல், பழைய துரப்பிடித்தவற்றை மீள சரிசெய்த், சேதமடைந்த இரும்பு கம்பிகளையும் உக்கிப்போன் கயிறுகளையும் பொருதியில் பொருத்துதல் போன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- **நிலப் பயன்படுத்தல**

நிலக்கீழ் சுரங்கத்தைத் தவிர்த்து 102 ஏக்கர் பெறுமதியான காணி கம்பனிக்கு சொந்தமாக உள்ளது. இதில் 26 ஏக்கர் நிலத்திற்கு வழக்குகள் நடப்பதனால், இந்நிலத்துண்டுகளுக்கு உரித்தான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. மிகுதி 76 ஏக்கர்கள் கம்பனியினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன், இதில் 52 ஏக்கர் காணியில் மீள்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கறுவா, வாழை மற்றும் ஏனைய பருவகாலப் பயிர்கள் (இஞ்சி) அறுவடை செய்யப்பட்டது.

# 16

# வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனி (NSL)

## 16.1 அறிமுகம்

வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனி, இலங்கை வரலாற்றில் மிக நீண்டகாலமாக உப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றது. இது சாதாரண உப்பு, அயடின் கலந்த உப்பு மற்றும் கைத்தொழில் ரீதியிலான உப்பு வகைகள் என்பவற்றினை உற்பத்தி செய்து வருகின்றது. பிரதான உப்பளங்கள் மன்னார் மற்றும் ஆனையிறவு பிரதேசங்களில் அமைந்துள்ளதுடன் அதன் நிருவாக அலுவலகம் கொழும்பு நகரில் அமைந்துள்ளது.

இந்த உப்புக் கம்பனி 1938 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது பல்வேறுபட்ட நிர்வாக முறைகளின் கீழ் நிருவகிக்கப்பட்டடு வந்துள்ளதுடன், 2001 ஆம் ஆண்டு மாந்தை உப்பு கம்பனி எனப் பெயரிடப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டில் இதன் பெயர் தேசிய உப்புக் கம்பனி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனி தேசிய இயற்கை வள பயன்பாட்டு மத்தியநிலையமாக மாத்திரமன்றி வட மாகாணத்தில் வாழும் எண்ணற்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழில் வாய்ப்பினையும் வழங்குகின்றது. தற்போது இங்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் 52 பேரும், உழைப்பு ஊழியர்கள் 200 பேரும் சேவையாற்றி வருகின்றார்கள்.

தேசிய உப்புக் கம்பனி திறைசேரி மற்றும் ஏனைய திணைக்களங்களினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட சபையினால் நிர்வகிக்கப்படுகின்றது.இது ஒரு முழுமையபன அரசதொழில் முயற்சியாண்மையாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், கம்பனி ஒழுங்கு விதிகளையும் பின்பற்றுகின்றது. தற்போது, இந்நிறுவனம் இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் தரம் உறுதிப்படுத்தப்பட்டு சான்றுபடுத்தப்பட்டுள்ளது.

## நோக்கு

“இரசாயன மற்றும் ஏனைய படிமுறைகளுடன் இணைந்துள்ள இயற்கை வளங்களை ஆராய்வதன் மூலம் வடக்கு மாகாணத்தில் காணப்படும் உப்பினை அடிப்படையாகக் கொண்ட தொழில் முயற்சியை அபிவிருத்தி செய்வதுடன் அதனால் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்”

## செயற்பணி

“வட மாகாணத்தில் உப்பளங்களை இயக்கி, உப்பையும் உப உற்பத்திகளையும் உற்பத்தி செய்து உரிய முறையில் பதனிட்டு சந்தைப்படுத்தல் ஆகும்”.

## பிரதான குறிக்கோள்கள்

பதப்படுத்தப்படாத உப்பு தயாரிப்பினை மேற்கொண்டு, அதற்கு பெறுமதி சேர்த்து நுகர்வோருக்கு கல் உப்பைத் தயாரித்தல் மற்றும் அயடின் கலந்தை உப்தைத் தயாரித்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

## 16.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் 30)

| விபரம் | | உண்மை (2021.்.2022) |
|---|---|---|
| மன்னார் | | 1647 |
| ஆணையிறவு | | 3027 |
| மொத்தம் | | 4674 |
| 2. உப்பு விற்பனை மெற்றிக் தொன் | | 853 |
| உப்பு விற்பனை ரூபா மில்லியன் | | 38,534,370 |
| 3.1 | உப்பு விற்பனை | 38,534,370 |
| 3.2 | மொத்த வருமானம் | 43,540,697 |
| 3.3 | விற்பனை பண்டங்களின் கிரயம் (ஊழுபுளு) | 20,738,003 |
| 34 | மொத்த இலாபம் | 17,796,368 |
| 3.5 | தேறிய இலாபம் / (நட்டம்) – வரிக்குப் பிந்திய | 10,264,764 |
| 3.6 | தேறிய இலாபம் / (நட்டம்) – வரிக்கு முந்திய | 11,935,773 |
| 3.7 | ஒரு பங்கின் உழைப்பு (ரூ.) | 34.22 |

நிதி: திறைசேரி திரட்டிய நிதியம்

குறிப்பு: நாட்டினுள் நிலவும் சாதகமற்ற காலநிலை காரணமாக உப்பு உற்பத்திக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்படக்கூடும்.

## 16.3 எதிர்காலத் திட்டங்கள் - 2023

| | திட்டம் | அடையும் வருடம் |
|---|---|---|
| 01 | ஆனையிறவு உற்பத்தியை 25000 மெற்றித் தொண்களாக அதிகரித்தல் | 2023 - 2024 |
| 02 | ஆனையிறவு சாதாரண உப்பு உற்பத்திக்கான இயந்திரத் தொகுதியை தாபித்தல் | 2023 - 2024 |
| 03 | மன்னார் சாதாரண உப்பு உற்பத்தி இயந்திரத்தொகுதியின் நீடிப்பொன்றை ஆரம்பித்தல் | 2024 |
| 04 | குறிஞ்சாதீவு உப்பளத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனியினால் மேற்கொள்ளல் | 2023 ∴ 2024 |

# 17

# தேசிய கடதாசிக் கம்பனி (NPC)

## 17.1 அறிமுகம்

ஆரம்பத்தில் காணப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் பின்னர் 1982 ஆம் ஆண்டு இலக்கம்: 17 இனையுடைய கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி நிறுவனமாக நிறுவப்பட்டுள்ளதோடுஇ தற்சமயம் 2007 ஆம் ஆண்டு இலக்கம்: 07 இனையுடைய கம்பனிச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக செயல்படுகிறது.

வாழைச்சேனை காகித ஆலை மற்றும் எம்பிலிபிடிய காகித ஆலை வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி நிறுவனத்தின் கீழ் காணப்படுகிறது.

## தொலைநோக்கு

அச்சிடலுக்கு தேவைப்படும் கடதாசி ,மற்றும் கணனி அச்சிடலுக்கு அவசியப்படும் கடதாசி உற்பத்தித் துறையில் இலங்கைச் சந்தையில் முன்னணி வகித்தல்

## பணிக்கூற்று

"சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் செலவு குறைந்த முறைகளை பின்பற்றுவதில் வாடிக்கையாளர் தேவைகளுக்கு ஏற்ப காகிதத்தை தயாரித்து விற்பனை செய்தல்."

## செயலாற்றுகை

- 2019 திசெம்பர் மாதத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாழைச்சேனை காகித ஆலையின் உற்பத்தி நடவடிக்கைகள் இலக்கம் : அமை/20/0561/224/015 மற்றும் 2020.03.18 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் படி 2020 ஜூலை மாதம் முதல் வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி நிறுவனமாக மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான எம்பிலிபிடிய கடதாசி ஆலை அமைந்துள்ள காணி (111 ஏக்கர் 02 ரூட் 33 பேர்ச்சஸ்) நீண்ட கால குத்தகை அடிப்படையில் 30 வருட காலத்திற்கு

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி நிறுவனத்திற்கு வழங்க இலக்கம்: அமை21/1015/320/032 மற்றும் 2021.07.12 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, 2021.10.13 ஆந் திகதி முதல் 30 வருட காலத்திற்கு எம்பிலிபிடிய கடதாசித் தொழிற்சாலை அமைந்துள்ள காணிப் பகுதிக்கு நீண்ட கால குத்தகைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- 2012 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டிருந்த எம்பிலிபிட்டிய கடதாசித் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை அரச மற்றும் தனியார் கூட்டுத் திட்டத்தின் கீழ் மீள ஆரம்பிப்பதற்காக இலக்கம்: அமை/22/0254/320/010 மற்றும் 2022.02.28 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி நிறுவனம் மற்றும் முதலீட்டு நிறுவனமான KSPA Embilipitiya Paper Mills (Pvt) Ltd இற்கிடையில் 30 வருட காலத்திற்கான மேற்படித் திட்டத்திற்கான ஒப்பந்தம் 2022.03.09 ஆந் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது. ஆலையில் துண்டிக்கப்பட்டுள்ள மின் விநியோகத்தை மீள சீரமைத்ததன் பின்னர் 18 மாதங்களில் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

| மாதம் | உற்பத்தி (மெ.டொ.) | வருமானம் (ரூபா.) |
|---|---|---|
| ஜனவரி | 108.62 | 15,370,620.00 |
| பெப்ரவரி | 175.78 | 23,632,137.00 |
| மார்ச் | 188.77 | 26,976,825.31 |
| ஏப்ரல் | 95.5 | 19,342,380.88 |
| மே | 138.46 | 36,192,150.00 |
| ஜூன் | 89.70 | 32,457,050.00 |
| ஜூலை | 49.71 | 21,564,202.00 |
| ஆகஸ்ட் | 81.61 | 37,103,989.00 |
| செப்டம்பர் | 126.76 | 50,510,036.60 |
| **மொத்தம்** | **1054.21** | **263,149,390.79** |

## 17.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் இறுதியில்)

**வாழைச்சேனை காகித ஆலையின் கடதாசி உற்பத்தி மற்றும் ஈட்டப்பட்ட வருமானம்**

**எம்பிலிப்பிடிய காகித ஆலையின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதனால் கிடைக்கும் நன்மைகள்**

- திட்டத்தில் முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை : ரூபா. 3.5 மில்லியன்.
- உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் நாளாந்த காகித உற்பத்தி ( கூழ் அடிப்படையிலான காகிதம்): 250 மெட்ரிக் டொன்.
- வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறும் வருடாந்த வருவாய் (Annual Turnover) பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

  வருடாந்தம் மேற்கொள்ளப்படும் உற்பத்தி X 3%

  இன் விற்பனை விலை (Transfer Price X 3%)

**வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் வழைச்சேனை காகித ஆலை அலுவலகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.**

## 17.3 எதிர்காலத் திட்டம் - 2023

- *வாழைச்சேனை காகித ஆலையின் கடதாசி உற்பத்தி இயந்திரங்களை (Paper Machine & Board Machine) பழுதுபார்த்து மாதாந்த கடதாசி உற்பத்தியை அதிகரித்தல்.*
- *வாழைச்சேனை காகித ஆலையின் கூரை மேல் சூரிய மின் கள அமைப்பினை (Solar Power System) நிறுவுதல்.*
- *தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையுடன் ஒன்றிணைந்து ஏறாவூர் தொழிற்பேட்டைக்கான குடிநீர் விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.*
- *வாழைச்சேனை காகித ஆலை வளாகத்தில் அரச மற்றும் தனியார் பங்காளித்துவ முறையின் கீழ் பல்வகைப்படுத்தப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்*

# 18

# இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் (LMSL)

## 18.1 அறிமுகம்

இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு 1992ஆம் ஆண்டில் முழுமையாக அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனமாக மாறியது. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க புதிய கம்பனிகள் சட்டத்திற்கு ஏற்ப, . ீடீ587 என்ற பதிவிலக்கத்தின் கீழ் 2008.09.16ஆம் திகதி முழுமையாக அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனமாக மீண்டும் பதிவு செய்யப்பட்டது. இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் இராஜகிரிய பிரதேசத்தில் அமைந்துள்ளதுடன், அதன் உற்பத்தி நிலையம் திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டை பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ளது.

### தொலைநோக்கு

"இலங்கையில் அரச உற்பத்தித் துறையில் தேசியப் பொருளாதாரத்திற்கு முதன்மை பங்களிப்பாளராக இருத்தல்"

### பணிநோக்கு

"இலங்கையின் வளர்ச்சிக்கு உகந்த வகையில் பங்களிக்கும் வகையில் பசுமைக் எண்ணக்கருவின் கீழ் சமீபத்திய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உள்நாட்டு மற்றும் உலகளாவிய வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கனிய மணல் வகைகளுக்கு பெறுமதி சேர்த்தல்"

### நிறுவனத்தின் முக்கிய வகிபாகம்

- மூல மணல் அகழ்வின் செயன்முறைப்படுத்தல் மற்றும் பௌதீக பண்புகளுக்கு ஏற்ப இல்மனைட், ரூடைல், சேர்கோன் கார்னெட், மொனாசெட், குரூட் சேர்கோன், ஹை டை இல்மனைட் போன்ற பாரமான கனிய மணல்களை பிரித்தல்.
- சர்வதேச விலைமனுக்கள் மூலம் பாரக் கனிய மணல் ஏற்றுமதி

- புதிய பாரக் கனிய மணல் படிவுகளை கண்டறிதல் மற்றும் ஆய்வு செய்தல்

- அத்தகைய படிவுகளில் இருக்கும் பாரக் கனிய மணல்களை அகற்றுவதற்கு பூர்வாங்க சுற்றுச்சூழல் ஆய்வுகள் அல்லது சுற்றுச்சூழல் விளைவு ஆய்வை நடத்துதல்.

- பாரக் கனிய மணல் அடையாளம் காணப்பட்ட படிவுகளின் பொருளாதார சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்தல்

- நிறுவனத்திற்குச் சொந்தமான பாரக் கனிய மணல் படிவுகளின் அளவை விரிவுபடுத்துதல்.

- புல்மோட்டை பொறித் தொகுதியின் நவீனமயமாக்கல் பணிகளை முடிப்பதன் மூலம், உற்பத்தியானது ஆண்டுக்கு 75,000 மெட்ரிக் தொன் இல்மனைட் உற்பத்தி அளவை அடைதல் (2022 டிசம்பர் 31க்குள்).

**புல்மோட்டை அகழ்வு மற்றும் மீள்நிரப்புதல் பணிகள் நடைபெறும் முறை**

**அகழ்வு**





**மண் நிரப்பல்**

## 18.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் வரை)

**விற்பனை வருமானம**

மூலம்: லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிடட்

| மாதம் | விற்பனை வருமானம் (ரூ.மில்) |
|---|---|
| ஜனவரி | 326.00 |
| பெப்பிரவரி | 254.00 |
| மார்ச் | 1.00 |
| ஏப்ரில் | 0 |
| மே | 2.00 |
| ஜுன் | 31.00 |
| ஜுலை | 0 |
| ஆகஸ்ட் | 0 |
| செப்டெம்பர் | 1,660.00 |
| **மொத்த தொகை** | 2274.00 |

மூலம்: லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிடட்




**2022 செப்டெம்பர் 30இல் உள்ளவாறான உற்பத்தி(மெ.தொ.)**

| | உற்பத்தி(மெ.தொ.) | | | |
|---|---|---|---|---|
| மாதம் | இல்மனைட் | ரூடைல் | ஸேர்கோன் | ஹை டை இல்மனைட் |
| ஜனவரி | 5052 | 114 | 56 | 278 |
| பெப்பிரவரி | 3912 | 140 | 13.2 | 282 |
| மார்ச் | 1798 | 113 | 33.8 | 251 |
| ஏப்ரில் | 1256 | 39 | 20.88 | 116 |
| மே | 912 | 0 | 22.16 | 0 |
| ஜுன் | 0 | 0 | 24.88 | 0 |
| ஜுலை | 0 | 0 | 9.16 | 0 |
| ஆகஸ்ட் | 0 | 0 | 7.48 | 0 |
| செப்டெம்பர் | 730 | 26 | - | 66 |
| **மொத்த தொகை** | 13660 | 432 | 187.56 | 993 |

மூலம்: லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிடட

**உற்பத்தி**




மூலம்: லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிடட்

## 18.3 எதிர்காலத் திட்டங்கள் - 2023

- 2023 இன் இறுதியில் கொக்கிளாய் பொறித்தொகுதியில் கட்டுமானப் பணிகளின் ஆரம்பம் மற்றும் கொக்கிளாய் சுத்திகரிப்பு பொறித் தொகுதியின் உற்பத்தி
- கொக்கிளாய் அகழ்வு நடவடிக்கைகளைத் தொடர்தல்.
- பொடுவகட்டு பிரதேசத்தில் நடமாடும் பொறித்தொகுதியை நிறுவுதல்.
- சுற்றுச் சூழல் விளைவு மதிப்பீடு மற்றும் ஆரம்ப சுற்றுச்சூழல் சோதனை அறிக்கை என்பவற்றிற்கு ஏற்ப தொடர்புடைய சுற்றுச்சூழல் பரிந்துரைகளைப் பெறுவதன் மூலம் அகழ்வுக்கான அனுமதிகளைத் தொடர்ந்து பெறுதல்.
- கடல் ஆய்வை தொடங்குதல்
- கனிய மணல் பெறுமதி சேர்த்தல் உற்பத்தி கைத்தொழிலை நிறுவுதல் (2 கட்டங்களில் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது)

1- நிறுவனத்தால் அடையாளம் காணப்பட்ட சில உற்பத்திப் பொருட்களுக்கு பெறுமதி சேர்த்தல் தொடர்பில் கவனம் செலுத்துதல்.

2- தொழில்துறை அமைச்சினால் முன்மொழியப்பட்ட பெறுமதி சேர்த்தல் நிகழ்ச்சித் திட்டத்தின்படி பொருத்தமான முதலீட்டாளருடன் இல்மனைட் தொடர்பான பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தித் தொழிலுக்கான பரிந்துரை.

- புதிய கட்டிடத்தில் தலைமை அலுவலகத்தை ஸ்தாபித்தல்

# 19

# இலங்கை களிமண் கூட்டுத்தாபனம் (CCC)

## 19.1. அறிமுகம்

தேசிய சிறிய கைத்தொழில்கள் கூட்டுத்தாபனத்தின் செங்கல் மற்றும் ஓடு அலகானது 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது.

தேசிய சிறிய கைத்தொழில்கள் கூட்டுத்தாபனத்தின் செங்கல் மற்றும் ஓடு அலகானது 1972 இல் இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபனத்துடன் கூட்டிணைக்கப்பட்டது.

கூட்டுத்தாபனத்தின் மட்பாண்ட பிரிவானது 1990 ஜனவரியில் தனியார் மயப்படுத்தப்பட்டதுடன் செங்கல் மற்றும் ஓடு அலகானது **“இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபனம்”** எனும் பெயரில் தொடர்ந்தும் இயங்கி வருகின்றது.

**நோக்கு**

கூரை ஒடுகள்இ செங்கற்கள் மற்றும் உயர்தரமான களிமண் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியிலும் சந்தைப்படுத்தலிலும் முதன்மையான நிறுவனமாக விளங்குதல்.

**செயற்பணி**

சமூகப் பொறுப்புணர்வுடன் கூடிய அனைத்துப் அக்கறைதாரர்களும் அதிகபட்ச பங்களிப்பை வழங்குவதனூடாக உயர்தர புத்தாக்க தயாரிப்புகளை போட்டி விலையில் வழங்குவதன் மூலம் மொத்த வாடிக்கையாளர் திருப்தியினை உறுதி செய்தல்.

| தொழிற்சாலை | அமைவிடம் | ஆதனம் முன்னேற்ற | அறிக்கை தற்போதைய நிலை 2022 |
|---|---|---|---|
| | | | |
| எரகம | அம்பாறை | 232 ஏக்கர்கள் | உச்சபட்ச திறனுடனான தொழிற்பாடு |
| மஹியங்கனை | மஹியங்கனை | 94 ஏக்கர்கள் | தொழிற்பாடு ∴ இலங்கை விமானப்படை நீலகிரிய மற்றும் தீகவபிரிய செங்கற்களை உற்பத்தி செய்கின்றது. நுழுஜ கோரப்படவுள்ளது. |
| உஸ்வெவ | எம்பிலிப்பிட்டிய | 19 ஏக்கர் | 2021 செப்ரெம்பரிலிருந்து தொழிற்பாடுக்ள மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விறகுஇ மின்சாரம் மற்றும் டீசல் பற்றாக்குறை காரணமாக தொழிற்பாடானது மீளவும் நிறுத்தப்பட்டுள்ளதுநுழுஜ கோரப்படவுள்ளது. |
| யட்டியன | மாத்தறை | 06 ஏக்கர்கள் | தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. கைத்தொழில் பேட்டையில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| பிங்கிரிய | பிங்கிரிய | 03 ஏக்கர்கள் | 2021 நடுப்பகுதி வரையில் சந்தஹிருசெய செங்கற்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன்ன. தற்பொது தொழிற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. |
| வெயுத | குருநாகல் | 09 ஏக்கர்கள் | அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. நுழுஜ ஆனது செயனமுறையிலுள்ளது. |
| எளயபட்டுவ | அநுராதபுரம் | 33 ஏக்கர்கள் | இலங்கை இராணுவமானது நீலகிரிய மற்றும் தீகவபிரிய செங்கற்களை உற்பத்தி செய்துள்ளது. கைத்தொழில் பேட்டையில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| ஒட்டுசுட்டான் | முல்லைத்தீவு | 13 ஏக்கர்கள் | பழுது பார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகினறன. 80% இற்கும் அதிகமானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. நுழுஜ கோரப்படவுள்ளது. |
| பங்கதெனிய | பங்கதெனிய | 07 ஏக்கர்கள் | காணி மட்டும். |
| மொத்தம் | | 416 ஏக்கர்கள் | |

**இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபனத்தின் தற்போதைய நிலை**

மூலம்: இலங்கை களிமண் கூட்டுத்தாபனம்

## 19.2 முன்னேற்றம் (2022 செப்ரெம்பர் 30 ஆம் திகதியன்று)

1. 2022 ஜனவரியிலிருந்து அனைத்து பொருட்களுக்குமான விற்பனை விலைகள் 10% இனால் அதிகரிக்கப்பட்டதுடன் அமைய அடைப்படையிலான கூலிகளும் 10% இனால் அதிகரிக்கப்பட்டது.
2. 2022 மே 1 இலிருந்து 10% இனால் செங்கற்கள் மற்றும் ஓடுகளின் விற்பனை விலைகள் அதிகரிக்கப்பட்டது.
3. தகைமைகாண் புள்ளிகள்: ரூபா. 8.0 மில்லியன் மாதாந்த விற்பனை மற்றும் இறுதி உற்பத்திகள் 87மூ தரம் ஒன்று மாதாந்த வினைத்திறன்.

4. 2022 ஜனவரியிலிருந்து அமைய அடிப்படையிலான கூலிகள் 10% இனால் அதிகரித்துள்ளதுடன் 2022 மே இலிருந்து அமைய அடிப்படையிலா ன கூலிகள் நாளொன்றுக்கு களும் நாளொன்றுக்கு 100 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டதுடன் 2022 ஜூன் 01 இலிருந்து செயலாற்றுகை அடிப்படையிலான ஊக்குவிப்புத் திட்டமொன்ற அறிமுகப்படுத்தப்ப்ட்டது.

பிரதானசெயற்பாட்டுக் காட்டி
இலஙகை களிமண் கூட்டுத்தாபனம்





| செயற்பாடுகள் | 2021 உணமை | 2022 இலக்கு |
|---|---|---|
| உற்பத்தி (மாத த்திற்கு துண்டுகள்) | 147,841 | 162,625 |
| விற்பனை (மாத த்திற்கு ரூ.மில்) | 6.93 | 7.62 |
| இலாபம் (வருடத்திற்கு ரூ.மில்) | 5.05 | 25 |
| புதிய தயாரிப்பனை அறிமுகப்படுத் தல் | தயாரிக்கப் பட்ட களிமண் | வெற்றுசெங்கல்இ டெராகொடாஇ பிள்ளைகளுக்கான களிமண் |

மூலம்: இலங்கை களிமண் கூட்டுத்தாபனம

## விலை உயர்வு 2021/2022

| உருப்படி | அளவீட்டு அலகு | 2021 ஜூலை உண் மை (ரூ.) | 2022 ஜூலை உண்மை (ரூ.) | அதிக ரிப்பு வீதா சாரம் |
|---|---|---|---|---|
| எரிபொரு ள் | லீற்றர் | 110.85 | 431.78 | 390% |
| களிமண் | செலவு / கியூப் | 500.00 | 1269.09 | 254% |
| விறகு | செலவு / யார்ட் | 1636.56 | 2393.71 | 146% |
| மின்சாரம் | உற்பத்தி அலகு | 1.54 | 2.11 | 137% |
| தொழிலா ளர் செலவு | செலவு /மனித நாட்கள் | 958.77 | 1076.42 | 112% |
| உற்பத்தி செலவு | செலவு / ஓடு | 22.54 | 33.07 | 147% |

மூலம்: இலங்கை களிமண் கூட்டுத்தாபனம

**அரச – தனியார் பங்குடமையுடன் உஸ்வெவஇ மஹியங்கனை மற்றும் ஒட்டுசுட்டான் தொழிற்சாலைகளின் தொழிற்பாட்டினை மீளவும் ஆரம்பித்தல்.**

ஆர்வமுடைய தரப்புக்கள் - சம்சன் ரஜரட்ட ஓடுகள்இ விசன் கெயர் குழுமம்இ சுவீந்த ஓடுகள் – தங்கொட்டுவ

**எதிர்கால திட்டமிடல்கள் – 2023**

| திட்டம் | விபரணம் |
|---|---|
| யு | அனைத்து மூன்று தொழிற்சாலைகளுக்கும் நுழுஐ இனைக் கோருதல் (ஏற்கனவே சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.). |
| டீ | தற்போதுள்ள இயந்திரங்களைப் பழுதுபார்த்து மாதாந்ம் 50, 000துண்டுகள் உற்பத்தித் திறனுடன் கலிகட் ஓடுகள் உற்பத்தியினை ஆரம்பித்தல். |
| ஊ | மாதாந்தம் 150,000 துண்டுகள் வரையில் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில் துவாரமுடைய செங்கற்கள்இ றெறா – கொட்டா தரை ஓடுகள் மற்றும் வயர் கட் செங்கற்கள் உற்பத்தியினை அறிமுகப்படுத்துதல். |
| னு | இத்தாலி /ஸஷ்பெயின் / மலேசியாவிலிருந்து புதிய அச்சுருக்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் ஈரோ ஓடுகள் /ரோமன் ஓடுகள் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட புதிய உற்பத்திகளினை அறிமுகப்படுத்துதல். |
| நு | கிளாஸ் ஓடுகள் மற்றும் எக்ஸரஷன் )றெறா – கொட்டா (தரை ஓடுகளினை உற்பத்தி |

| | |
|---|---|
| | செய்வதற்கு புதிய இயந்திரங்களுடனான) அதே அமைவிடத்திலுள்ள புதிய தொழிற்சாலை ( புதியதொரு உற்பத்தியினை அறிமுகம் செய்தல். |
| கு | சர்வதேச பல்கலைக்கழகங்களுடன்இணைந்துள்ள புதிய வெளிநாட்டு மாணவர்களுக்கான களிமண் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் மற்றும் பயிற்சி நிலையம். |

மூலம்: இலங்கை களிமண் கூட்டுத்தாபனம

1. துளை செங்கற்கள் (செங்கற்கள் மீள பதித்தல்)
2. துளை செங்கற்கள் (செங்கற்கள் மீள பதித்தல்)
3. வெற்று தரை ஓடுகளினை இலங்கை சந்தையில் அறிமுகப்படுத்துதல்.
4. தேசிய கலை மன்றம் மூலம் மட்பாண்ட கிராமங்களுக்கு பதப்படுத்தப்பட்ட
5. களிமண்ணை வழங்குதல்).கையிலுள்ள கட்டளை 25 மெட்ரிக் தொன
6. மேற்பரப்பை கடினப்படுத்துதல் மற்றும் டெர்ரா-கோட்டா தரை ஓடுகளின் தரத்தை மேம்படுத்துதல்.
7. 'எஸ்' வகை ஓடுகளின் தரத்தை மேம்படுத்தி உள்ளூர் சந்தையில் அவற்றினை அறிமுகப்படுத்துதல்.
8. புதிய வெளியேற்றப்பட்ட டெர்ரா-கோட்டா தரை ஓடுகளினை அறிமுகம் செய்தல்.
9. இணையதளம்இ 'இ' சந்தைப்படுத்தல்இ புதினப் பத்திரிகை விளம்பரங்களை உருவாக்குதல்.
10. அம்பாறைஇ யட்டியான மற்றும் உஸ்வெவ தொழிற்சாலைகளுக்கு சூரிய சக்தி திட்டங்கள் அறிமுகம் செய்தல்
11. கிராமப்புறங்களில் தொட்டி களிமண் (ளுடவை ஊடயல) பயன்படுத்தி கையால் செய்யப்பட்ட டெர்ரா-கோட்டாஇ ஹாலோ செங்கல் மற்றும் கூரை ஓடுகளினை உற்பத்தி செய்தல்
12. ஒட்டுசுட்டான்இ வெயுதஇ மஹியங்கனை மற்றும் உஸ்வெவ தொழிற்சாலைகளுக்கு பொருத்தமான முதலீட்டாளர்களைக் கண்டறிவதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.
13. எரகம களிமண் மாதிரிகள் ஏற்றுமதி தயாரிப்புகளுக்காக இலங்கையில் உள்ள பெரிய அளவிலான சிவப்பு களிமண் உற்பத்தியாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன.
14. யுவுப கையுறைகள் தொழிற்சாலை டீழுஜ கட்டுநாயக்கவில் அதிக விலை கொண்ட பென்டோனைட் களிமண்ணை எரகம பதப்படுத்தப்பட்ட களிமண்ணுடன் மாற்றுவதற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.
15. ர்யுடீஐவுயுவு திட்டங்களுக்காக சிவப்பு களிமண் கூரை-ஓடுகள்இ ஹாலோ செங்கல்கள் மற்றும் டெர்ரா-கோட்டா ஓடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி குறைந்த விலையில் வீடுகளை நிருமாணித்தல் (ஏற்கனவே நாட்டிற்கான பணிப்பாளர் திரு. ஹ்வா லியுடன் இது தொடர்பில் விவாதிக்கப்பட்டது).
16. பூந்தொட்டிகள் மற்றும் மரக்கறி சாடிகளின் உற்பத்தி (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன).
17. கூரை ஓடுகளுக்கான குறைந்த விலையில் படிந்து உறையும் முறை அறிமுகம் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன).
18. பாடசாலைகளுக்கு முஐனு-ஊடுயுலு உருவாக்குதல் மாதிரி தயாரிப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன.

சிவப்பு களிமண் / டோலமைட் சிமெண்ட் உருவாக்குதல் ஊநுஆநுவேழு உடனான சோதனைகள் நிறைவு பெறுகின்றன.

# 20

# வரையறுக்கப ்பட்ட பி.சீ.சீ.நிறுவனம் (BCC)

## 20.1 அறிமுகம்

தற்போதுஇ கைத்தொழில் அமைச்சின் கீழ் பி.சி.சி லங்கா லிமிடெட் செயல்படுகிறது. பி.சி.சி லங்கா லிமிடெட்இ தூய வெள்ளை தேங்காய் எண்ணெய்இ சுத்திகரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய்இ குளியல் சோப்புஇ சலவை சோப்புஇ சலவை தூள்இ பாத்திரம் கழுவும் கிருமிநாசினிகள்இ காற்று புத்துணர்ச்சிகள் மற்றும் கை கழுவும் திரவங்கள் போன்ற உயர் தர நுகர்வோர் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறது.

நிறுவனத்தின் பிரதான உற்பத்தியைத் தவிர பி.சி.சி லங்கா லிமிடெட் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அலுவலகம் மற்றும் சேமிப்பு இட வசதிகளை வழங்குவதன் மூலம் குறிப்பிடத்தக்க வருமானத்தை ஈட்டி வருகிறது.

### பார்வை

**“நூற்றாண்டு பழைய மரபுகளைப் பேணுகையில்இ நிலையான மற்றும் வளமான இலங்கையில் பிரீமியம் பிராண்ட் பெயராக இருப்பது”**

### பணி

**ஒரு நிலையான சூழல்இ முக்கிய மதிப்புகள் மற்றும் பணியாளர் திருப்தி ஆகியவற்றைப் பராமரிக்கும் போது நுகர்வோரை திருப்திப்படுத்துதல்”**

### முக்கிய இலக்கு

“உள்ளூர் மதிப்புகளைப் பேணுகையில்இ ஒரு முன்னோடி மற்றும் தன்னிறைவு பெற்ற பொது நிறுவனமாக வணிகத்தில் இருக்க வேண்டும்”

### பிரதானசெயற்பாடுகள்

- தேங்காய் எண்ணெய் சுத்திகரிப்பு
- சலவை மற்றும் கழிப்பறை சோப்பு உற்பத்தி
- கிருமிநாசினிகள் மற்றும் சவர்க்காரம் தயாரித்தல்
- நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட முகவர்கள் மூலம் உள்ளூர் சந்தைக்கு "பி.சி.சி" என்ற பெயரில் தயாரிப்புகளை விநியோகித்தல்.
- ஒப்பந்தங்கள் மற்றும் போட்டி ஏல நடைமுறைகள் மூலம் நவீன வர்த்தக வணிகங்களுக்கு நேரடி விற்பனை
- பி.சி.சி லங்கா லிமிடெட் க்கு சொந்தமான அலுவலகம் மற்றும் சேமிப்பக இடங்களை வாடகைக்கு விடுதல்.

### பி சி சி தயாரிப்புகள்

பி.சி.சி லங்கா லிமிடெட்டின் தயாரிப்பு போர்ட்ஃபோலியோ பின்வரும் தயாரிப்பு வரிசைகளைக் கொண்டுள்ளது.

- சமையல் எண்ணெய்கள்: பி.சி.சி வெள்ளை தேங்காய் எண்ணெய் மற்றும் குக்ஸ் ஜாய்
- கழிப்பறை சோப்பு: செருப்பு மரம்இ சுவேந்திர மூலிகைஇ சுவேந்திர மலர்
- சலவை சோப்: இறையாண்மை பட்டிஇ ஸ்னோ-வைட்
- கிருமிநாசினிகள்: பினோல்இ டாய்லெட் பவுல் கிளீனர்



- சலவை தூள்: ஸ்னோ-வைட்
- டிஷ் வாஷ்: டிஷ்வாஷ் லிக்விட்இ டிஷ்வாஷ் பவுடர்
- ஹேண்ட் வாஷ்
- ஏர் ஃப்ரெஷனர்

தற்போதைய சந்தை பங்கு மற்றும் உற்பத்தி திறன்

தேங்காய்எண்ணெய் உற்பத்தி

| உற்பத்தி | உற்பத்தி அளவு | சராசரி உண்மையான உற்பத்தி |
|---|---|---|
| எண்ணெய் உற்பத்தி | 1500 | 1200 |
| சோப்பு உற்பத்தி | 600 | 150-200 |

***மூலம் - பி.சீ.சீ லங்கா நிறுவனம்***

தேங்காய் எண்ணெய் சந்தையின் பி.சி.சி சந்தை பங்கு மொத்த தேங்காய் எண்ணெய் சந்தையில் சுமார் 2.5% ஆகும். இருப்பினும்இ தேங்காய் எண்ணெயின் ஊட்டச்சத்து மற்றும் இரசாயன உள்ளடக்கம் பற்றிய பாரிய கவலையுடன்இ கடந்த சில மாதங்களில் பி.சி.சி தயாரிப்புகளுக்கான தேவை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. இதன் விளைவாகஇ பிராண்டட் பிரிவில் பி.சி.சி சந்தை பங்கு 15மூ - 20 மூ வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதனுடன்இ பிசிசி தேங்காய் எண்ணெய் பிராண்ட் சந்தையில் மிகவும் நம்பகமான தேங்காய் எண்ணெய் பிராண்டாக மாறியுள்ளது.

*சவர்காரத் தயாரிப்பு*

எவ்வாறாயினும்இ பிசிசி சோப்பு தயாரிப்புகளுடன் சந்தையை மிகவும் கவர்ச்சிகரமான முறையில் கைப்பற்ற புதிய இயந்திரங்களுடன் கூடிய நவீன சோப்பு தொழிற்சாலையை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போதைய சந்தையில் பிசிசி பிரதிநிதித்துவம் பின்வருமாறு

***சவர்கார தயாரிப்பு சந்தைப் பங்கு***

| சவர்கார வகை மெ.தொ . | சராசரி மதிப்பிடப்பட்ட தேவை | பிசிசி சந்தை பங்கு |
|---|---|---|
| அழகு சோப்பு | 34000 | 1மூ |
| சலவை சோப்பு | 30000 | 1.2 மூ |

***மூலம் - பி.சீ.சீ லங்கா நிறுவனம்***

***உற்பத்தி அளவு***

பிசிசி லங்கா லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமான பெரும்பாலான இயந்திரங்கள் மிகவும் பழமையானவை மற்றும் இயந்திரங்களின் திறன் பின்வருமாறு. அதன்படிஇ உற்பத்திச் செலவைக் குறைக்கும் உயர் நோக்கத்துடன் அந்த இயந்திரங்களுக்குப் பதிலாக முழுத் தானியங்கி இயந்திரங்களைப் பயன்படுத்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

## 20.2. முன்னேற்றம் *(2022செப்டெம்பர் இறுதியில்)*

1. தேசிய தொழில்துறை கண்காட்சி 2022

2022 ஆம் ஆண்டுக்கான தேசிய கைத்தொழில் கண்காட்சி இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 02 ஆம் திகதி முதல் 06 ஆம் திகதி வரை கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டது.

தொழில் கண்காட்சி - பிசிசி லங்கா லிமிடெட்டின் சாவடி



இந்த ஆண்டுஇ "சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்களுக்கான தொழில்துறை கண்டுபிடிப்பு" என்ற தலைப்பில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த கண்காட்சியில்இ நாட்டில் உள்ள 20 முன்னணி தொழில்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிசிசி உள்ளிட்ட முன்னணி தொழிலதிபர்களால் 400 அரங்குகள் வழங்கப்பட்டன.

பிசிசி பிராண்டை ஊக்குவிக்கும் நோக்கத்துடன்இ 2022 ஆம் ஆண்டின் தேசிய தொழில்துறை கண்காட்சியில் பிசிசி நிதி ஆதரவாளர்களில் ஒருவராக பங்கேற்றதுஇ மேலும் இந்த கண்காட்சியின் மூலம் பிசிசி தயாரிப்புகள் குறித்த பெரிய விளம்பரம் செய்யப்பட்டது..

## 2தேசிய கைத்தொழில் சிறப்பி விருது வழங்கும் வைபவம் *2022*

அதேசமயம்இ 2022ஆம் ஆண்டுக்கான தேசிய கைத்தொழில் சிறப்பு விருதுகள் வழங்கும் விழா 15.02.2022 அன்று மாலை பத்தரமுல்லை வாட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெற்றது. இதன்மூலம்இ தேசிய கைத்தொழில் கண்காட்சியை வெற்றியடையச் செய்வதற்காக வழங்கப்பட்ட நிதி அனுசரணையை அங்கீகரிப்பதற்காக பிசிசி லங்கா லிமிடெட் நிறுவனத்திற்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.

*நிதி உதவிக்கான நினைவு பரிசு*



## 3. தெகிளை அக்ரோ ஃப்ரெஷ் சிறப்பு விற்பனை வலையமைப்பு

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு சமூகத்திற்கு




நிவாரணம் அளிக்கும் வகையில்இ வேளாண் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய உணவு மேம்பாட்டு வாரியம்இ "அக்ரோ ஃப்ரெஷ்" என்ற புதிய முகத்தில் வாரியத்திற்கு சொந்தமான கடைகளை தொடங்கும் திட்டத்தை நடத்தி வருகிறது. அருமை". இந்தத் திட்டத்தின் கீழ்இ பிசிசி தயாரிப்புகளும் ஜூலை 2022 முதல் அதே நெட்வொர்க்குடன் இணைக்கப்பட்டுஇ நுகர்வோருக்கு மலிவு விலையில் தயாரிப்புகளை விற்கின்றன.

*அக்ரோ ஃப்ரெஷ் சூப்பர்- தெஹிவளை*




முதற்கட்டமாகஇ பிசிசி தயாரிப்புகள் தெஹிவளை "அக்ரோ ஃப்ரெஷ் சூப்பர்ஸ்டோருக்கு" வழங்கப்பட்டன.
எதிர்காலத்தில் இந்த நெட்வொர்க்கின் கீழ் தொடங்கப்படும் அனைத்து கடைகளுக்கும் பிசிசி தயாரிப்புகளை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

## 4. புதிய தயாரிப்பு மேம்பாடு மற்றும் பேக்கிங் மற்றும் லேபிள்களின் மறுவடிவமைப்பு

### சவர்க்காரம்

சமீபத்தில்இ நிறுவனம் ஸ்னோவைட் கேர் என்ற சலவை சோப்பு திரவ தயாரிப்பை வசதியான மற்றும் மலிவு விலையில் அறிமுகப்படுத்தியது மற்றும் வாடிக்கையாளர்கள் இந்த புதிய தயாரிப்பை எந்த பல்பொருள் அங்காடியிலிருந்தும் வாங்கலாம்.

### தேங்காய் எண்ணெய்

மேலும்இ தேங்காய் எண்ணெய் தயாரிப்புகளின் பேக்கிங் மற்றும் லேபிள்கள் மற்ற போட்டித் தயாரிப்புகளுடன் பொருந்துவதற்கும்இ அதிக வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்காகவும் மறுவடிவமைப்பு செய்யப்படுகின்றன.

*ஸ்னோ ஒயிட் கேர்' புதிதாக வடிவமைக்கப்பட்ட வெள்ளை தேங்காய் எண்ணெய் லேபிள்*

## 5. நீண்ட கால நிலுவைத் தொகைகளின் கொடுப்பனவுகள்

கடந்த வருடங்களின் கணக்குகளில் இருந்து 18 மில்லியன் ரூபாவை நீண்ட கால கடன்களிலிருந்து செலுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 2022 லோன் பேமெண்ட்களின் விவரம் கீழே உள்ளது.

### நிலுவையில் உள்ள கொடுப்பனவுகள் 2022

| கடன் கொடுத்தவர் | பணம் செலுத்தும் தேதி | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|
| பரந்தன் | 01.03.2022 | ரூ. 3,612,661.00 |
| அஜந்தா ஆயில் மில்ஸ் | 25.03.2022 | ரூ.4,486,786.00 |
| களுபோவிட்டியனா தேயிலை தொழிற்சாலை (மூலதனத் தொகை) | 21.06.2022 | ரூ.10,000,000.00 |
| **மொத்த கடன் கொடுப்பனவுகள்** | | ரூ. **18,099,447.00** |

***மூலம் - பி.சீ.சீ லங்கா நிறுவனம்***

## 6. பிசிசி லங்கா நிலத்தின் அளவீடு

11 ஏப்ரல் 2019 அன்றுஇ கொழும்பு 12இ மீரானியா தெருவில் உள்ள பி.சி.சி இன்ஸ்டிடியூட் வளாகத்திற்குச் சொந்தமான 12 ஏக்கர் நிலத்தின் 6 ஏக்கர் பகுதியின் உரிமையானது நீதிமன்ற வளாகத்தை விரிவாக்குவதற்காக நீதி அமைச்சகத்திற்கு மாற்றப்பட்டது.

பிசிசி கட்டிடத் திட்டம் மற்றும் பிசிசியின் பிற எதிர்காலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகஇ பிசிசியின் மீதமுள்ள 6 ஏக்கர் நிலப் பகுதி மீண்டும் அளவிடப்பட்டு நில அளவை ஜூலை 2022 இல் முடிக்கப்பட்டது.

### நிதி மற்றும் பௌதீக செயல்திறன் ஒப்பீடு

#### *நிதி செயல்திறன்*

| | 2021 [illegible] | 2022 [illegible] | [illegible] |
|---|---|---|---|
| [illegible] | 373.53 Mn | 534.33 Mn | 43% |
| [illegible] | 52.46 Mn | 74.23 Mn | 42% |
| [illegible] | 317.38 Mn | 441.02 Mn | 39% |
| [illegible] | **108.61 Mn** | **167.55 Mn** | **54%** |
| [illegible] | 51.33 Mn | 63.45 Mn | 24% |
| [illegible] | 2.2 Mn | 1.84 Mn | -16% |
| [illegible] | **55.08 Mn** | **102.26 Mn** | **86%** |

***மூலம் - பி.சீ.சீ லங்கா நிறுவனம்***

கடந்த ஆண்டு செயல்திறனுடன் ஒப்பிடுவதன் மூலம் நிதி செயல்திறன் ஒப்பீடு செய்யப்பட்டது. அதன்படிஇ கடந்த ஆண்டை விட விற்பனை வருவாயை 43மூ அதிகரிப்பதன் மூலம்இ நிர்வாக மற்றும் பிற செலவுகளை நிலையான மட்டத்தில் பேணுவதன் மூலம்இ குறிப்பிட்ட காலப்பகுதியில் 86மூ இலாப வளர்ச்சியை நிறுவனம் அடைய முடிந்தது.

மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் மாதாந்திர விற்பனை மதிப்பு மற்ற காலங்களை விட அதிகமாக இருந்தது.

நிகர லாபத்தை வலியுறுத்தும் போதுஇ பி.சி.சி லிமிடெட் ரூ.12 மில்லியன் மாதாந்திர லாபத்தை பராமரிக்க முடியும். முந்தைய ஆண்டுகளில் சராசரி மாத லாபம் ரூ.10 மில்லியன். செயல்திறனைப் பற்றி விரிவாகப் பார்க்கும்போதுஇ விற்பனையை அதிகரிக்கும் அதே வேளையில் செலவினங்களை நிலையான அளவில் பராமரிப்பது மற்றொரு பெரிய சாதனையாகக் கருதப்படலாம். தேவையற்ற செலவினங்களைக் குறைக்க தலைவர் வழங்கிய சரியான வழிகாட்டுதலின் மூலம் இது அடையப்பட்டது.

மேலும்இ நிறுவனம் 2022 மார்ச் மாதத்தில் ரூ.106.99 மில்லியன் விற்பனை மதிப்பை அடைந்ததன் மூலம் மிக உயர்ந்த விற்பனை மதிப்பை அடைய முடிந்தது. அதே நேரத்தில்இ நிறுவனம் ரூ 16.28 மில்லியன் மாதாந்திர லாபத்தைப் பெற்று அதே மாதத்தில் அதிக மாத லாபத்தைப் பெற்றது.விற்பனை மற்றும் லாபத்தின் வளர்ச்சி வரைபடமாக கீழே காட்டப்பட்டுள்ளது. அதன்படிஇ கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நடப்பு ஆண்டின் வளர்ச்சியை தெளிவாக அடையாளம் காண முடியும்

### மாதாந்த இலாபப் போக்கு




***மூலம் - பி.சீ.சீ லங்கா நிறுவனம்***

## பௌதீக செயல்திறன் ஒப்பீடு

இங்கேஇ அந்தக் காலத்தின் நிதி மற்றும் உடல் செயல்திறன் 2021∴2022 ரூ 2022∴2023 செயல் திட்டங்களால் நிறுவப்பட்ட இலக்குகளுடன் ஒப்பிடப்பட்டது.

### முன்னேற்றத்தை அடைதல்

| விளக்கம் | | உடல் முன்னேற்றம் (மெ.டன்) | | | நிதி முன்னேற்றம் (ரூ. மில்லியன்) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | உண்மையான | அடையும் இலக்குகளின் சதவீதம் | இலக்கு | உண்மையான | அடையும் இலக்குகளின் சதவீதம் |
| முக்கிய செயல்பாடுகள் | | | | | | | |
| I | சோப்பு | 316.35 | 43.51 | 14% | 85.37 | 22.12 | 26% |
| II | தேங்காய் எண்ணெய் | 622.66 | 556.49 | 89% | 426.84 | 512.21 | 120% |
| | தொகை | 939.01 | 600.00 | 63.9% | 512.21 | 534.33 | 104 % |

*மூலம் - பி.சீ.சீ லங்கா நிறுவனம்*

இதன்படிஇ நிறுவனம் 120மூ இலக்கை எட்டிய அதே வேளையில்இ தேங்காய் எண்ணையின் இலக்கு விற்பனை மதிப்பிற்கு அப்பால் செயல்பட முடிந்தது.

நிறுவனத்தின் தேங்காய் எண்ணெய் விற்பனை உற்பத்தியுடன் ஒப்பிடுகையில்இ சோப்பு மற்றும் பிற தயாரிப்புகள் இலக்குகளில் குறைந்த சாதனையைக் காட்டுகின்றன. இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் கோவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக சந்தையில் மூலப்பொருட்களின் பற்றாக்குறையால் இது முக்கியமாக விளைந்தது.

இருப்பினும்இ சோப்பு உற்பத்தியைப் பொறுத்தவரைஇ அதன் இலக்கு உற்பத்தியின் மூலம் 40மூ அடையப்படுகிறதுஇ இது முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் ஒரு நல்ல சாதனையாகக் கருதப்படலாம்.

தேங்காய் எண்ணெய் மற்றும் சோப்பு விற்பனை இலக்கு இரண்டையும் ஒரே உற்பத்திப் பிரிவாக எடுத்துக்கொண்டால்இ நிறுவனம் அதன் நிதி இலக்கை 104% சதவீதம் அடைய முடிந்தது.

இலக்கை நோக்கிய தயாரிப்பு




*மூலம் - பி.சீ.சீ லங்கா நிறுவனம்*

இலக்கை நோக்கிய விற்பனை




*மூலம் - பி.சீ.சீ லங்கா நிறுவனம்*

## 20.3 எதிர்கால திட்டங்கள் - 2023

1. **இழப்பீடு பெறுதல்**

பிசிசி லங்கா லிமிடெட்டின் நீண்டகால எதிர்காலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பிசிசிக்கு சொந்தமான நிலத்தின் ஒரு பகுதியை நீதிமன்ற வளாகத்திற்கு மாற்றுவதன் சார்பாக இழப்பீடு பெறுவதற்கான செயல்முறையை விரைவுபடுத்துங்கள்.

2. **நிறுவனத்தின் உற்பத்தி நடவடிக்கைகளின் மறுசீரமைப்பு மற்றும் மறுசீரமைப்பு மூலம் பி.சி.சி தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்துதல்**

தற்போதுஇ பி.சி.சி லங்கா லிமிடெட் சோப்பு மற்றும் சோப்பு தொடர்பான பிற தயாரிப்புகளை தயாரிப்பதற்கான பழைய இயந்திரங்களைக் கொண்ட கைமுறை உற்பத்தி வரிசையைக் கொண்டுள்ளது. அந்த இயந்திரங்கள் அதிக திறன் கொண்டதாக இருந்தாலும்இ அதிக இயந்திர பராமரிப்பு செலவும்இ இயக்க இயந்திரங்களுக்கு அதிக தொழிலாளர் செலவும் உள்ளது. மேலும்இ தற்போதைய உற்பத்தி வரிசையின் மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால்இ முன்னணி சோப்பு உற்பத்தியாளர்களுடன் ஒப்பிடும்போது இறுதி தயாரிப்பு குறைவான ஈர்ப்பைக் கொண்டுள்ளது. அதன்படிஇ முழுமையாக தானியங்கி இயந்திரங்கள் மூலம் உற்பத்தி வரிகளை மறுகட்டமைக்க முன்மொழியப்பட்டுள்ளது. இதன் விளைவாகஇ ஒரு மாதத்திற்கு 25 டன் சோப்புகள் மற்றும் சோப்பு தொடர்பான பொருட்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட முழு தானியங்கு உற்பத்தி வரிசையை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

**முன்மொழியப்பட்ட நவீன சவர்கார தொகுதி**



3. **தற்போதுள்ள கிடங்குகளை புதுப்பித்துஇ வாடகை இடத்திற்கு மதிப்பைச் சேர்த்தல்**

இந்நிறுவனம் தற்போது இருக்கும் அதிகமான கடைகளை வாடகைக்கு விட்டு அதிக வாடகையை சம்பாதித்து வருகிறது. அந்த வருவாயை மேலும் அதிகரிக்கஇ 85இ000 சதுர அடியில் கிடங்கை மறுவடிவமைப்பு செய்துஇ அதிநவீன கிடங்கு வளாகம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும்இ கிடங்கு வளாகம் முழு வசதியுடன் கூடிய கிடங்கு வளாகமாகத் திட்டமிடப்பட்டுள்ளதுஇ இது குளிர் சேமிப்பு அறைகள் மற்றும் திரவங்களை பெருமளவில் சேமித்து வைக்கக்கூடிய பெரிய தொட்டிகளைக் கொண்டிருக்கும்.

4. **பிசிசி கிரீன் எனர்ஜி ப்ராஜெக்ட் எனப்படும் பிசிசி கட்டிடங்களின் கூரைகளில் புதிய திட்டத்தை செயல்படுத்துதல்**

இதன் கீழ்இ நிறுவனத்தில் உள்ள பெரிய இடத்தைப் பயன்படுத்தி சோலார் பேனல் அமைப்பை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளதுஇ அதன் மூலம் நிலையான வளர்ச்சி நோக்கங்களை அடைவதற்கும் நிறுவனத்திற்கு புதிய வருவாய் வழிகளை அடைவதற்கும் பங்களிக்கும் அதே வேளையில் தேசிய கட்டத்திற்கு மின்சாரம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

5. **பங்களாவை புதுப்பித்தல் மற்றும் நவீனப்படுத்துதல்**

பி.சி.சி லங்கா லிமிடெட் வளாகம் பாரம்பரிய கட்டிடங்கள் நிறைந்த இடமாகும்இ மேலும் இது வரலாற்று மதிப்புகளைக் கொண்ட இயந்திர சாதனங்களைக் கொண்டுள்ளது. பி.சி.சி லங்கா லிமிடெட் கொழும்பு கோட்டை பகுதியில் இலங்கையில் ஆங்கிலேய மகுட காலனித்துவ காலத்தில் பழமையான கட்டிடங்களைக் கொண்டுள்ளது.

பிசிசியின் நிறுவனர்கள் மற்றும் பிசிசியின் முன்னாள் தலைவர்களால் பயன்படுத்தப்பட்ட பிசிசி மில் பங்களாஇ மேலே குறிப்பிடப்பட்ட கட்டிடங்களில் ஒன்றாகும்.

எங்கள் நிறுவனத்தின் ஐந்தாண்டு வளர்ச்சித் திட்டத்தின்படிஇ நிறுவனத்திற்கு கூடுதல் வருமானம் ஈட்டும் நோக்கத்துடன்இ கைவிடப்பட்ட - மில் பங்களாவை புதுப்பித்துஇ அதை மோட்டல்/ஹாலிடே பங்களாவாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில்இ நூற்றாண்டு பழமையான பி.சி.சி கட்டிடங்களின் வரலாற்று மதிப்பை தக்க வைத்துக் கொண்டு புதுப்பிக்க தொல்லியல் துறையிடம் இருந்து ஒப்புதல்களும் பரிந்துரைகளும் பெறப்பட்டுள்ளன.

பீசீசீ ஆலை பங்களா

6. **எஃகு டிரம் தொழிற்சாலையை மீட்டெடுக்கவும்**

எங்கள் நிறுவனம் துவங்கியதில் இருந்து இருந்த ஸ்டீல் டிரம் பீப்பாய் தயாரிப்பு ஆலை தற்போது செயலிழந்து



விட்டதால்இ இந்த இரும்பு பீப்பாய் தயாரிக்கும் ஆலை 2009ம் ஆண்டு முதல் மூடப்பட்டுள்ளது.

தற்போதுஇ இலங்கையில் எஃகு டிரம் உற்பத்தியாளர்கள் இல்லைஇ ஏனெனில் நாங்கள் லூப்ரிகண்ட்இ இரசாயன மற்றும் உணவுத் தொழில்களில் பயன்படுத்த ஸ்டீல் டிரம் பீப்பாய்களை ஏற்றுமதி செய்கிறோம். இதனால்இ நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான அன்னியச் செலாவணிகள் வெளியேறுகின்றன.

அதன்படிஇ பி.சி.சி நிர்வாகமும் இயக்குநர் குழுவும் இதை ஒரு வாய்ப்பாகக் கண்டறிந்து நவீன தொழில்நுட்பத்துடன் டிரம் உற்பத்தி ஆலையை மீட்டெடுக்க முன்மொழிந்துள்ளனர்.

7. **மல்டிஃபங்க்ஷன் வர்த்தக கட்டிடத் திட்டத்தின் கட்டுமானம்**

நாட்டின் தலைநகரில் வணிக இடங்களைத் தேடும் சட்டப் பயிற்சியாளர்கள் மற்றும் வளர்ந்து வரும் வணிகர்களுக்கு சிறந்த மற்றும் புதுமையான அனுபவத்தை வழங்குவதற்காகஇ பி.சி.சி லங்கா லிமிடெட் வளாகத்தில் 1.7 ஏக்கர் நிலப்பரப்பில் பல்வகை வணிகக் கட்டிடத் திட்டத்தைச் செயல்படுத்த முன்மொழியப்பட்டது.

மேலும் இந்த திட்டத்தின் மூலம் நமது தலைநகரை உலகின் மிக அற்புதமான நகரங்களில் ஒன்றாக மாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாகஇ முன்மொழியப்பட்ட கட்டிட வளாகம் 20 க்கும் மேற்பட்ட தளங்களைக் கொண்டிருக்கும் மற்றும் பல வசதிகளுடன் செழுமைப்படுத்தப்படும்

அதன்படிஇ இத்திட்டம் பொது மற்றும் தனியார் கூட்டுறவின் கீழ் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படிஇ பி.சி.சி லங்கா லிமிடெட் நிலத்தின் மூலம் பங்களிக்கும் மற்றும் கட்டிடத்தின் கட்டுமான செலவு தனியார் பங்காளியின் பங்களிப்பால் எளிதாக்கப்படும்இ மேலும் பின்வரும் முறைகள் மூலம் சிறந்த தனியார் கூட்டாளரைக் கண்டறிய நாங்கள் எதிர்பார்க்கிறோம்இ

- சர்வதேச டெண்டர்கள் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச டெவலப்பர்களுக்கான ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு
- முதலீட்டாளர் மன்றங்கள்
- வெளிநாட்டு தூதரகங்கள்

முதலீட்டு வாரியம் (டீழுஐ)

இந்த திட்டத்தின் ஆரம்ப கட்டமாகஇ 20 மாடி கட்டிடத் திட்டத்தை நிர்மாணிக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (ருனுயு) ஒப்புதலைப் பெற முடிந்ததுஇ ஏனெனில் எங்களின் பல்செயல்பாட்டு வணிகக் கட்டிடத் திட்டம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (ருனுயு) நகர அபிவிருத்தித் திட்டத்திற்கு இணங்குகிறது. மேலும்இ திட்டத்திற்கு 1.7 ஏக்கர் நிலம் ஒதுக்குவதற்காக பி.சி.சி நிலத்தின் அளவீடு செய்யப்பட்டுள்ளது.

# 21

# இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் (SLCC)

## 21.1 அறிமுகம்

1950 ஆம் ஆண்டின் கைத்தொழில் தினைக்களத்தின் சட்டத்தின் கீழ் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை 1955 ம் ஆண்டு 19 ம் இலக்க சட்டத்தின் கீழ் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை 1956 இல் முழு அரச உடமை பொதுக் கூட:டுத்தாபனமாக மாற்றப்பட்டது.

1957 ம் ஆண்டின் கைத்தொழில் கூட்டுத்தாபனத்தின் 49 ம் இலக்க சட்டத்தின் கீழ் 1959 ஜனவறி 1 ம் திகதி இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனமாக மீளமைக்கப்பட்டது.

1980 ம் ஆண்டில் ஒரு வர்த்தமாணி பிரகடனத்தினால் “ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனமாக பெயர் மாற்றப்பட்டது. இந்த கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகள் கைத்தொழில் மற்றும் விஞ்ஞானத்துறை அமைச்சின் கீழ இருந்து 1985 பெப்பிரவறி 1ம் திகதியில் இருந்து வீடமைப்பு நிர்மாணம் மற்றும் உள்ளூர்அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதன்பிற்பாடு 1997 ம் ஆண்டு யூன் 19 மீளவும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டு 2010 வரை அதே அமைச்சின் கீழ் செயற்பட்டதுடன் 2015 பெப்பிரவரி வரை அரச வளங்கள் மற்றும் அபிவிருத்தி முயற்சிகள் அமைச்சின் கீழ் செயற்பட்டது. அதன்பிற்பாடு ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபன செயற்பாடுகள் கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ளது.

கூட்டுத்தாபத்துக்கு உரித்தாக் காங்கேசன் சீமெந் வேக்ஸ், புத்தளம் சீமெந் வேக்ஸ் மற்றும் றுகுணு சீமெந் வேகஸ் என மூன்று தொழிற்சாலைகள் உள்ளன. 1993 இல் புத்தளம் சீமேந்து வேலைகள் மற்றும் றுகுணு சீமேந்து வேலைகள் மக்கள் மயமாக்கப்பட்டது.

கூட்டுத்தாபனத்துக்கு மிகுதியாக காங்கேசன் சீமேந் வேக்ஸ் மட்டும் உள்ளதுடன் அதுவும் 1990 யூனில இருந்து பாதுகாப்பு காரணங்களினாலும் வடமாகாணத்தில் உள்ள தொழிற்சாலை இயந்திரம் ,சாதனம் மற்றும் கருவிகள் பழுதடைந்தமையால் இயங்கவில்லை.

### நோக்கம்

ஸ்ரீலங்காவிற்குள் சீமேந்து கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான வழிகாட்டுதல்களையும் தலைமையையும் வழங்குதல்.

### குறிக்கோள்

நாட்டிற்குத் தேவையான தரமான சீமேந்தை வழங்குதல் மற்றும் சீமேந்து அடிப்படையான உற்பத்தி தேவைகளை நிறைவேற்ற உறுதிப்படுத்தல்.

### பிரதான செயற்பாடுகள்

இந்த கூட்டுத்தாபனம் சாதாரண போர்ட்லேண்ட் சீமெந்தை இறக்குமதி செய்து விநியோகம் செய்கிறது.

ஏப்ரல், 2017க்குப் பிறகு, நாங்கள் சீமெந்தை இறக்குமதி செய்யவில்லை. நிலங்கள் மற்றும் பிற சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட வாடகை மூலம் நிறுவனத்திற்கு ஸ்திரத்தன்மை நிலையை அடைய முயற்சிக்கிறோம்.

### 21.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் வரை)

| வருடம் | 30.09.2022 வரை<br>ரூபா.மில் |
|---|---|
| முகாமைத்துவ சொத்துக்களில் இருந்து வருமாணம் (குத்தகைமற்றும் வாடகை) | 51.44 |
| மொத்த இலாபம் ∴ நட்டம் | 51.44 |
| ஏனைய வருமாணம் | 14.23 |
| **செலவீனங்கள்** | 21.65 |
| வரிக்கு முன்னரான தேறியலாபம் ∴ நட்டம் | 44.03 |
| வருமானவரிச் செலவீனம் | 12.30 |
| வரிக்குப் பின்னரான தேறியலாம் ∴ நட்டம் | 31.73 |

***மூலம்: இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்***

எங்களுடைய காணிகள் மற்றும் ஏனைய சொத்துக்களில் இருந்து சம்பாதித்த ஏனைய வருமாணத்துடன் இவ் வருடத்தில் உழைத்த மொத்த வருமாணம் ரூபா.65.68 மில்லியன். இவ் வருடம் ஏனைய வருமான வரிக்கு முன்னரான கணக்கியல் இலாபம் 44.03 மில்லியன் மற்றும் எங்களால் வரவுசெலவுக்கு மிகையாக வருமாணவரிக்கு முன்னர் 12.10 மில்லியன் வெளியிடப்பட்டது.

### தொழிற்பாட்டு நடவடிக்கைகள்

ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறை சீமெந்து யந்திரம் தொடர்பாக 19-01-2021 இல் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அமைச்சரவையின் அங்கிகாரம் 02.08.2021 திகதியில் 21∴0175∴320∴004 இலக்கத்தில் பெறப்பட்டது. அந்த கட்டளையில் பாவனையற்ற கட்டிடம் மற்றும் துண்டு இரும்புகளை தொழிற்சாலை வளாகம் மற்றும் தொழிற்சாலை வளாகத்தை துப்பரவு செய்யும்படி. கூறப்பட்டது

19-04-2021 திகதியில் கைத்தொழில் அமைச்சின் செயலாளரால் ஒரு குழுஅமைக்கப்பட்டது குறிப்பிட்ட கோவிட பரவல் காலத்திலும் அது முழுமையான பொறுப்புடன் செயல்பட்டு அதன் அறிக்கையினை கைத்தொழில் அமைச்சிற்கு 14.02.2022 அன்று எதிர்கால நடவடிக்கைகளுக்காக சமர்ப்பித்தது

இதன்படி, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் பயன்படுத்தப்படாத கட்டிடங்கள் மற்றும் இரும்புகளை சுத்தம் செய்து அகற்றுவதற்கு மூன்று அமைச்சின் செயலாளர்கள் அடங்கிய டெண்டர் குழுவொன்றை அரச நிதி திணைக்களம் நியமித்துள்ளதுடன், ஒரு டெண்டர் குழுவிற்கு உதவ 7 பேர் கொண்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

### 21.3 எதிர்காலத் திட்டங்கள் - 2023

1990 ஆம் ஆண்டு முதல் இயங்காமல் இருந்த காங்கேசன்துறை சீமெந்து ஆலையானது, அரச தனியார் கூட்டு முயற்சியாக முழுமையாக செயற்படும் சீமெந்து ஆலையாக மீண்டும் திறக்கப்படவுள்ளது. 80மூ கட்டிடங்களை புதுப்பித்து பயன்படுத்த முடியும் என்றும், நல்ல நிலையில் உள்ளதாகவும், மீதமுள்ளவற்றை இடிக்க முடியும் என்றும் நிபுணர்களின் ஆய்வு தெரிவிக்கிறது. இந்த இடம் அதன் வளாகத்தில் எளிதில் கிடைக்கக்கூடிய சுண்ணாம்பு வளத்தால் மிகவும் மதிப்பு வாய்ந்தது.

உயர்தர சிமெண்டை உற்பத்தி செய்வதன் மூலம் உள்ளூர் சந்தையில் சிமெண்ட் விலையை குறைப்பதே இந்த திட்டத்தின் இறுதி இலக்கு.

தற்போது தற்காலிக வாகன தரிப்பிடமாக செயல்படும் கொள்ளுப்பிட்டி சந்தியில் உள்ள 89.7 பேர்ச் காணியில் வாகன நிறுத்துமிடங்கள், உணவகங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள் முதல் வணிக வளாகங்கள் வரையிலான பல்வேறு வளாகங்களை உள்ளடக்கிய 25 மாடி கட்டிடத் தொகுதியை அமைக்க இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது. இதுவும் பொது-தனியார் கூட்டு முயற்சியாக நிர்மாணிக்கப்பட உள்ளது. அரசாங்க வருவாயை அதிகரிக்கும் அதே வேளையில் இந்தத் திட்டத்தின் மூலம் அரசாங்கத்திற்கு வருமானத்தை வழங்குவதை ளுடுஊஊ நோக்கமாகக் கொண்டுள்ளது.

ளுடுஊஊ ஆனது அருவாக்கலு சுண்ணாம்புக் கல் குவாரியில் எஞ்சியிருக்கும் இல்மனைட்டை தனியார்-பொதுக் கூட்டாண்மை மூலம் பயன்படுத்துவதையும், தற்போது பயன்படுத்தப்படாமல் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள மதிப்புமிக்க மூலப்பொருளின் மூலம் கூடுதல் மதிப்பைச் சேர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# 22

# லங்கா அசோக் லேலன்ட் பிஎல்சி (LAL)

## 22.1 முன்னுரை

லங்கா அசோக் லேலன்ட் பிஎல்சி நிறுவனம் லங்கா லேலன்ட் லிமிடட் (இலங்கை அரசாங்கத்திற்கு முழுமையாகச் சொந்தமானது) மற்றும் இந்தியாவின் அசோக் லேலன்ட் லிமிடட் இரண்டுக்கும் இடையிலான தொழில்முயற்சிக்காக ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமாகும். இந்தக் கம்பனி 1982ஆம் ஆண்டு 41.77% வீத பங்குகளை லங்கா லேலன்ட் நிறுவனமும் 27.85% வீத பங்குகளை அசோக் லேலன்ட் நிறுவனமும் மிகுதிப் பங்கினை பொது மக்களிடமும் பெற்று ஒருங்கிணைக்கப்பட்டது. இந்தக் கம்பனி அசோக் லேலன்ட் பஸ் மற்றும் ட்ரக்களை இலங்கையில் உள்ளூர் தொழிற்படையைப் பயன்படுத்தி மற்றும் உள்ளூர் பெறுமதி சேர்ப்பினை மேற்கொண்டு பொருத்துவதன் ஊடாக தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் இலங்கையில் ஓர் துணைக் கம்பனியை உருவாக்கும் முகமாகவும் நிறுவப்பட்டது. இந்தக் கம்பனி 1983ஆம் ஆண்டு கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டது.

**லங்கா அசோக் லேலன்ட் பிஎல்சி நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள்**

- லங்கா அசோக் லேலன்ட் வணிக வாகனங்கள், உதிரிப் பாகங்கள், வலு உற்பத்தியாக்கிகளை இறக்குமதி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல்.

- அசோக் லேலன்ட் வணிக வாகனங்களை ஒருங்கிணைத்தல்
- பவுசர்கள், கெண்டெயினர்கள் மற்றும் ஏனைய உருக்குகளுக்கான கட்டுருவாக்கம் மற்றும் அலுமீனியம் வெளிப்புறக் கவசம் அடித்தல்
- யானை சுமக்கும் வண்டிகள், சுற்றுலாப் பயணிகளுக்கான திறந்த இரட்டை அடுக்கு பஸ் வண்டிகள், கரவண் கோச், ரெயில் பஸ் போன்ற போக்குவரத்து செய்யும் வண்டிகளுக்கான விசேட போக்குவரத்து தீர்வுகளை வழங்குதல்.
- பழைய மற்றும் விபத்துக்குள்ளான வாகனங்களின் புனருத்தாபனம் செய்தல்.
- நாளாந்த திருத்தங்களையும் சேவைகளையும் வழங்குதல்.

- வாடகையடிப்படையில் வாகனங்களை வழங்குதல்.

கம்பனி அதனுடைய நவீன சந்தைப்படுத்தல் அலுவலகத்தை கொழும்பிலும், அதனுடைய பிரதான தொழிற்பட்டறையை பனாகொடவிலும், 3S வசதிகளை (விற்பனைகள், சேவைகள் மற்றும் உதிரிப்பாகங்கள்) அம்பாறை, அனுராதபுரம், தம்புள்ள, எம்பிலிப்பிட்டிய, யாழ்ப்பாணம், கண்டி – பல்லேகல, சேதவத்தை, வவுனியாவிலும் நாடளாவிய ரீதியில் உதிரிப்பாக விற்பனைக்கூடங்களையும் கொண்டுள்ளது. வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு கம்பனி நாடளாவிய ரீதியில் 20 அங்கீகாரம் பெற்ற சேவை நிலையங்களையும் கொண்டுள்ளது.

### 22.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் வரை)

**Rs. Mn.**

| Description | 2021/22 | 2020/21 |
|---|---|---|
| Revenue | 6,860.96 | 2273.11 |
| Gross Profit & Other Income | 1,181.74 | 676.92 |
| Overhead & Finance cost | (733.09) | (657.83) |
| Profit before tax | 448.65 | 19.09 |
| Income tax | (105.67) | (14.57) |
| Profit after tax | 342.98 | 4.52 |

***மூலம் : அசோக் லேலண்ட் கம்பனி***

- கோவிட் நோய்ப்பரவலின் பின்னர் மீண்டும் பொருளாதார செயற்பாடுகள் ஆரம்பித்தவுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிறுவனத்தின் வருமானம் 200மூ வீதத்தினால் அதிகரித்துள்ளது. எனினும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததனால், நிறுவனம் இவ்வருடத்தினுள் ரூபா 738.94 மில்லியன் அந்நியச் செலவாணியினை நட்டமாகப் பெற்றது.
- கடுமையான செயலாற்றுகை மூலதன முகாமைத்துவம் மற்றும் பொது செயற்பாட்டு ஆகுசெலவு முகாமைத்துவம் என்பவற்றின் விளைவாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வட்டி மற்றும் ஏனைய நிதிச் செலவுகளின் அதிகரிப்பினை 12மூ வீதத்தினால் கட்டுப்படுத்துவதற்கு நிறுவனத்தினால் இயலுமானதுடன் வருமானமும் 200மூ வீதத்தினால் அதிகரித்தது.
- வருடத்தினுள் நிறுவனத்தினால் ரூபா 342.98 மில்லியன் இலாபமாகப் பெறப்பட்டது.

## 22.3 எதிர்காலத் திட்டங்கள் - 2023

| | |
|---|---|
| **1 : பஸ்களை உள்ளூரில் ஒன்றுசேர்ப்பதற்கு விதப்புரை செய்தல்.** | |
| **உபாயமார்க்கங்கள்** | |
| 1.1 | டுயுடு உள்ள துணை தயாரிப்பு வசதியளிப்பை அபிவிருத்தி செய்தல். |
| 1.2 | இலங்கையில் ஒன்றுசேர்க்கப்பட்ட வாகனங்களை ஏற்றமதி செய்வதற்கான சந்தர்ப்பங்களை வெளிக்கொணர்தல். |
| 1.3 | தற்போதுள்ள பாரிய தொழிற்படைக்கு மேலதிக தொழில் வாய்ப்புகளையும் தொழிலைத் தொடர்வதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்குதல். |
| 1.4 | டுயுடு உள்ள துணை தயாரிப்பு வசதியளிப்பை அபிவிருத்தி செய்தல். |
| **2 : கட்டம் கட்டமாக உள்ளூர் பெறுமதி சேர்த்தலைப் படிப்படியாக அதிகரித்தல்.** | |
| **உபாயமார்க்கங்கள்** | |
| 2.1 | உள்ளூர் பெறுமதி சேர்த்தல்களையும் உள்ளூர் தொழிற்படையையும் பயன்படுத்துவதன் ஊடாக பெறுமதியான வெளிநாட்டு அந்நியச் செலாவணியை சேமித்தல். |
| 2.2 | உள்ளூர் துறை கைத்தொழிற்துறைக்கு உதவல் மற்றும் மேலும் அபிவிருத்தி |
| | செய்வதன் ஊடாக மேலதிக தொழில் வாய்ப்புகளை உருவாக்கல். |
| **3 : ட்ரக் பொடி கட்டுதல் இயலளவைஅதிகரித்தல் மற்றும் பண்ட வீச்செல்லையை மேலும் விரிவாக்கல்** | |
| **உபாயமார்க்கங்கள்** | |
| 3.1 | ட்ரக் பொடி தயாரிப்பு இயலளவை மாதத்திற்கு 100 இல் இருந்து 125 ஆக அதிகரித்தலின் ஊடாக மேலும் வருமானத்தைக் கூட்டுதல். |
| 3.2 | பண்ட பட்டியலில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பவுசர், இன்சூலேடட் அன்டி குளிர்பதப்படுத்தப்பட்ட கென்டெயிர்ஸ், கலி பவுசர்கள், ட்ரெயிலர்ஸ் போன்ற விசேட பண்டங்களைச் சேர்த்துக்கொள்ளல். |
| 3.3 | உள்ளூர் தொழிற்படுத்தல் நிலமைக்குப் பொருந்தும் வகையில் ட்ரக் பொடிகளை வடிவமைப்பதற்கு உள்ளூர் தொழில்நுட்ப அபிவிருத்தி. |
| **4 : இலங்கையில் நாடளாவிய ரீதியல் உள்ள வலையமைப்பை மேலும் அதிகரித்தல்.** | |
| **உபாயமார்க்கங்கள்** | |
| 4.1 | குறிப்பாக கிழக்கு, ஊவா, தென் மற்றும் வட மத்திய மாகாணங்களில் வலையமைப்பை மேலும் விரிவாக்கல். |
| 4.2 | எதிர்காலத்தில் திறக்கவிருக்கும் எங்களின் கிளைகளுக்கு உள்ளூரில் கல்வி கற்ற இளைஞர்களுக்குத் தொழில்வாய்ப்பை வழங்கல். |

# 23

# லங்கா லேலன்ட் லிமிடட் (LLL)

## 23.1. முன்னுரை

லங்கா லேலன்ட் (தனியார்) லிமிடட் என்பது 1938ஆம் அண்டு 51ஆம் இலக்க கம்பனி கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட 2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட முழுமையாக அரசுக்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய நிறுவனமாகும்.

லங்கா லேலன்ட் (பிறைவட்) லிமிடட் நிறுவனம் 47மூ வீதமான பங்குகளையும் அசோக் லேலன்ட் இந்தியா 41.77% வீத பங்குகளையும் கொண்டிருந்ததுடன் மீதி 27.85% வீதமான பங்குகள் இணைந்த வியாபார உடன்படிக்கை அடிப்படையில் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

லங்கா லேலன்ட் (தனியார்) லிமிடட் நிறுவனத்தின் பிரதான நோக்கம் அவசிய உதிரிப்பாகங்களை தயாரிப்பதும் தொழில்நுட்ப அறிவினை நாட்டுக்கு சாட்டுதல் செய்யும் போது லங்கா அசோக் லேலன்ட்

**லங்கா லேலன்ட் (தனியார்) லிமிடட் நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள்**

• லங்கா அசோக் லேலன்ட் நிறுவனம் வாகனங்களை ஒருங்கு கூட்டுவதற்கு அவசியமான உள்ளூர் உதிரிப்பாகங்க நிர்மானிப்பினை மேற்பார்வை செய்தல் மற்றும் ஊக்குவித்தல்.

• திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புகளில் முதலீடுகளை மேற்கொள்ளல்.

லங்கா அசோக் லேலன்ட் நிறுவனம் வாகனங்களை ஒருங்கு கூட்டுவதற்கு





# 24

# புடவைக் கைத்தொழில் திணைக்களம் (DTI)

## 24.1 முன்னுரை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு மேற்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் கைத்தறி நெசவுத்தொழில் தொடர்பான விடயம் மாகாணசபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு விடயமாகும். அதன் பிரகாரம் குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளுதல், மத்தியமயப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மாகாண சபை நெசவுக் கைத்தொழில் துறைகளுடனான இணைப்பாக்கத்தின் ஊடாக கைத்தொழிலின் முன்னேற்றத்தின்பால் சேவைகளை வழங்குதல் என்பன புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### தொலை நோக்கு

“உள்நாட்டுத் தனித்துவம் மற்றும் கலாசாரத்திற்கு ஏற்றவகையிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைச் செயற்பாடுகளை வெற்றிகொள்ளக்கூடிய வகையிலும் கைத்தறி நெசவுத்தொழில் துறையில் ஆக்கபூர்வமானதும் போட்டித்தன்மைமிக்கதுமான துணி உற்பத்தியில் உற்பத்தியாளர்களை ஈடுபடுத்துதல்.”

### இலட்சியப் பணி

“அரச கொள்கைச் சட்டகத்தினுள் கைத்தறி நெசவுத்தொழிலின் அபிவிருத்திக்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல், குறிப்பிட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல், தேவைப்படும் சேவைகளையும் வசதிகளையும் வழங்குதல் மற்றும் நெறிப்படுத்துதல் மற்றும் இணைப்பாக்கத்தினூடாக கைத்தறி நெசவத்தொழில் துறையில் அளவுசார் மற்றும் தரம்சார் வளர்ச்சியை ஏற்படுத்துதல்.”

மேற்படி நோக்கங்களை அடைந்து கொள்வதன் பொருட்டு பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குபுடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**குறிக்கோள்கள்**

1. கைத்தறி நெசவுத்தொழிலின் அபிவிருத்திக்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல்.
2. உற்பத்தி மற்றும் அபிவிருத்தி என்பவற்றை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டங்களை உருவாக்குதல்.
   - தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
   - வடிவமைப்பு உருவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள்
   - பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.
   - நெசவுத்தொழில் விடயம் சார்ந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
   - நெசவுப் பாடசாலை மாணவ மாணவிகளின் ஆளுமை விருத்திக்கான தலைமைத்துவ பயிற்சிச் செயலமர்வுகளின் ஊடாக எதிர்காலத்தில் வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்.
3. கைத்தறி நெசவுத்தொழில் துறையின் அபிவிருத்திக்குத் தேவையான ஆலோசகர்களையும் பணியாளர்களையும் பயிற்றுவித்தல்
4. துறைக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவித்தல்
5. சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தல்)
6. கைத்தறி நெசவுத்தொழிலை விரிவுபடுத்துவதனை நோக்கமாகக்கொண்ட பொருத்தமான கருத்திட்டங்கள், சுயதொழில் வாய்ப்புகள் மற்றும் உதவிச் சேவைகள் வழங்கப்படுதல், நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுதல்.
7. கைத்தறி நெசவுத்தொழிலின் வடிவமைப்பு அபிவிருத்தி மற்றும் தரம்சார் மேம்பாடு என்பவற்றை இலக்காகக் கொண்ட கண்காட்சிகளும் போட்டிகளும் நடத்தப்படுதல்.
8. தேசிய கைத்தறி நெசவுக் கைத்தொழில் கண்காட்சி நடத்தப்படுதல்
9. கைத்தறி நெசவுத்தொழிலின் வளர்ச்சிக்குத் தேவையான ஆராய்ச்சிகள், பரீட்சித்தல்கள் மற்றும் பேணல் நடவடிக்கைகள்.
10. புதிய தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்படுதல் மற்றும் உரிய அபிவிருத்தி நடவடிக்கைகள்.

மேற்படி செயற்பாடுகளை நோக்கமாகக் கொண்ட புடவைக் கைத்தொழில் திணைக்களமானது அதற்கான நோக்கு மற்றும் தேசிய இலட்சியப் பணியைக் கொண்டுள்ளது.மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பின்வரும் நிறுவனங்கள் இத்திணைக்களத்தின் கீழ் தற்போது இயங்கி வருகின்றன.

- ஆராய்ச்சி, பயிற்சி, வடிவமைப்பு மற்றும் சேவை நிறுவனம் கட்டுபெத்த -01
- நெசவுக் கைத்தொழில் நூதனசாலை மற்றும் வடிவமைப்பு வங்கி, கட்டுபெத்த - 01
- நெசவுக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலைகள் - 14
- வடிவமைப்பு பயிற்சிப் பாடசாலைகள் - 02
- கைத்தறி நெசவுக் கைத்தொழில் கருத்திட்ட நிறுவனங்கள் - 03

நிர்வாக நடவடிக்கைகள் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் தலைமையகத்தின் மூலம் மேற்கொள்ளபடுவதோடு அது பின்வரும் சில பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. தாபனப் பிரிவு, கணக்குப் பிரிவு, பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு என்பன அவையாகும்.

## 24.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் வரை)

| நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்கீடு (ரூ.மி) | இலக்குகள் | | முன்னேற்றம் | | செயலாற்றுகை சுட்டிகள் | உள்ளீடுகள் | வெளியீடுகள் | இடைவெளி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பௌதீக | நிதி | பௌதீக | நிதி | | | | |
| நெசவுப் பாடசாலை நிருவாகம் | 5.50 | 60% | 100% | 50% | 100% | நெசவுப் பாடசாலைகள் 16 மாணவ மாணவிகள் 200 | பயிற்சிபெறும் மாணவர்கள் 200 | புதியவர்களை இணைத்துக்கொள்ளல் | 50% |
| பணியிடைப் பயிற்சி | 3.00 | 60% | 60% | 60% | 65% | 11 பாடநெறிகளை நடாத்துதல் | பாடநெறிகளை வெற்றிகரமாக நடாத்துதல் | வடிவமைப்பு ஆக்கங்களை அறிமுகப்படுத்தல் | 60% |
| விற்பனைச் சந்தை | 23.50 | 50% | 20% | 25% | 1% | தொழில்முயற்சியாளர்களை இனங்காணுதல் | 80 விற்பனைக் கூடங்களை வழங்குதல் | புதிய ஆக்கங்களின் மூலம் கைத்தறி புடவைக் கைத்தொழிலை மேம்படுத்துதல் | 25% |
| கைத்தறி புடவைக் கைத்தொழில் அபிவிருத்திச் செயற்பாடுகள் | 31.50 | 60% | 30% | 60% | 21% | 10 கைத்தறி கருத்திட்டங்களை ஆரம்பித்தல் இதன்கீழ் கைத்தொழிலாளர்கள் 150 பேரை பயிற்றுவித்தல் | கிராமிய மட்ட கைத்தொழில்களை முன்னேற்றுதல் | கைத்தறி புடவைக் கைத்தொழிலை வலுவூட்டுதல் | 60% |
| பரீட்சைகள் | 0.50 | 100% | 100% | 100% | 100% | இரண்டு பரீட்சைகளை நடாத்துதல் | கைத்தறி புடவை இறுதிப்பரீட்சை மற்றும் உயர் வடிவமைப்பு பரீட்சை நடத்தப்படுதல் | திறன்களை அபிவிருத்தி செய்தல் | 100% |
| புத்தாக்க | 1.00 | 50% | 25% | 20% | 0 | 03 கைத்தறி பாகங்களைத் நவீனமயப்படுத்துதல் | நவீனமயப்படுத்தப்பட்ட கைத்தறிகள் | மென்மையான முறையில் கைத்தொழிலைப் பேணிச் செல்லல் | 20% |
| கட்டிட திருத்தப் பணிகள் | 5.00 | 60% | 25% | 20% | 0 | 03 கட்டிடங்களைத் திருத்துதல் | வசதிகளை மேம்படுத்துதல் | பாடநெறிகளை அபிவிருத்தி செய்தல் | 20% |

*மூலம் புடவைத் திணைக்களம்*

## 24.3 எதிர்காலத்திட்டங்கள் - 2023

புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான பிரதேச பாடசாலைக் கட்டிடங்களின் திருத்தப் பணிகள் மற்றும் முன்னேற்றங்கள மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ளன.

### கைத்தறி துறைக்கான பயிற்சி மற்றும் ஆற்றல் விருத்தி

1. நெசவுக் கைத்தொழில் பற்றிய 14 பாடசாலைகளுக்கும் வடிவமைப்பு உருவாக்கம் பற்றிய பயிற்சி பாடசாலைகள் 02 க்கும் முறையே 200 மாணவர்களும் 30 மாணவர்களும் வீதம் இணைத்துக் கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

2. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்பை மேம்படுத்தவும்இ கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் திறன்களை மதிப்பிடவும் தேசிய கண்காட்சி மற்றும் விருது விழா நடாத்துதல்.

### சேவை நிலையப் பயிற்சி

மாகாண அரச, கூட்டுறவு மற்றும் தனியார் துறையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் திணைக்களத்தைச் சேர்ந்த பதவியணியர் திணைக்கள பாடசாலைகளின் உத்தியோகத்தர்கள் நெசவுப் பாடசாலைகள் மற்றும் வடிவமைப்பு நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களின மற்றும் தயாரிப்பாளர்களுக்குத் தேவையான குறுகியகால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவற்றை நடத்துதல்.

### நெசவுக்கைத்தொழில் அபிவிருத்திச் செயற்பாடுகள்

1. கைத்தறி நெசவுக் கைத்தொழில் கருத்திட்டங்கள் 10 ஐ ஆரம்பித்தல்.
2. கைத்தறி புதிய உற்பத்திகள் நிகழ்ச்சித்திட்டம்.

### நெசவுத்தொழில் மேம்பாட்டு செயற்பாடுகள்

1. நெசவுத்தொழில் கண்காட்சி, விற்பனைச் சந்தை மற்றும் விருது வழங்கள் விழா 2023 ஆம் ஆண்டின் நிமித்தம் நடத்தப்படுதல்.
2. கைத்தறிப் புடவை விற்பனைச் சந்தையொன்றை நடத்துதல்.

# 25

# இலங்கை புடவை, ஆடை நிறுவகம்

## (SLITA)

### 25.1 முன்னுரை

2009 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகம் (ளுடுஜவுயு) 2009 யூன் 15 ஆம் திகதியிலிருந்து தொழிற்பட ஆரம்பித்திருந்தது.இலங்கை புடவை, ஆடை நிறுவகத்தின் பரிசோதனை ஆய்வு கூடமானது, பரிசோதனைக்காக ஐளுழு 17025 சான்றுப்படுத்தல் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. ஆடைப் பயிற்சி மற்றும் சேவைகள் நிலையம் (வுருளுஊ) மற்றும் ஆடைக் கைத்தொழில் பயிற்சி நிறுவகம் (ஊஐவுஐ) என்பவற்றை ஒன்றிணைப்பதன் மூலம் இலங்கை புடவை, ஆடை நிறுவகத்தைத் தாபிப்பதற்கு எடுக்கப்பட்ட மூலோபாயத் தீர்மானம், வினைத்திறன் மிக்க மற்றும் உற்பத்தித்திறன்மிக்க சேவைக்காக மனித வளங்கள், உபகரணங்கள் மற்றும் இடவசதி என்பவற்றை உச்சளவில் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துகின்றது

### தொலைநோக்கு

புடவை, ஆடை மற்றும் தோல் பொருட்களின் தொழிற்றுறைகளுக்கான பரிசோதனையிலும், ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் மற்றும் புத்துருவாக்கத்தில் தனிநபர் தேர்ச்சியை விருத்தி செய்வதற்கும் மற்றும் ஆலோசனை வழங்குவதற்கும் உலகளாவியரீதியில் இனங்காணப்பட்ட நிலையமாக விளங்குதல்.

### செயற்பணி

புடவை,தோல் பொருட்கள் மற்றும் ஆடை, அத்துடன் நிலையான அபிவிருத்தியை நாடுகின்ற இணைந்த தொழிற்றுறைகளின் உற்பத்தித்திறனுள்ள பொருட் களின், சேவைகளின் தரத்தை மற்றும் கூட்டிணைந்த மதிப்பினை அதிகரிப்பதற்கு தேர்ச்சியுள்ள, சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட மனித மூலதனத்தை, நம்பத்தகு

நிபுணத்துவத்தை மற்றும் புத்துருவாக்கமான தீர்வுகளை வழங்குதல்.

குறிக்கோள்கள்

இச்சட்டத்தின் பிரகாரம், பின்வரும் குறிக்கோள்களை அடைவதில் கவனம் செலுத்தி, இலங்கையின் புடவை மற்றும் ஆடைத்துறைக்கு சேவையாற்றுவதற்கு இலங்கை புடவை, ஆடை நிறுவகம் பொறுப் பாகவுள்ளது.

- புடவை மற்றும் ஆடைத் தொழிற் றுறையின் நிலையான அபிவிருத்திக்கான நிபுணத்துவத்தை வழங்குதல்.
- வளர்ந்து வருகின்ற தொழில்நுட்ப அபிவிருத்தி களுக்கு முகங்கொடுப்பதற்காக புடவை மற்றும் ஆடைத் துறையின் அறிவுத் தளத்தை மேம்படுத்துதல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புடவை மற்றும் ஆடை உற்பத்தியாளர்களுக்கு ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதில் முன்னணி பங்காற்றுதல்.
- உள்நாட்டு கைத்தறித் தொழிற்றுறைக்கு தொழில்நுட்ப நிபுணத்துவ அறிவை வழங்குதல்.
- புடவை, ஆடை, கைத்தறி மற்றும் காலணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கிராமியத் துறையில் உள்ள சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதில் பன்முக சேவை அணுகுமுறையை அறிமுகப்படுத்துதல்.
- முன்னணி பயிற்சி வழங்குனராகத் தொடர்வதற்கு, இலங்கை புடவை, ஆடை நிறுவகமானது, தேசிய தொழில்சார் தகைமை (ஏஏஞ) நியமங்களை அடைவதற்கு ஏதுவாக டிப்புளோமா ∴ பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதன் மூலம் அதன் சேவைகளை மூன்றாம் நிலை மட்டத்திற்கு உயர்த்துவதாகும்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

மேலேயுள்ள குறிக்கோள்களுடன், இலங்கை புடவை, ஆடை நிறுவகமானது, புடவை மற்றும் ஆடைத் தொழிற்றுறைக்கு முன்னணி சேவை வழங்குனராகத் தொடர்வதற்கும், நீண்டகால நோக்கில் பொருளாதாரரீதியில் சாத்தியமான நிறுவனமாக மாறுவதற்கும் அதன் சேவைகளை துரிதப்படுத்து வதற்கும் எதிர்பார்க்கின்றது.

## 25.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் வரை)

**நிதியியல் செயலாற்றுகை (ரூ.மில்)**

| விபரம் | 2022 (ஓகஸ்ட் இறுதி வரை)(ரூபா மில்லியன்) |
|---|---|
| பரிசோதனை | 39.61 |
| பயிற்சி | 56.89 |
| ஆலோசனை | 3.33 |

மூலம் : இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம்

**பௌதீக செயலாற்றுகை**

**மொத்த தொழிற்பாட்டு வருமானம்**

| விபரம் | 2022 (30.9.22 வரை) |
|---|---|
| பரிசோதனைகளின் எண்ணிக்கை | 23584 |
| பயிற்சிகளின் எண்ணிக்கை | 1800 |
| பயிற்சி நெறிகளின் எண்ணிக்கை | 110 |

| விபரம் | 2022 (ஓகஸ்ட் இறுதி வரை) )(ரூபா மில்லியன்) |
|---|---|
| ஏனையவை | 37.68 |
| மொத்தத் தொழிற்பாட்டு வருமானம் | 137.52 |
| மொத்தத் தொழிற்பாட்டு செலவீனம் | 125.71 |
| தொழிற்பாட்டு செலவீனங்களிலிருந்தான மொத்த மிகை.'. பற்றாக்குறை | 11.81 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 14.22 |
| காலப்பகுதிக்கான மொத்த மிகை.'. பற்றாக்குறை | 26.03 |

**கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்**

**2022 சனவரி 1 முதல் செப்ரெம்பர் 30 வரை**

| கருத்திட்டத்தின் பெயர் | கருத்திட்டத்தின் பெறுமதி (ரூபா.மில்) |
|---|---|
| புதிய தொழில்னுட்ப பரிமாற்றத்திற்கான அபிவிருத்தி மற்றும் தாபனம் அத்துடன் பயிற்சி நோக்கஙு'களுக்காக தற்போதிருக்கின்ற வகுப்பறை வசதிகளை மேம்படுத்துதல். - 2021 (தொடர்ச்சியான கருத்திட்டம்) | 48.82 |
| கிராமிய இளைஞர் வலுவூட்டல் ஊடாக இலங்கை ஆடைக் கைத்தொழிலுக்கான உற்பத்தித்திறன்மிக்க பல்திறன்மிக்க செயலணியை விருத்தி செய்தல் – 2021 (தொடர்ச்சியான கருத்திட்டம்) | 8 |
| உற்பத்தித்திறன் மேம்பாட்டுத் திட்டம் - 2021 (தொடர்ச்சியான கருத்திட்டம்) | 7 |
| 160 பற்றிக் நிலையங்களை தாபித்தல் -1 ஆவது கட்டம் - 2021 (தொடர்ச்சியான கருத்திட்டம்) | 69.01 |
| 160 பற்றிக் நிலையங்களை தாபித்தல் -2 ஆவது கட்டம் -2021 (தொடர்ச்சியான கருத்திட்டம்) | 25.9 |
| புடவை மற்றும் ஆடைத் துறையை மேம்படுத்துவதற்கு வகுப்பறை இயலுமைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல். – 2022 | 33 |
| மனித வள வசதிகளை அபிவிருத்தி செய்தல் – 2022 | 1 |
| தோல் மற்றும் பாதணித் துறையின் இயலுமை விருத்தி – 2022 | 1 |

மூலம் : இலங்கை புடவை, ஆடை நிறுவகம்

## 25.3. எதிர்காலத்திட்டங்கள் - 2023

- முழுமையாக தேர்ச்சி பெற்ற பட்டம் வழங்கும் அமைப்பு- இளங்கலை மற்றும் முதுகலை.
- பங்களாதேஷ், வியட்நாம் மற்றும் எதியோப்பியா வில் நிலையங்களை நிறுவுதல்.
- இலங்கை புடவை, ஆடை நிறுவகத்தை விரைவாகப் பதிலளிப்பதற்காக சுதந்திர வர்த்தக வலையங்களாகவும், பயிற்சி நிலையங்களாகவும் பரவலாக்குதல்.
- இந்தியா, பங்களாதேஷ், வியட்னாம் மற்றும் மேற்கத்தேய நாடுகளில் முன்னணி நிறுவனங் களுடன் நெருங்கிய தொடர்புகள்.
- சர்வதேச அங்கீகாரத்துக்காக பரிசோதனை ஆய்வுகூட தொழிற்பாடுகளை விரிவுபடுத்துதல்.
- பின்வரும் நிறுவகங்களிடமிருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களைப் பெறுதல்.
  - துஜஐஊயு - முழுஜஐஊயு
  - யுனுடீ - ஏனைய பிற நிதியிடல் மூலங்கள்.

# 26

# தேசிய வடிவமைப்பு மத்தியநிலையம்

## 26.1 முன்னுரை

1982 இன் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவையின் இணை நிறுவனச் சட்டத்தின் கீழ் 1983 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தேசிய வடிவமைப்பு நிலையமானது, உள்நாட்டு கைப்பணிக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக கைப்பணிக் கலைஞர்களை சம்பிரதாயத்திற்கு அப்பால் இட்டுச் சென்று கைப்பணிக் கைத்தொழில் துறையின் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு தாபிக்கப்பட்டு சேவைகளை ஆற்றிவருகின்ற அரச நிறுவனமொன்றாகும் என்பதுடன் தற்போது கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.

### நோக்கு

கைப்பணிக் கைத்தொழில்துறையை மென்மேலும் முனைப்புமிக்க மற்றும் பொருளாதார ரீதியில் நிலைபேறான துறையாக மாற்றியமைத்தல்.

### செயற்பணி

மேம்படுத்தல், அபிவிருத்தி, ஆற்றல்களைக் கட்டியெழுப்பல், பிரபல்யப்படுத்தல் மற்றும் பிரதான நீரோட்டத்தில் இணைப்பதன் மூலம் சந்தையை அடிப்படையாகக் கொண்ட ஆக்கபூர்வமான வடிவமைப்புக்களை அறிமுகம் செய்தல்.

**கவனம் செலுத்தப்படுகின்ற மையத்துறை**

கைப்பணிக் கைத்தொழிலை போசித்தல், பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

### முக்கிய நோக்கங்கள்

- கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்களினால் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற கைப்பணிப் பொருட்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் உள்நாட்டிலும், ஏற்றுமதிச் சந்தையிலும் தற்கால மற்றும் எதிர்கால சந்தைப் போக்குகளுக்கு அமைய புத்தாக்கங்களை அறிமுகம் செய்தல்.

- உகந்த தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல் மற்றும் உயர் தரத்தைக் கொண்ட கைப்பணி பொருட்களை உற்பத்தி செய்வதை நோக்காகக் கொண்டு முறையான தொழில்நுட்ப முறைகள் மற்றும் மூலப் பொருட்களைத் தயார் செய்துகொள்ளும் முறைகளை அறிமுகம் செய்தல்.

- வருமானத்தை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் கைப்பணிக் கைத்தொழில் துறையில் மென்மேலும் நல்ல முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு கலைஞர்களுக்கு உயர் நிபுணத்துவ, தொழில்நுட்ப மற்றும் வடிவமைப்பு அபிவிருத்திப் பயிற்சி உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்களுக்கு ∴சிறியளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு மற்றும் பொது மக்களுக்கு புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதற்கான வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் அது பற்றிய தரவு களஞ்சியத்தை தயார் செய்தல் மற்றும் பொது வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- கைப்பணிக் கைத்தொழில் வடிவமைப்பு ஆக்கங்களுக்கான பதிலீட்டு மூலப் பொருட்களை அறிமுகம் செய்தல் மற்றும் மென்மேலும் வினைத்திறன் மற்றும் புத்தாக்க உற்பத்தி முறையியல்களை அறிமுகம் செய்தல்.

- புதிதாக தயார் செய்யப்படுகின்ற கைப்பணிக் கைத்தொழில் வடிவமைப்பு உற்பத்திகளுக்கு உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்தல்.

- அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் கோரிக்கைகளுக்கு அமைய வடிவமைப்பு மதியுரை சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- தொழில்சார் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் வடிவமைப்பு ஆக்கத் திறன்களை மேம்படுத்தல் .

## 26.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் வரை)

தேசிய வடிவமைப்பு நிலையத்துக்கு ரூ.மி. 40 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், ரூபா மில்லியன் 8.10 ஆன தொகை 2022 செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை விடுவிக்கப்பட்டுள்ளது. ரூபா மில்லியன் 8.10 இல் ரூ.மி. 6.326 பெறுமதிமிக்க அபிவிருத்திச் செயற்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் இறுதிக்குள் புதியதொரு எண்ணக்கருவின் மூலம் புத்தாக்க வடிவமைப்புக்களின் கண்காட்சி மற்றும் வர்த்தகக் கண்காட்சியை நடாத்தத் தேவையான நடவடிக்கைகளை நாம் ஒழுங்கு செய்துவருவதுடன், திட்டமிட்டு வருகின்றோம்.

செயற்றிட்டத்திற்கு மேலதிகமாக, இலங்கை தெற்காசிய பங்குடைமையுட (ளுழரவா யுளையை ீயசவநெசளாip ளுசை டுயமெய (இணைந்து நாம் பிரதான பயிற்றுவிப்பாளர்களுக்கான (TOT) சம்பிரதாயபூர்வமான கைப்பணிக் கருத்திட்டமொன்றையும் மேற்கொண்டுள்ளோம் என்பதுடன், தொழில் பயிற்சி அதிகாரசபையுடன் (VTA) இணைந்து புடவைகளின் மேற்பரப்பில் வடிவமைப்புக்களை செய்வது பற்றி பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தையும் நடாத்தியுள்ளோம்.

## பௌதிக முன்னேற்றம்





நாடு முழுவதிலும் பரந்துள்ள கைப்பணி வடிவமைப்புக் கலைஞர்களின் பயிற்சித் தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்தி தேசிய தொலைக்காட்சியின் (நுகசெவண நிகழ்ச்சி) உதவியுடன் நாம் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொடரொன்றை நடாத்தியுள்ளோம்.

பாடசாலை துறையில் கைப்பணி மற்றும் கலையை அறிமுகம் செய்யும் நோக்கத்துடன், சிறுவர் தினத்தை இலக்காகக் கொண்டு நாம் பரிசளிப்பு விழாவொன்றை நடாத்தினோம்.

| செயற்பாடு | ஏற்பாடுகளை ஒதுக்குதல் (ரூ.மி.) | செலவினம் (ரூ.மி.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| புத்தாக்கங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுத்தல் | 8.65 | 1.246 | 26% |
| வடிவமைப்பு அபிவிருத்தி, அறிவை இற்றைப்படுத்தல் மற்றும் திறன் அபிவிருத்தி | 1.920 | 0.322 | 35% |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 0.55 | 0.073 | 60% |
| புதிய தொழில்நுட்பம், புதிய செயன்முறை மற்றும் பொருள்சார் புத்தாக்கங்களை அறிமுகம் செய்தல் | 2.065 | 0.055 | 65% |
| உள்நாட்டு சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வடிவமைப்புக் கண்காட்சிகளை நடாத்தல் | 1.00 | 0.257 | 50% |
| வடிவமைப்பு ஆக்கங்களுக்கான ஆலோசனை சேவை | வேறு நிதிமூலம் | | 45% |
| உள்ளக பதவியணியினருக்கான திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 0.472 | 0.146 | 55% |
| வடிவமைப்பு ஆக்கத்துறைக்கு தரமான பாடநெறிகளை நடாத்தல் | 0.55 | - | - |

## 3.0 எதிர்காலத்திட்டங்கள் - 2023

### 1. உற்பத்தி

வடிவமைப்பாளர்களினால் உபயோகிக்கப்படும வன்பொருட்கள் மற்றும் மென்பொருள் என்பனவற்றை தரம் உயர்த்தலும் அறிமுகப்படுத்தலும்.

நவீன தரமான கருவிகள் இஉபகரணங்கள் மற்றும் பொருட்களை வடுவமைப்பு அலகிற்கு வழங்குதல்.

### 2. சந்தைப்படுத்தல்

தேசிய வடிவமைப்பு நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட புதிய வடிவமைப்புடைய கைவினைப்பொருட்களை ஊக்குவிக்க புதிய வடிவமைப்பு கண்காட்சியை நடாத்துதல்.

உள்ளுர் மற்றும் சர்வசே சந்தையில் புதிய வடிவமைப்புடைய கைவினைப்பொருட்களை அறிமுகப்படுத்த மின் வணிக தளத்தை உருவாக்குதலும் பேணுதலும்.

முன்னணி கைவினைப்போருட்களிற்குரிய கடைகள் மற்றும் வியாபார முகவர்களிற்கிடையிலான சந்தை இணைப்புத்திட்டங்ளை நடாத்துதல்.

### 3. பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி

நிபுணத்துவ வளவாளர் குழாத்தின் உதவியுடன் வகைகள் அடிப்படையில் பொருட்கள் மேம்காட்டுத்திட்டங்களை நடாத்துதல்.

கைவினைஞர்களின் தேவைகளிற்கு ஏற்ப நாடு முழுவதும் தரமான பயிற்சிகளை வழங்குதல்.

### 4. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

உள்ளுர் பல்கலைக்கழகங்கள் மற்றும் புகழ்பெற்ற நிறுவனங்களுடன் இணைந்து ஆராய்ச்சிகளை நடாத்துதல்.

நவீன கண்டுபிடிப்பகள்இ புதிய தொழில்நுடபம்இபுதிய இயந்திரங்கள்இ உபகரணங்கள்இகருவிகள் எனபனவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் ' கைவினைத்துறையை மேம்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தல்.

மூலப்பொருட்களின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய அவற்றிற்கு பதிலாக மூலப்பொருட்களை கண்டுபிடிக்க ஆய்வு படிப்புகளை மேற்கொள்ளல்

### 5. வடிவமைப்பு மற்றும் கண்டுபிடிப்பு

பொதியிடல் மற்றும் நினைவுச்சின்னங்களை புதுமைப்படுத்தல்

தொழிற்துறை மற்றும் வடிவமைப்பு கல்வியில் வடிவமைப்பு மையக்கருத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் வெளியிடல்.

### 6. வியாபாரத்திட்டம்

டிப்ளோமாஇ சான்றிதல்இ உயர்மூன்றாம்நிலைஇமூன்றாம்நிலை கல்வித்திட்டங்களை நடாத்துதல் மற்றும் தொழில்சார்இ கல்விசார் பெறுபேறுகளை வழங்குதல்.

தேவைக்கேற்ப கைவினை மற்றும் வடிவமைப்பு துறைலில் குறுகிய கால பயிற்சி நெறிகளை நடாத்துதல்.

# 27

# இலங்கை கைப்பணிகள் சபை (SLHB)

## 27.1 முன்னுரை

லக்சல என்று பிரசித்திப் பெற்றுள்ள இலங்கை கைப்பணிகள் சபை நாடு பூராகவும் அமைந்துள்ள தனது 12 காட்சியறைகளின் மூலம் உள்நாட்டு கைப்பணி படைப்புகளின் விற்பனையை ஊக்குவிப்பதில் ஈடுபட்டுள்ளது. 1964 ஆம் ஆண்டில் லக்சலவின் ஆரம்பம் தொடக்கம் சம்பிரதாய கைப்பணி படைப்பாளிகளின் பொருட்டு அவர்களது உற்பத்திகளை விற்பனை செய்து கொள்ளும் வகையில், இந்த காட்சியறைகளின் வலையமைப்புகள் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அத்தியாவசிய சந்தை தொடர்புகளை ஏற்பாடு செய்கின்றது. அந்தக் காலப்பகுதியில் பெரும்பாலும் காணப்பட்ட சந்தையின் ஏகபோக நிலைமை காரணமாக மூடிய பொருளாதாரத்தின்கீழ் லக்சல நிறுவனம் இலாபம் ஈட்டும் நிறுவனமாக இயங்கியது. 1983 ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் 1982 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவையுடன் இணைந்த

நிறுவனங்களை தாபிக்கும் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுகின்றது. லக்சல, இலங்கை முழுவதும் மனைக் கைத்தொழில்மூலம் வழங்கும் கைப்பணி படைப்புகளை விற்பனை செய்யும் ஒரே சுயநிதியிடல் அரச நிறுவனமாகும்.

தற்போது லக்சல முழுமொத்த தொழில்பாட்டு நடவடிக்கைகளையும், தேசிய கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் முதன்மைபடுத்தியுள்ளது.

மேலும் நேர்வரிசை அமைச்சான கைத்தொழில் அமைச்சிடம் கையளிக்கப்பட்ட பணிகள் மற்றும் கடமைகளின் குறிப்பிடப்பட்ட முதன்மை விடயங்களை கையாளும் வகையிலும், உலகளாவிய புதிய விதிமுறையான 2030 ஆம் ஆண்டில் எய்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற "நிலையான அபிவிருத்தி இலக்குகள்" (ளுனுபு"ள) அடைந்துக்கொள்வதற்கும் ஒழுங்கமைந்து நிறுவனம் வியாபார நடவடிக்கைகளை பராமரிக்கின்றது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்காகக்கொண்டு பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுப் பொருட்களைவ விற்பனை செய்வதன்மூலம் மட்டும் சுய வருமானத்தை ஈட்டிய லக்சல நிறுவனம், கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக சுற்றுலாத் துறையினர்

வருகை தராமையால் அதன் முழுமொத்த விற்பனை புரள்வு 90மூ என்றும் காணாத வகையில் வீழ்ச்சியடைந்துள்ளது.

மேலும் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி, மின்துண்டிப்பு போன்ற காரணங்களால் லக்சல காட்சியறைகள் உள்நாட்டு வாடிக்கையாளர்களிடம் வியாபார நடவடிக்கைகளை பொதுவான வகையில் கொண்டுச்செல்வதற்கு இயலாமையும், அதற்கமைவாக புதிய வியாபார திட்டங்களை உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமையும் போன்ற காரணங்களால் நிறுவனம் பராமரிப்பதற்கு தேவையான அடிப்படை செலவினங்களுக்கு தேவையான வருமானத்தை எனினும் ஈட்டிக்கொள்வதற்கு இயலாத நிலையை எதிர் நோக்கியுள்ளது.

**தொலைநோக்கு**

இலங்கையில் பரிசுகள் மற்றும் நினைவுப் பரிசு பொருட்கள் சந்தையில் முதன்மையாளர் ஆகுதல்.

**செயற்பணி**

பரிசுகள் மற்றும் நினைவுப் பரிசு பொருட்கள் துறையில் வளர்ச்சித் திறனை விரிவுபடுத்துவதோடு, சுற்றுலாக் கைத்தொழிலுக்கு உயர் பெறுமதிகளை சேர்க்கும் பங்களிப்பை வழங்கி, கிராமிய உற்பத்தியாளர்களுக்கு பெரிய அளவிலான சந்தை வாய்ப்புகளுக்கு வசதியளித்து, சமூக பொறுப்புகளை நிறைவேற்றும் வர்த்தக ரீதியாக சாத்தியமான நிறுவனமாதல்.

**இலக்கு**

(அ) இலங்கையில் கைப்பணி தயாரிப்புகளை விரிவாக்கல் மற்றும் அவற்றின் தரத்தினை மேம்படுத்துவதற்க ஊக்குவிப்பளித்தல்.

(ஆ) இலங்கையிலும் வெளிநாட்டிலும் கைப்பணிப் பொருட்களின் விற்பனை மற்றும் விற்பனை ஊக்குவிப்பு

**பிரதான நோக்கம்**

- கிராமிய மக்களிடையே பெறுமதிகளை உருவாக்குதல் மற்றும் பெறுமதிகளை பரிமாற்றம் செய்தல்
- பன்முகப்படுத்தப்பட்ட பரிமாணத்தின்மூலம் சிறந்த வாடிக்கையாளர் தேர்வுக்கான வாய்ப்புகளை வழங்குதல்.
- தரம், நம்பகத்தன்மை மற்றும் தரம், நம்பகத்தன்மை மற்றும் பணத்திற்கான பெறுமதி .
- வாடிக்கையாளர்களை ஆகக்கூடிய மட்டத்தில் திருப்திபடுத்தல

**27.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் வரை)**

**நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்**

| விடயம் | 2022 |
|---|---|
| விற்பனை புரள்வு (ரூபா.மில்) | 204.0 |
| காட்சியறைகளின் உற்பத்திகளை கொள்வனவு செய்தல் (ரூபா.மில்) | 33.3 |
| வழங்குநர்களின் கொடுப்பனவு (ரூபா.மில்) | 41.2 |

மூலம்: இலங்கை கைப்பணி கைத்தொழில் சபை (லக்சல)

**27.3 எதிர்காலத்திட்டங்கள் - 2023**

- வெளிநாட்டு சுற்றுலாத் துறையினர் இந்த நாட்டுக்கு வருகை தராமை காரணமாக இழக்கப்படுகின்ற விற்பனை வருமானத்தை இலக்காகக் கொண்டு, சர்வதேச சந்தைப்படுத்தல் விற்பனைகளில் பங்குபற்றுவதன்மூலம் இலாபம் ஈட்டுதல் (உதா. க்லோபல் விலேஜ், டுபாய் எக்ஸ்போ)

- பயன்பாடற்ற கட்டிடங்களின் இடவசதிகளை பொருத்தமான வியாபார தரப்புகளை தொடர்புபடுத்திக்கொண்டு ஊக்குவிப்பதன்மூலம் மேலதிக வருமானம் ஈட்டுதல்.

- நவீன தொழில்நுட்பத்தினால் இலத்திரனியல் வர்த்தக முறைமைகளை அறிமுகப்படுத்தி விற்பனைகளை ஊக்குவித்தல்.

- பிரபல்யமாகவுள்ள இலத்திரனியல் வர்த்தக குறியீடுகளுடன் தொடர்புபட்டு லக்சல பொருட்களை ஊக்குவித்தல். (உதா - னுயசயணஇ ஐமஅயெ )

- காட்சியறைகளில் பொருட்களை காட்சிப்படுத்தல் மற்றும் வழங்கல் வலையமைப்புகளை பலப்படுத்தி ‘‘ஆக்கப்படைப்புடன் கூடிய புத்தாக்கப் பொருட்களைச்’’ சந்தையில் அறிமுகப்படுத்தல்.

# 28

# தேசிய அருங்கலைப் பேரவை (NCC)

## 28.1 முன்னுரை

தேசிய அருங்கலைகள் பேரவையானது, கைப்பணியில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கு சமூக அந்தஸ்தைப் பெற்றுக்கொடுப்பதுடன், கைப்பணியை வளர்க்கும் நோக்கத்துடன் 1982ம் ஆண்டு 35ம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் அதனோடு இணைந்த சட்டத்தின் ஏற்பாடுகள் மூலம் நிறுவப்பட்டது.

கடந்த சில தசாப்தங்களாக கைப்பணிகளைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதுடன், கைப்பணிக் கலைஞர்களின் நலன்புரிக்காக பல்வேறுபட்ட கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் தேசிய அருங்கலைகள் பேரவை அமுல்படுத்தப்பட்டது.

### தொலைநோக்கு

“மரபு ரீதியான கைப்பணிப்பொருட்களின் நிலையான இருப்புக்காக, அவற்றினைப் போசித்து பேணிப்பாதுகாத்தல்.”

### செயற்பணி

“உள்ளூர் கைப்பணிகள் துறையை மரபு ரீதியாக, கலாச்சார பெறுமானங்களுடன் பேணிப்பாதுகாத்தல், அபிவிருத்தி செய்தல், ஊக்குவித்தல், மேம்படுத்துவதோடு கைப்பணியாளர்களின் சமூக, பொருளாதார அந்தஸ்தினையும் அதிகரித்தல்”

### பிரதான இலக்கு

மொத்த தேசிய உற்பத்திக்கு கைப்பணிக் கைத்தொழிற்துறையினால் செய்யப்படும் பங்களிப்பினை அதிகரித்து கைப்பணிக் கலைஞர்களின் வாழ்க்கை மட்டத்தை மேலுயர்தி மக்களுக்கு மேம்படுத்தப்பட்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு உச்சளவான பங்களிப்பினை வழங்குதல்

### நோக்கம்

1. மொத்த தேசிய உற்பத்திக்கு கைப்பணிக் கைத்தொழிற்துறையினால் செய்யப்படும் பங்களிப்பினை 50மூ வீதத்தினால் அதிகரித்தல்.

2. ஏற்றமதி நோக்குடனா கைப்பணிப் பண்டங்கள சார்ந்த தொழில்முயற்சியாளர்கள் 1000 பேரை உருவாக்கல்.

3. கைப்பணிப் பண்டங்களை ஏற்றுமதி செய்வதன் ஊடாக வெளிநாட்டு அந்நியச் செலவானியை ரூபா மில்லியன் 2000 மாக மேலேயுர்த்தல். மற்றும் இறக்குமதிப் பண்டங்களுக்கான மாற்றுப் பண்டங்களை அறிமுகப்படுத்துவதன் ஊடாக வெளிநாட்டு அந்நியச் செலவாணி ரூபா 5000 மில்லியன் வெளியேறுவதைத் தடுத்தல்

4. கைப்பணி கைத்தொழில் 7500 கலைஞர்கள் மற்றும் பயிலுனர்களுக்கு பயிற்சி வழங்கி, 5000 சுய தொழில் வாய்ப்புகளை உருவாக்கல்.

5. “உள்ளுார் தொழில்முயற்சியாளர்களை பலப்படுத்தல்” என்பதன் கீழ் கைப்பணி கைத்தொழிலாளர்களுக்கு நிதி, சந்தை, பயிற்சி, உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.

6. நிபுணத்துவம் பெற்ற மற்றும் பாரம்பரிய கைப்பணி கைத்தொழில் கலைஞர்களை பாராட்டுதல், ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

## 28.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் வரை)

1. கலைஞர்களுக்கான பயிற்சிக் கருத்திட்டம்
19 மாவட்டங்கள் உள்ளடங்குமாறு கலைஞர்களுக்கு 90 பயிற்சி மத்தியநிலையங்கள் தேசிய கைப்பணி பேரவையின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. இவ்வருடம் இந்த மத்தியநிலையத்தின் ஊடாக 623 முழுநேர பயிலுனர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதுடன் தயாரிப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ள கலைஞர்களின் எண்ணிக்கை 280 ஆகும். (செலவு ரூ.மி.2.9)

2. கலைஞர்களுக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வயதுபோன கலைஞர்கள், அங்கவீன மட்ட கலைஞர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதுடன், அந்த சந்தர்ப்பத்தில் அவர்களினால் கோரப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக (சிகிச்சை, இருதநோய், கண் நோய் மற்றும் விசேட நோய் கிசிச்சை போன்றவை) கலைஞர் நலன்புரி நியதிச்சட்டத்திற்கு அமைவாக பதிலளிப்புகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்த வருடத்தில் 54 கலைஞர்களுக்கு வசதிகள் வழங்கப்பட்டது. ( செலவு ரூ.மில்.: 1.25)

3. கைப்பணிக் கைத்தொழில் கலைஞர்களின் தகவல்களை இற்றைப்படுத்துதல் மற்றும் கணணி தரவுத்தளத்தை நிறுவுதல்

கைப்பணி கைத்தொழில் கலைஞர்களுக்கு தேசிய கைப்பணி பேரவை பதிவினைப் பெற்றுத் தருவதற்காக விண்ணப்பங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது (செலவு ரூ.மில் 0.52) இதன் போது

- கைப்பணி கைத்தொழில் 17344 கலைஞர்கள் பதிவுசெய்துள்ளனர் (புழழபடந கழசஅ - 1260+474)
- புதிய 5221 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளது.
- மொத்த கலைஞ்களின் எண்ணிக்கை 20666

4. “லக் சில்ப சிலோன் ஹன்டிகிராப்ட்” எனும் ஏற்றமதியை நோக்காக் கொண்ட நிர்மாணிப்பு போட்டி.: தயாரிப்பு மற்றும் வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

கைப்பணி கைத்தொழில் சார்ந்த நிர்மாணிப்புகளில் ஈடுபடும் கைத்தொழிலாளர்கள் ஏற்றுமதி சந்தையை

நோக்காக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கிராமிய கைத்தொழிலாளர்கள் ∴ தொழில்முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன் கிராம கைத்தொழில் பிரிவின் ஊடாக வெளிநாட்டு அந்நியச் செலவாணி நாட்டினுள் உட்பிரவேசிப்பதற்கும் கைத்தொழில் பிரிவாக ஏற்றுமதி காலச்சாரத்தினுள் கிராம கைத்தொழிலின் பங்களிப்பினை மேம்படுத்தி தொழில்முயற்சிகளுக்கு மற்றும் நிர்மாணிப்பு திறனுள்ளவர்களுக்கு புதிய தொழில்வாய்ப்பினை உருவாக்குதலை இந்த கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (செலவு ரூ.மில் 0.6)

## 28.3 எதிர்காலத்திட்டங்கள் - 2023

- கிராம கைத்தொழில் சார்ந்த ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட தயாரிப்புகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துதல்.
- தயாரிப்பினை விற்பனை செய்வதற்கு மின்னிலத்திரனியல் விற்பனை (நு-ஊழஅஅநசஉந) முறைமைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் உள்ளூர் வெளிநாட்டு விற்பனையை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- கைத்தொழில் கைத்தொழில் சார்நத இறக்குமதிப் பண்டங்களுக்கு பதிலீட்டுப் பண்டங்களை நிர்மாணிப்பதை ஊக்குவித்தல்.

# 29

# லங்கா சலுசல லிமிடட் (LSL)

## 29.1 முன்னுரை

இலங்கை அரசாங்கத்தின் வர்த்தக (புடவை) கூட்டுத்தாபனமாக 01 ஒக்டோபர் 1967ஆம் திகதி நிறுவப்பட்ட சலுசலவின் பிரதான நோக்கமானது, உள்ளூர் புடவைகள் மற்றும் சார்ந்த பண்டங்கள் விநியோகத்தில் முன்னணியாளர்களாக விளங்குவதற்கு உள்ளூர் பண்டங்களை ஊக்குவித்தல் மற்றும் இலங்கை புடவைக் கைத்தொழிற்துறையில் ஈடுபட்டிருக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு உதவுதலாகும். பாரியளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு உயர் நிலையை அடைவதற்கு முழுமையான ஆதரவினை வழங்குவதுடன் அரசாங்கத்துறைக்கான துணிகள், புடவைகள் மற்றும் சார்ந்த தேவைகளுக்கான ஏக வழங்குனராக இருத்தல்.

அதனுடைய வியாபார செயற்பாடுகளை மேலும் விஸ்தரிப்பதற்காக லங்கா சலுவல லிமிடட்

28.11.1991ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதற்கமைவாக. இலங்கை அரச வணிகத்தின் (புடவைக் கூட்டுத்தாபனம்) சொத்துகள், பொறுப்புகள் மற்றும் வியாபார தொழிற்பாடுகள், 1987ஆம் ஆண்டு 23ஆம் இலக்க அரச கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்திற்குரிய வியாபாரத் தொழில்முயற்சிகளை அரச கம்பனியாக மாற்றும் வர்த்தமானி அறிவித்தல் 21.12.1991ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

லங்கா சலுசல கம்பனி லிமிடட் நிறுவனத்திற்கான கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக தலைவரை உள்ளடக்கிய பணிப்பாளர் சபை திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளது.

**தொலைநோக்கு**

அரச துறை மற்றும் தனியார்துறையின் துணிகள் மற்றும் புடவைத் தேவைகளை வழங்கும் உச்ச அமைப்பாக இருத்தல் மற்றும் நுகரவோர் சந்தையில் மிகவும் நம்பிக்கைக்குரிய வணிக நாமத்தைக் கொண்டிருத்தல்

**செயற்பணி**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நவீன விற்பனை நிலையங்களின் வலையமைப்புகள் மூலம் நவீன உயர்தர கைத்தறி ஆடைகள்இ மற்றும் பத்திக் உற்பத்திகளை போட்டி விலையில் திறமையாகவும் வினைத்திறனுடனும் விற்பனை செய்வதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நுகர்வோர் சமுகத்திற்கு திருப்தியை வழங்குதல்.ஓர் பொறிமுறையை உருவாக்குதல்.

**குறிக்கோள்கள்**

1. .உள்ளுர் தயாரிப்பாளர்களுக்கு சந்தர்ப்பத்தை உருவாக்கும் உள்ளுர் கைத்தறி, பத்திக் மற்றும் ஆடைகளுக்கான சந்தை வாய்ப்புகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் கிராமியப் பொருளாதார மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித்துறை அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்.
2. தனியார்துறையுடன் இணைந்து தொழிற்சாலைகளைத் திறப்பதன் மூலம் பாரியளவிலான உள்ளுர் தயாரிப்புகளை நிறுவுவதற்கு ஊக்குவிப்பதன் ஊடாக அரசாங்கம் சீருடைகள் மற்றும் ஏனைய துணித் தேவைகளுக்குச் செலவளிக்கும் பணத்தை சேகரித்தல்.
3. அரசதுறை நிறுவனங்களுக்கான (டீ2பு) துணி, புடவை மற்றும் சார்ந்த தேவைகள் அனைத்துக்கும் ஏக விநியோகத்தராக உருவாதல்.
4. உற்பத்தியாளர்கள்இ வழங்குநர்கள்இ சிறுகைத்தொழில் முயற்சியாளர்கள் என்போருக்கு நம்பிக்கைக்குரிய பங்காளராக இருத்தல்.
5. தாங்கிக்கொள்ளக்கூடிய விலையில் தரமான துணிகளை வழங்குவதன் ஊடாக உள்ளுர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் உள்ள நுகர்வோருக்கு மிக நம்பிக்கையுள்ள பிராண்டாக கைவினைஞர்கள், சிறிய மற்றும் நடுத்தரத்துறை தயாரிப்பாளர்கள் மற்றும் வழங்குனர்களுக்கு மிக நம்பிக்கையுள்ள பங்குதாரராதல்.
6. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்தைகளை நிலைநிறுத்தவும் மேம்படுத்தவும் புடவை, ஆடை மற்றும் பத்திக் கைத்தறிக் கைத்தொழிற்துறையினை ஒழுங்குபடுத்துவதில் தலைமையை ஏற்றல்.
7. அரசாங்கத்துறையின் மூலதன செலவழிப்பை இல்லாதொழிப்பதற்கு கூட்டுத்தொழில் மற்றும் பங்குதாரர் முறைகளில் நுழைவதன் மூலம் மாற்றத்தைக் கொண்டுவருதல்.
8. நாட்டின் டொலர் ஒதுக்கினை அதிகரிப்பதற்கு ஏற்றுமதி வருமானத்தை மேம்படுத்துவதற்கு இலங்கையில் தயாரிக்கப்பட்ட பத்திக் கைத்தறி மற்றும் ஆடைகளை பிராந்திய மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் ஊக்குவித்தல்.

## 29.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் வரை)

**வருமானக்கூற்று**
**2022 ஜனவரி 01 இருந்து செப்டெம்பர் 30 வரை)**
**ரூபா**

| | | | |
|---|---|---|---|
| 1 | புரள்வு | | 47,106,270.41 |
| | **கழி** | | |
| 2 | விற்பனை ஆகுசெலவு | | (32,974,389.29) |
| | **மொத்த இலாபம்** | | 14,131,881.12 |
| | | | |
| 3 | ஏனைய வருமானம் | 1,077,200.00 | |
| | வாடகை வருமானம் | 2,000,000.00 | 3,077,200.00 |
| | | | 17,209,081.12 |
| | **கழி: செலவுகள்** | | |
| 4 | விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | (676,646.81) | |
| 5 | நிர்வாகச் செலவுகள் | (8,125,300.00) | |
| | நிதிச் செலவு | (10,375.00) | (8,812,321.81) |
| | **தேறிய இலாபம்** | | **8,396,759.31** |

மூலம்: லங்கா சலுசல

குறிப்பு: கடந்த ஆண்டு வரை சம்பளங்களைக் கொடுப்பனவு செய்வதற்கு லங்கா சலுசல லிமிடட் திறைசேரியிலேயே தங்கியிருந்தது, எனினும் 2021 ஜுன் மாதத்திலிருந்து, தற்போதைய தலைவரின் வழிகாட்டலுக்கு அமைவாக, நிறுவனத்தினால் சுயமாக நிதியளிக்கவும் மற்றும் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யவும் இயலுமானது

எனினும், சலுசலவை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு அவசியமான தற்போது எஞ்சியுள்ள செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு மூலதன உந்துதல் அவசியமாகின்றது.

அத்துடன், சபை மற்றும் தலைவரின் அர்ப்பணிப்பு மற்றும் சலுசல நிறுவன ஊழியர்களின் கடும் உழைப்பினால் இந்த அடைவு சாத்தியமானது.

அதனுடைய தொழிற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு இயலுமாக்குவதற்கு திறைசேரியில் தங்கியிருக்கும் மற்றும் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் பட்டியலில் இருந்து லங்கா சலுசலவை நீக்குதல் தற்போது அவசியமாகும்.

## 29.3 எதிர்காலத்திட்டங்கள் - 2023

1. தொழிற்பாடுகளை நிறுத்தியுள்ள கலகெதர சலுசல உற்பத்தி நிலையத்தை புடவைத் திணைக்களத்துடன் இணைத்து மீளத்திறத்தல்.
2. சலுசல சொத்துக்களை மீளக் கைக்கொள்ளல் - முல்லேரியா ’ தலங்கம ’ இரத்தினபுரி ’ அம்பாறை ’ பேருவல
3. உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் உள்ள வாடிக்கையாளர்களின் வசதிக்காக ஈ-வணிக வசதியுள்ள வெப்தளத்தை நிறுவுதல்.
4. ஜாவத்தை காட்சியறையை மீளத்திறத்தல் மற்றும் நுகேகொட காட்சியறையை சீரமைத்தல்.
5. புதிய வடிவமைப்புகளை விளம்பரப்படுத்தவும் மற்றும் சந்தையில் உச்சநிலையில் சலுசலவை நிறுத்தவும்
6. 100 சாரிக் கருத்திட்டங்களை தேசிய வடிவமைப்பு நிலையத்துடன் இணைந்து செயற்படுத்தல்.
7. உயர் தரத்திலான சாரிக் கண்காட்சிகள் மற்றும் விற்பனைக் கூடங்கள் - கண்டி, டீஆஐஊர்இ டீயுமுளுயுடுயுஇ கொழும்பு சிட்டி சென்டர்.
8. சலுசலவினால் சரியான முறையில் தயாரிக்கப்பட்ட அட்டபிரிக்கரவை அறிமுகப்படுத்தல்
9. அரசாங்க நிறுவனத்திற்கான துணிகளை வழங்கல் - உதா: முப்படைகள், புத்தசாசன
10. வெளிநாட்டு உரிமையாளர் கூடங்கள் -இந்தியா – முடிக்கப்பட்டது, ரோம், பாரிஸ், மொஸ்கோ – 2022. ஐ.அமெரிக்கா, கனடா, ஜப்பான் - 2023
11. சலுசலவின் முழுமையான சீராக்கத் திட்டத்திற்கான அபிவிருத்தித் திட்டம் தற்போது செயற்படுத்தப்படுகின்றது.
12. வரவிருக்கும் ஏறாவூர் புடவை வர்த்தக வலையத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் தனியார்துறை பங்களிப்புடன் 20,000 ஏக்கர் பருத்தி வளர்ப்பு கருத்திட்டம்.
13. ஹோட்டல் துறையை இலக்காகக் கொண்டு லங்கா சலுசலவின் கீழ் உள்ளக வடிவமைப்புகளை வழங்கும் பிரிவை அபிவிருத்தி செய்தல்.
14. பிரபலமான பெண் வல்லுனா்களின் அனுசரணையுடன் சலுசலாவின் சமுக வலைத்தளங்களை ஆரம்பித்தல்

# 30

# தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை (ngja)

## 30.1 முன்னுரை

1993 ஆம் ஆண்டு 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை சட்டத்தின் ஊடாக இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலின் அபிவிருத்திக்காக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை நிறுவப்பட்டது. அதன்படி, இரத்தினக்கல் படிவுகள் மற்றும் இரத்தினக்கல் சுரங்கங்களை அடையாளம் காணுதல், ஆபரண விற்பனை, இரத்தினக்கற்களின் பெறுமதியைக் கூட்டுதல் மற்றும் மதிப்பீட்டு வசதியை வழங்கல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், ஆராய்ச்சி சேவை, தர சீல் வைத்தல்கள் ஆபரங்களில் முத்திரையிடுதல், ஏற்றமதி மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளின் ஊடாக விற்பனை ஊக்குவிப்பு பணிகள் என்பன மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன், இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழில் ஈடுபட்டுள்ள மற்றும் அதில் ஆர்வமுள்ள அனைவருக்கும் ஊக்குவிப்பு அளித்தல், வசதிகள் வழங்கல், அதற்குரிய அறிவினை மேம்படுத்துவதற்கான வியாபார மேம்படுத்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபடும். தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் வியாபார வடிவமானது, சுயமாக எழும் சுய நிதியை நிலையாகக் கொண்ட மற்றும் அரசின் உள் நிலைபேற்றினை உடைய அதிகாரசபை எனும் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டதாகும்.

### தொலைநோக்கு

இலங்கையை உலகத்தின் நீல மாணிக்கத் தலைநகராக நிறுவுதல்

### செயற்பணி

தேசிய சொத்து மற்றும் கைத்தொழிலின் பங்குதாரர்களின் பாரட்டைப் பெறுவதற்காக இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் சட்ட ரீதியாக மாற்றிதல் என்பவற்றின் ஊடாக கைத்தொழிற்துறையின் சிறப்பினை அடைதல்.

### பிரதான இலக்கு

- இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியின் பெறுமதியை அமெரிக்க டொலர் 1.6 பில்லியன் வரை அதிகரித்தல்.
- பொது இரத்தினக்கல் சுரங்கங்களை அகழ்தல் மற்றும் வியாபாரத்திற்கான முறைமையை அபிவிருத்தி செய்தல
- சர்வதேச தரத்திற்கு இணங்கும் வகையில் தங்கத்தின் அளவினை சான்றுபடுத்துவதற்கு முறையொன்றை நிர்மாணித்தல்.
- இரத்தினக்கல்லைப் பரீட்சித்தல் மற்றும் சான்றுபடுத்தல் என்பவற்றுக்கு வலுவான முறையொன்றை அறிமுகப்படுத்தல்.
- இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழிலை தர நிலைக்கு கொண்டு வருதல்.
- நட்சத்திர தரமுள்ள நிறுவனத்தை உருவாக்குவதை உறுதி செய்தல்.

## 30.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் வரை

**நிதி முன்னேற்றம்**

| விபரம் | முன்னேற்றம் |
|---|---|
| வருமானம் | 546.9 |
| செலவு | 331.9 |
| வரிக்கு முன்னரான மொத்த இலாபம் | 215.0 |

**வருமானம்**

| விபரம் | வருமானம் (ரூ.மில்) |
|---|---|
| ஏற்றுமதி வருமானம் | 194.16 |
| இரத்தினக்கல் சுரங்க அனுமதிப்பத்திரம் | 30.10 |
| வியாபார அனுமதிப்பத்திரம் | 50.62 |
| இரத்தினக்கல்லை தீட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் | 0.21 |
| இரத்தினக்கல் ஏல அனுமதிப்பத்திரம் | 1.02 |
| சோதனைகள் | 6.63 |
| காணி ஏலம் | 38.27 |
| இராசாயனப் பரிசோதனை | 15.12 |
| இரசாயன ஆய்வுகூடம் | 6.34 |

| அனுமதிப்பத்திர வகை | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| இரத்தினக்கல் சுரங்க அனுமதிப்பத்திரம | 3648 | 4,295 |
| வியாபார அனுமதிப்பத்திரம் | 4912 | 4,550 |
| இரத்தினக்கல்லை தீட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் | 125 | 215 |
| இரத்தினக்கல் ஏல அனுமதிப்பத்திரம் | 467 | 485 |
| சோதனைகள் | 524 | 585 |

| மொத்த ஏற்றுமதி (அ.டொ.மி) | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| ஏற்றுமதி | 132 | 350 |
| ஆபரணம் | 9 | 28 |
| வைர ஏற்றுமதி | 144 | 170 |
| கரடுமுரடான ஏற்றுமதி (இரத்தினக்கல்) | 3.40 | 5.67 |
| வைரம் பதித்த நகைகள் | 1.21 | 5.67 |
| ගෙවුඩ/ගෙවුඩ කට්ට | 0.05 | 0.01 |
| மொத்த ஏற்றுமதி | 290 | 560 |

## அபிவிருத்திக் கருத்திட்டம்

**இரத்தினக்கல் சர்வதேச இரத்தினக்கல் கோபுரத்தை நிர்மாணித்தல்**

- இந்த நிர்மாணிப்பு இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படுவதுடன், 1வது கட்டத்தில் 5 மாடிக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் பணிகளுக்கு நிலைக்கல் வைத்தல் 15.01.2021ஆம் திகதி நடைபெற்றது.

- 2022 ஜுன் மாதமளவில் முதலாவது கட்டத்தை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், தற்போது நாட்டில் நிலவும் சூழல் காரணமாக கருத்திட்டத்தின் 80மூ வீதம் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

- 2023 ஜுன் மாதமளவில் கருத்திட்டத்தின் முதலாவது கட்டத்தை பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

**இரத்தினக்கல் சர்வதேச இரத்தினக்கல் கோபுரத்தை நிர்மாணித்தல்**



## 30.3 எதிர்காலத்திட்டங்கள் - 2023

- தேசிய இரத்தினக்கல் மற்றும் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண மதிப்பீடு மற்றும் சோதனை நடவடிக்கைகளை சர்வதேச மட்டத்திற்கு தரமுயர்த்தல்.

- அனைத்து தனியார் ஆய்வுகூட பதிவுக்கான சட்டத்தை செயற்படுத்தி ஆய்வுகூட பதிவிற்கு வருடாந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொடுத்தல்.

- அனைத்து ஊழியர்களையும் நவீன தொழில்நுட்பம் மற்றும் மென் திறன்களில் வலுவூட்டுதல்.

- கொழும்பு பிரதான காரியாலயக் கட்டிடத்தின் நிர்மாணிப்பு

- இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழிற்துறைக்கு இளைஞர்களைக் கவர்வதற்கு நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தல்.

- சர்வதேச கண்காட்சிகளின் போது இலங்கை கூடத்தை ஒழுங்கு செய்தல்.

- சர்வதேச இரத்தினக்கல் ஏலத்தினை (ஐவெநசயெவழையெட புநஅள யுரஉவழைளெ) இலங்கையில் நடாத்துதல்.

- மேற்குறிப்பிட்ட ஏற்றுமதி இலக்கினை அடைவாற்காக தற்போதுள்ள சந்தையை விரிவுபடுத்துவதல் புதிய சந்தைகளுக்கு நுழைதல்.

- ஆபரண மற்றும் வெள்ளி தயாரிப்புகளில் ஈடுபட்டள்ள கைத்தொழிற்துறையினரை மேம்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்றை

தயாரித்தல் மற்றும் ஆபரண கிராமமொன்றை உருவாக்கல் (காலி, கண்டி, வாபட,

- சியம்பலாபிட்டிய, ஹிக்கடுவ)

- தங்க இறக்குமதிக்கான 15மூ வீத வரியினை அகற்றவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிற்துறைக்கு உரிய அனைத்து சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் வழங்குவதற்கு மத்திய அளவிலான வியாபாரிகளுக்கான வாடிக்கையாளர்களைக் கவர்வதற்கு சர்வதேச இரத்தினக்கல் மத்தியநிலையைத்தை நிர்மாணிக்கும் பணிகளை நிறைவுசெய்தல்.

- பொது சுரங்கத்தின் மேல் உள்ள மண் பகுதியை அகற்றுவதற்கு சிறிய பக்கோ இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு அனுமதியை வழங்கல் மற்றும் நியாயமான கட்டண முறையொன்றை தயாரித்தல்.

- மஹாவலி காணி சார்ந்த பிரபல்யமான இரத்தினக்கல் ஏலத்தை நடாத்துதல்.

- சந்தை ஆய்வினை நடாத்துவதன் ஊடாக சம்பிரதான தயாரிப்பு கிராமங்களை அடையாளம் கண்டு அதற்கு தொழில்நுட்ப பயிற்சி செயலமர்வை நடாத்துதல்.

- எகலியகொட, பெலியத்த, மரதான, ஹுனுபிட்டி மற்றும் அலுத்கம எனும் இடங்களுக்கு அருகில் புதிய பயிற்சி மத்திய நிலையங்களை நிறுவுதல்.

- சோதனை செயலமர்வுகளை நடாத்துதல்.

- பயிற்சி பாடநெறி தொடர்பான பிரச்சார நடவடிக்கைகயை மேற்கொள்ளல்.

- ஏற்றுமதி அபிவிருத்தி சபை, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை மற்றும் வெளிநாட்டு சேவை பணியம் என்பவற்றுடன் இணைந்து தயாரிப்புகளை ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு தொழிலுக்கு அனுப்புவதற்கு அவசியமான பயிற்சி நடடிக்கைகளை மேற்கொள்ளல்.

- கிரந்த மற்றும் கைநூல்களை அச்சிடுதல்.

- ISO 17025 வின் கீழ் ஆய்வுகூட பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

- தகவல் முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்தல்.

# 31

# கற்கள் மற்றும் நகை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (GJRTI)

## 31.1. முன்னுரை

இரத்தினக்கல், ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் 1950 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 25 (1) ஆம் பிரிவின்படி இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழிற்துறையை நிர்வகித்தல், மேம்படுத்தல் அபிவிருத்தியின் பொருட்டு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி வசதிகளை ஏற்பாடு செய்யும் குறிக்கோளுடன் இந்நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது.

### தொலைநோக்கு

“இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழிலின் மேம்பாடு மற்றும் அபிவிருத்திக்கு ஏற்புடையதான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு பிராந்தியத்தில் மிகச் சிறந்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மத்திய நிலையமாக விளங்குதல்”

### செயற்பணி

“இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழிலை மிகவும் போட்டி ரீதியிலான திறன்களை வளர்ப்பதன் ஊடாக எமது வாடிக்கையாளர்ளுக்கு உச்சமட்ட சேவையை வழங்குவதற்குரிய புதிய இரத்தினக்கல் படிமங்களை இனங்காண்பதற்கான ஆய்வு நடவடிக்கைகள், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழிலின் மேம்பாட்டுக்கான புத்தாக்கங்களை உருவாக்குதல் மற்றும் அவற்றின் பெறுமதியை அதிகரிக்கச் செய்வதற்கு ஏற்புடையதான கலைநுணுக்க மற்றும் தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்கள் நிறைந்த ஊழியர்களை உருவாக்குதல் அத்துடன் கைத்தொழிலுக்கு ஏற்புடையதான செயலமர்வுகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சி நூல்களை வெளியிடுதல் எமது செயற்பணியாகும்.”

## 31.2 முன்னேற்றம் (2022 செப்டெம்பர் வரை)

### 1. இலங்கையில் இரத்தினக்கல் படிமங்களை ஆய்வுசெய்து கண்டுபிடித்தல் மற்றும் மதிப்பிடுதல் கருத்திட்டம்

நியாகம மற்றும் கிரியெல்ல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு ஏற்புடைய ஆரம்ப இரத்தினக்கல் சாத்தியத்தன்மை வரைபடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று தவலம பிரதேச செயலாளர் பிரிவுக்கு ஏற்புடையதாக முன்னோடி சுரங்க அகழ்வு கருத்திட்டம் ஒன்றுக்காக தகுந்த காணிகள் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதோடு, எஹலியகொட மற்றும் பெல்மடுல்ல பிரதேச

செயலாளர் பிரிவுகளைத் தழுவியதாகவும் இதற்கு சமமானதொரு வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக இலங்கை நில அளவையாளர் திணைக்கத்துடன் சேர்ந்து மேற்படி இரத்தினக்கல் சாத்தியத்தன்மை வரைபடங்களை அங்கீகரிக்கப்பட்ட செயன்முறையொன்றின் ஊடாக தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

### 2. இரத்தினக்கல் தன்மை குறைந்த கனிப்பொருள்களுக்கு பெறுமதியை அதிகரிக்கச் செய்வதற்கான புதிய தொழில்நுட்ப முறையியல்களை அடையாளம்காணல்.

இரசாயனப் பகுப்பாய்வு நடவடிக்கைகள், பல்வேறு நிலைமைகளின் கீழ் பரிகாரக் கற்கைகளின் ஊடாக ஆபிரிக்க ரங்சனைற் மற்றும் யங் கெவுடாக்களை பெறுமதி அதிகரிக்கச் செய்வதற்காக மின் வெப்பப் பரிகாரத்தில் மிகச் சிறந்த நிலைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு, கடும் வர்ணத்தைக் கொண்ட கிரிஞ்சிகளுக்கு தெளிவுத் தன்மையை அதிகரிக்கச் செய்கின்ற வெப்பப் பரிகார ஆராய்ச்சிகளில் குறிப்பிடத்தக்களவு வெற்றிகரமான பெறுபேறுகள் பெறப்பட்டுள்ளன.

